புரட்டாதி – 2014
பக்கங்கள் : 24
ரூ.30.00

# இது நம்தேசம்

"Registered in the department of posts of Sri Lanka under No. QD/173/News/2014"

பார்வை 01 வியூகம் 20



## இந்திய பயணம் எதற்கு? ஐ.நா விசாரணையை பலவீனப்படுத்தவா?

மாகாண சபை முறையை அம்பலப்படுத்திய உயர்நீதிமன்ற தீர்ப்பு 05

சுப்பிரமணிய சுவாமியின் வருகையும் இந்தியாவின் புதிய நகர்வுகளும் 08

தமிழ் மக்களுக்கென வெளிநாட்டுக் கொள்கை அவசியம் 12

14 தேசியம் இனமான உணர்ச்சியா?

தேசத்தின் உண்மைக் குரல்

# ஐ.நா மனித உரிமைகள் பேரவை விசாரணைக்குழுவின் விசாரணைப்பரப்பு அதிகரிக்கப்பட்டமை தமிழ் மக்களுக்கு சாதகமானதா?



ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் இணையத்தளத்தில் ஆகஸ்ட் 1ம் திகதி வெளியிடப்பட்ட அறிவிப்பு மூலம் இவ்விசாரணைப்பரப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒன்று முன்னர் போர்க்காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் மட்டும் விசாரணை செய்யப்படும் என்ற நிலை மாற்றப்பட்டு போருக்கு பின்னரான காலப்பகுதி நிகழ்வுகளும் விசாரணை செய்யப்படும் என கூறப்பட்டுள்ளது. ஏறத்தாழ 10 வருட நிகழ்வு விசாரணை செய்யப்படும் சாத்தியம் உள்ளது. இதன் மூலம் போருக்கு பின்னர் அரசாங்கம் மேற்கொண்டு வரும் பச்சை ஆக்கிரமிப்புக்களை விசாரணை செய்யும் சூழ்நிலை உருவாகியுள்ளது. காணாமல் போனோர் விவகாரமும் கவனத்தில் எடுக்கப்படும் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

இரண்டாவது மனித உரிமை மீறல்கள் குறித்த காலப்பகுதிக்கு முன்னரோ, பின்னரோ இடம்பெற்றிருந்தாலும் அவை கருத்தில் கொள்ளப்படும் என்ற மாற்றமாகும். இதன் மூலம் போருக்கு முன்னர் இருந்த காலப்பகுதி பற்றியும் தற்போதுள்ள காலப்பகுதி பற்றியும் விசாரணை செய்யும் சாத்தியம் உருவாகியுள்ளது.

அரசாங்கம் சர்வதேசத்தின் கரிசனைகளில் அக்கறை செலுத்தாது மனித உரிமை மீறல்களை அப்பட்டமாக மேற்கொள்வதே இந்த மாற்றங்களுக்கு காரணமாக இருக்கலாம். இதைவிட சர்வதேச ஆதிக்க சக்திகளின் நோக்கம் ஆட்சி மாற்றத்தை கொண்டு வருவதே. இதற்கு தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் மட்டும் போதாது. அதனை மட்டும் விசாரணை செய்தால் அரசாங்கம் அவற்றை தமக்கு சாதகமாக மாற்றும். தனது ஆதரவு அனைத்தையும் அதிகரித்துக்கொள்ளும். போருக்குப்பின்னர் அரசாங்கம் சிங்கள மக்கள் மத்தியிலும் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளது. இந்த மனித உரிமை மீறல்களையும் விசாரணை செய்யும் போது அரசாங்கத்திற்கான சிங்கள மக்களின் ஆதரவுத்தளத்திலும் சரிவு ஏற்படும். விசாரணைச் செயற்பாட்டிற்கு ஒரு பன்மைத்துவ பண்பும் கிடைத்துவிடும். இவை ஆட்சி மாற்றத்தை துரிதப்படுத்தும் என அவை நினைப்பது போல தெரிகின்றது. எந்த வகையிலும் விசாரணையின் இலக்கு இலங்கை அரசாக இருக்கக்கூடாது என்பதில் சர்வதேச ஆதிக்க சக்திகள் மிகவும் கவனமாக இருக்கின்றன. அவர்களது இலக்கு எல்லாம் மகிந்தர் அரசாங்கமே.

நரேந்திரமோடி அரசாங்கம் மகிந்தர் அரசாங்கத்தை காப்பாற்ற முனைவதால் அதனைத் தடுப்பதும் ஒரு நோக்கமாக இருக்கலாம். இந்திய - சீன உறவு வலுவடைந்து வருவதைத் தொடர்ந்து தென்னாசியப் பிராந்தியத்தை அணுகுதல் என்கின்ற மூலோபாயத்திலும் மாற்றங்களைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் சர்வதேச ஆதிக்க சக்திகளுக்கு தலைமை தாங்கும் அமெரிக்கா இருக்கின்றது. இனி வருங்காலத்தில் அமெரிக்காவைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கலாம்.

எது எப்படியிருப்பினும் தமிழ்த்தரப்பு இச்சந்தர்ப்பத்தை உச்ச வகையில் பயன்படுத்த தவறக்கூடாது. போர்க்கால தகவல்களுக்கான சாட்சியங்களுக்கு ஒழுங்கு செய்வதுமல்லாமல் அண்மைக்காலமாக இடம்பெறுகின்ற பச்சை ஆக்கிரமிப்புகளுக்கான சாட்சியங்களையும் ஆவணங்கள் மூலம் வழங்க வேண்டும். விசாரணைக்குழு இச் சாட்சியங்கள், ஆவணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காவிட்டாலும் அவை சர்வதேசப்பதிவுகளாக இருக்கும் இப்பதிவுகள் சர்வதேச மட்டத்தில் தமிழர் விவகாரத்தை பேசு பொருளாக்குவதற்கு பெரிதும் உதவும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இது தொடர்பாக வலுவான வேலைத்திட்டங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கான பொறுப்பை அரசியல் தலைமைகளிடம் மட்டும் விட்டுவிடுவது பொருத்தமானதல்ல. சிவில் நிறுவனங்கள், அரசுசாரா அமைப்புக்கள் இணைந்து கூட்டாக பொறுப்பெடுக்க வேண்டும். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மின்னஞ்சல் மூலமாகவும் ஸ்கைப் மூலமாகவும் சாட்சியங்களை வழங்க உதவுவதாகக் கூறியுள்ளது. எவ்வாறாவது பச்சை ஆக்கிரமிப்புகள் தொடர்பாக பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால் தொல்பொருள் பதிவுகளில் தான் தமிழர்களைத் தேட வேண்டியகாலம் உருவாகும். செவ்விந்தியர்கள் அமெரிக்காவில் வசித்தார்கள் என அமெரிக்காவின் தற்போதைய வரலாற்று நூல்கள் கூறுவது போல இலங்கையிலும் தமிழர்கள் வசித்தார்கள் என சிங்கள வரலாற்று நூல்கள் எதிர்காலத்தில் கூறக்கூடும்.

## சோரம் போன மலையகக் கட்சிகள்

ஊவா மாகாணசபைத் தேர்தல் விரைவில் இடம்பெற இருக்கின்றது. இத்தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையகமக்கள் முன்னணி, தொழிலாளர் தேசியச் சங்கம் ஆகிய மலையகத்தின் பிரதானகட்சிகள் அரசாங்ககட்சியுடன் இணைந்து அதன் வெற்றிலைச் சின்னத்திலேயே போட்டியிடுகின்றன. பிரதானகட்சிகள் அனைத்தும் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் போது மலையகத்தின் சார்பில் வலிமையான பேரம் பேசுதலை மேற்கொண்டிருக்கலாம். அதுவும் இந்தத் தடவை கடுமையான போட்டி நிலவலாம் எதிர்பார்க்கப்பட்ட சூழலில் எந்தவித நிபந்தனையுமின்றி மலையககட்சிகள் அரசாங்கக்கட்சிக்கு ஆதரவளிக்க முற்பட்டுள்ளன.

தமிழ்க்கல்வி அமைச்சு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, முழுமையான ஊதியத்தில் ஆசிரியநியமனம், உள்ளூராட்சிச் சபைகளின் சேவைகள் மலையகத்திற்கு கிடைக்கப்பெறல், மலையகத்திற்கான புதிய பிரதேச சபைகளை உருவாக்குதல் மலையகமக்களிற்கு காணிகளை சொந்தமாக்குதல், மலையகத்தில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல் மலையகத்தில் தமிழ் மொழியின் உபயோகம் என்பவற்றை நிபந்தனைகளாக வைத்து ஒப்பந்தம் செய்தபின் ஆதரவளித்திருக்கலாம்.

இவை எதுவும் இல்லாமல் வெற்றுக் காசோலையில் கையொப்பம் வைத்துக் கொடுக்கின்றனர்.

இவர்களுக்கு இந்த உரிமையைக் கொடுத்தது யார்?

## மலையக இளைஞர்கள் யுவதிகள் 3ம் தரப்பிரஜைகளா?

க.பொ.த உயர்தர தகைமையுடன் ஆசிரிய சேவைக்கு ஆட்களைச் சேர்க்கும் போது 17000ரூபா சம்பளத்துடன் சேர்ப்பதே வழக்கமானதாகும். ஆனால் மலையகத்தில் மட்டும் 6000ரூபா சம்பளத்தில் சேர்க்கப்படவுள்ளனர். போட்டிப்பரீட்சை மூலம் இந் நியமனங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. 2007ம் ஆண்டு இந்த அடிப்படையிலேயே 3179 இளைஞர் யுவதிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டது. அக் காலத்திற்கேற்ப ஆரம்ப கொடுப்பனவாக 13000 வரை வழங்கப்பட்டது.

இதைவிட இவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் ஐந்து வருடங்களின் பின்னர் தான் நிரந்தரநியமனம் பெறுபவர்கள் என கூறப்படுகின்றது. ஆறுமாதத்திற்குள் நிரந்தரநியமனம் வழங்கப்படுவதே வழமையாகும். மலையக இளைஞர் யுவதிகளுக்கு மட்டும் இதில் பாரபட்சம் காட்டப்படுகின்றது.

இந்த மாதந்த வேதனம் 6000ரூபா அவர்களது உடைகளுக்கும் போக்குவரத்து செலவுகளுக்குமே போதுமானதல்ல. இந்நிலையில் உணவுச்செலவுக்கு இவர்கள் எங்கேபோவது?

குறைந்தவேதனம் வழங்கப்பட்டால் நியமனம் பெறுபவர்கள் ஆசிரியர் வேலையுடன் வேறு வேலைகளையும் செய்ய முயற்சிப்பர். இதனால் மாணவர் மீதான அவர்களின் கவனம் குறைந்து மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும். மலையக அரசியல் தலைமைகள் இது பற்றி அக்கறை இல்லாமல் இருப்பது கவலைக்குரியது.

## தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

**- வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன்**



அனுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் வடமாகாணசபை அமர்வில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த தமிழ் அரசியல் கைதிகளில் 53 பேர் அனுராதபுரச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 3 தமிழ் அரசியல் கைதிகள் தமிழர்கள் உள்ள சிறைக்கூடத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். இம்மூவரும் அங்குவைத்து உடல், உள ரீதியில் துன்புறுத்தப்படுவதோடு உணவு பறிமுதல் செய்யப்பட்டும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டும் வருகின்றனர்.

இவ்வாறு சித்திரவதைக்குட்படுத்தப்படும் அரசியல் கைதிகள் உயர் அதிகாரிகளினை சந்திக்க விடாது கீழ் மட்ட அதிகாரிகள் தடுத்தும் வருகின்றனர்.

இவர்கள் மீது எந்தவொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படாத நிலையில் வழக் குத்தாக்கல் செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

பின் குறிப்பு

இதன் காரணமாக அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் முடிவு இல்லாமல் தமது போராட்டத்தை கைவிட்டுள்ளனர். மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான சயந்தன் சிறைச்சாலைக்குச் சென்று சிறைச் சாலை அதிகாரிகளையும் அரசியல் கைதிகளையும் சந்தித்து கோரிக்கைகள் நிறைவேறும் என உத்தரவாதம் வழங்கியதையடுத்து உண்ணாவிர தத்தை கைதிகள் கைவிட்டுள்ளனர்.

ஆனால் இந்த கைதிகள் தொடர்பில் மாகாணசபை அமர்வில் கோரிக்கையாக கொண்டு வந்தும் அது கிடப்பில் இருப்பது கவலைக்குரியது. வடமாகாண சபை அமர்வில் கொண்டு வரும் தீர்மானங்கள் வடமாகாண சபைக்குள்ளே முடங்கிப் போவதால் அந்த தீர்மானங்கள் செயலற்று இருக்கிறது. வேலை வாய்ப்புகளுக்காக வரும் கோரிக்கைகளும் முக்கிய பிரச்சனையாக வரும் தமிழர் பிரச்சினை தொடர்பான கோரிக்கைகளும் ஒரே கோர்வையில் கட்டப்பட்டு முதலமைச்சர் அலுவலகத்தின் அலுமாரியில் தூசு பிடிக்க வைக்கப்பட்டுள்ளன.

# அச்சுறுத்தல் விடுக்கும் தரப்புகளிடமிருந்து பாதுகாப்பாக சாட்சியமளிக்க ஸ்கைப், மின்னஞ்சலை பயன்படுத்த முடியும்



## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன்

சர்வதேச விசாரணைக்குழு ஸ்கைப், மின்னஞ்சல் (இமெயில்) மூலமாக சாட்சியங்களை வழங்கமுடியும் என அறிவித்துள்ளது. இந் நிலையில் அச்சுறுத்தல் விடுக்கும் தரப்புகளிடமிருந்து பொதுமக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த அவ் ஊடகங்களை தமக்கு தெரிந்தவர்களின் உதவியுடன் இரகசியமாக பயன்படுத்த முடியுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இங்கு கருத்து வெளியிடுகையிலேயே முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தினால் நிறுவப்பட்டிருக்கும் சர்வதேச விசாரணைக்குழு ஸ்கைப், மின்னஞ்சல் (இமெயில்) மூலமாக சாட்சியங்களை வழங்கமுடியும் என அறிவித்துள்ளது. இந்நிலையில் அத்தொழில்நுட்பத்தின் ஊடாக பாதுகாப்பாகவும் தமக்கு தெரிந்தவர்களின் உதவியுடன் இரகசியமாகவும் பொது மக்கள் சாட்சியை வழங்கமுடியும். இவ்வாறான ஊடகங்களை நாம் பயன்படுத்துவதனால் அச்சுறுத்தல் விடுக்கும் தரப்புகளிடமிருந்தும் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

ஆகவே ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வழங்கியுள்ள இச்சந்தர்ப்பத்தை நாம் இயலுமான வரை சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதே நேரம் பாதிக்கப்பட்ட தரப்பாக காணப்படும் நாம் சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பமாக காணப்படுகின்றது. ஆகவே இதனை தவறவிட்ட பின்னர் சர்வதேச சமூகம் எமக்கு நீதியைப் பெற்றுத்தர தவறிவிட்டது என கவலை கொள்வதில் எந்தவிதமான பயனும் கிடைக்கப்போவதில்லை. நேரடியாக சாட்சிங்களை வழங்க முடியாதவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளும் பட்சத்தில் அவர்களின் சாட்சிங்களை பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் அனுப்பி வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார்.

# மாறிவரும் புதிய உலக ஒழுங்கு

சர்வதேச ஆதிக்க சக்திகளினால் ஒழுங்கமைக்கப்படும் உலக ஒழுங்கு ஆதிக்க சக்திகளின் பலம் பலவீனங்களுக்கேற்ப மாறிவருவதை வரலாற்றில் காணமுடியும். 2ம் உலகயுத்தம் வரை ஆதிக்க நிலையிலிருந்த பிரித்தானியா யுத்தத்தின் முடிவில் மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டது. அமெரிக்காவும் சோவியத் யூனியனும் முதலாம், இரண்டாம், நிலைக்கு வந்தன.

உலக ஒழுங்கு இவ்விரு நாடுகளையும் சுற்றியே ஒழுங்கமைக்கப்பட்டது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அணி, சோவியத் யூனியன் தலைமையிலான வார்சோ அணி என இரு அணிகளும் உருவாகியிருந்தன. இவ்விரு அணிகளுக்கிடையேயும் பனிப்போரும் இடம் பெற்றிருந்தது. ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் இவ் உலக ஒழுங்கில் செயற்படக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஒடுக்கும் பிரிவினருக்கு ஒரு அணி உதவி செய்தால் ஒடுக்கப்படும் பிரிவினருக்கு மற்றைய அணி உதவிசெய்தது.

உலகத்தை ஆதிக்கம் செய்வதில் இரு அணிகளுக்கிடையே பலத்த அதிகாரப் போட்டி நிலவியதனால் இரண்டுக்குமிடையே சமநிலையினைப் பேணுவதற்கு உலகப்பொது நிறுவனம் ஒன்றும் தேவையாக இருந்தது. ஐக்கிய நாடுகள் சபை அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தது. ஐ.நா பாதுகாப்புச் சபையில் ஐந்து நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் இருந்தாலும் அதிகாரப்போட்டி அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனுக்கும் இடையே தான் இருந்தன.

1990இல் சோவியத் யூனியன் சிதைவடைந்தது. அமெரிக்கா ஏகவல்லரசாகியது. நாடுகளுக்கிடையேயான உறவுகள் காரணமாக ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் கைவிடப்பட்டன. அவற்றின் போராட்டங்களும் சர்வதேச சக்திகளின் துணைகொண்டு அழிக்கப்பட்டன. அல்லது சரணடைவு நிலைக்கு கொண்டு வரப்பட்டன.

தற்போது புதிய உலக ஒழுங்கு உருவாகிவருகின்றது. அமெரிக்காவின் ஏக அதிகாரம் கீழிறங்குகின்றது. ரஷ்யா, சீனா, இந்தியா, பிறேசில், தென்னாபிரிக்கா என்பவற்றை உள்ளடக்கிய பிரிக்ஸ் அமைப்பின் எழுச்சி, அதன் விளைவான சிரியா, ஈராக், உக்ரைன் நெருக்கடிகள், அதனைத்தீர்க்க முடியாத அமெரிக்காவின் கையறுநிலை என்பன ஏக வல்லரசின் வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

தற்போது பிராந்திய வல்லரசுகள் பலவும், உலக வல்லரசுகளும் ஒருங்கே செயற்படும் சிக்கலான வடிவம் உடையதும் அவை ஒவ்வொன்றும் பரஸ்பரம் தங்கியிருப்பதுமான உலக ஒழுங்கு ஒன்று உருவாகி வருகின்றது. பல நெறியாளர்களும், பல நடிகர்களும் பங்கேற்கும் நாடகங்கள் அரங்கேறும் மல்ரிபிளக்ஸ் உலகமே தோன்றப்போகிறது.

இந்த பல்அரங்க உலகில் அமெரிக்கா முக்கிய சக்தியாக இருந்தாலும் அதனால் மட்டும் உலக ஒழுங்கை மாற்றமுடியாது. இந்த மாற்றச் செயற்பாட்டில் வேறு வல்லரசுகள், பிராந்திய வல்லரசுகள் என்பனவும் பங்கு பெறும். தலைமைத்துவத்தையும் பல நாடுகள் சேர்ந்தே வழங்கும். அமெரிக்கா உறுதிநிலையை பேண வேண்டுமென்றால், தனது செல்வாக்கினை நிலைநிறுத்த வேண்டுமென்றால் உலக தலைமைத்துவத்தை பிற வல்லரசுகளோடும், பிராந்திய வல்லரசுகளோடும் பகிர்ந்துகொள்ள தயாராக வேண்டும்.

# தமிழக தேசியவாதிகளுக்கு நிலாந்தனின் ஒன்பது கோரிக்கைகள்

தமிழகத்தில் செயற்படும் தமிழ்த் தேசியவாதிகளுக்கு சமூக ஆய்வாளர் நிலாந்தன் ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார். அவர் எழுதும் வாராந்த கட்டுரையிலேயே இவைபற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

01. கட்சி அரசியலைச் சாராது ஈழத்தமிழர் அரசியலை முன்னெடுக்கும் விதத்திலும் தன்னியல்பான மாணவர் எழுச்சி போன்றவற்றிற்கு தலைமை தாங்கும் விதத்திலும் ஒரு பொதுச்செயற்குழுவை உருவாக்குவது. அதில் சம்பந்தப்பட்ட எல்லாக்கட்சிகள் மற்றும் செயற்பாட்டு இயக்கங்களின் பிரதிநிதிகளையும் இந்தியா முழுவதிலுமுள்ள முற்போக்கான செயற்பாட்டாளர்களையும் உள்ளடக்குவது.

02. ஈழத்தமிழர் விவகாரம் அல்லது தமிழ்த்தேசியம் தொடர்பில் பொறுப்புக் கூறவல்ல முடிவுகளை அக்குழுவே எடுப்பது.

03. தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து தமிழகமானது மத்திய அரசாங்கத்தை எப்படிக் கையாள வேண்டும் என்பதை அக்குழுவே அறிவு பூர்வமாக தீர்மானிப்பது.

04. தமிழ்த் தேசியத்தையும் ஈழத்தமிழர் விவகாரத்தையும் கையாள்வது தொடர்பில் அதிகபட்சம் அறிவுபூர்வமான முடிவுகளை எடுக்க உதவியாக ஒரு சிந்தனைக் குழாத்தை உருவாக்குவது. அதில் ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த புத்திஜீவிகளையும் இணைப்பது

05. தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக உள்ளடக்கத்தைப் பலப்படுத்தும் விதத்தில் தமிழ் இனமான அரசியலின் உணர்ச்சித் தளத்தை இயன்றளவுக்கு அறிவால் பிரதியீடு செய்வது

06. ஒரு பொதுத் தமிழ்நிதியை புலம் பெயர்ந்த தமிழர்களோடு இணைந்து உருவாக்குவது.

07. ஒரு பொதுத் தமிழ் ஊடகத்தை முதலில் தமிழில் தொடங்கி, பின்னர் ஆங்கிலத்திற்கும் பிற இந்திய மொழிகளுக்கும் விரிவாக்குவது. அது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் மாறாதிருப்பதோடு ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்திய வெகுசனத்தை போதியளவு அறிவூட்டுவது.

08. தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகள் தொடர்பில் பொருத்தமான முடிவுகளை எடுப்பது.

09. இவை மட்டுமல்ல தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து தரமான கலைப் படங்களை தயாரிப்பவர்களுக்கு இக்குழுவே உதவலாம்.

# அருட்தந்தை மா.சத்திவேலின் உயிருக்கு ஆபத்தா?

காணமற் போனவர்களின் குடும்ப உறுப்பினர்களின் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்த வண.பிதா.எம் சத்திவேல் தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் சமூக மற்றும் சமயங்களுக்கான மத்தியநிலைய மண்டபத்தில் காணமற் போனவர்களின் குடும்ப உறுப்பினர்களின் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்து சர்ச்சைக்குள்ளான பிரமுகர்களின் ஒருவரான வண.பிதா.எம். சத்திவேல் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தில் இருப்பதாக ஆங்கில பத்திரிகையொன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலிலே இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

காணமல் போனவர்களின் உறவுகள் தமது அனுபவங்களை வெளியிடுவதற்காகவே இந்த கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது. இதற்காக வடக்கிலிருந்து 20 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வரவழைக்கப்பட்டனர். கலந்துரையாடல் ஆரம்பித்து சில நிமிடங்களில் எம்மால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அப்போது அத்துமீறி உள்நுழைந்த பௌத்த குருமார்கள் சிலர் எமக்கு எதிராக கோசங்களை எழுப்பினர். புலி ஆதரவாளர்களுக்கும் தேசத்துரோகிகளுக்கும் இங்கு இடம் இல்லை.

வெளியேறுமாறு கோசங்களை எழுப்பினார்கள் அதன் பின்னர் பொலிஸார் வரவரழைக்கப்பட்டனர். அவர்களும் பௌத்த குருமார்களுக்கு சார்பாகவே நடந்துகொண்டு எம்மை வெளியேற்ற திட்டம் தீட்டினார்கள்.

இவ்வாறு அவர்களது செயல் மூலம் சிவில் சட்டங்களை மீறியது மட்டுமல்லாமல் சமயத் தலைவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒழுக்கசீலங்களையும் சிறுமைப் படுத்திவிட்டார்கள். அன்றைய தினம் நானும் ஒரு குற்றவாளியாக அவர்கள் மத்தியில் இருந்து அடையாளம் காணப்பட்டேன். அன்றிலிருந்து என்மீதான அச்சுறுத்தல்கள் தொடங்கிவிட்டன. நான் தற்போது பணிபுரியும் வியாங்கொடை சென். மேரிஸ் தேவாலயம் உட்பட பல பகுதிகளில் பணியாற்றியிருக்கின்றேன்.

இன்று இந்த குழப்பத்தை விளைவித்த கும்பல் எனக்கொரு படத்தைக் காட்டி அந்த தேவாலயத்திலிருந்து நான் நீக்கப்பட்டு விட்டதாக பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றது. தெமட்டகொடை வீதியில் அவர்கள் திரிகின்றனர்.

# ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ...



- முத்தர் அம்மான்

ஒன்றுமேயில்லாத வடமாகாணசபைக்கு அதிகாரத்தை வாங்கித்தாங்கோவென்று எத்தினை தடவை டெல்லிக்கு படை எடுக்கிறதெண்டு முதலமைச்சர் விக்கியார் சிறீப்பாய்ந்ததாக கேள்வி. அதனால தானாம் டெல்லிக்கு காவடி எடுத்துப்போனவையோட ஆள் போக வில்லையெண்டும் தகவல். சனமொரு பக்கம் திட்டுதுகள். பேப்பர் காரர் இன்னொரு பக்கம் கிழிக்கிறாங்கள். உந்த சீத்துவத்தில கதிரையை கட்டிப்பிடிச்சுக்கொண்டிருக்கவோ என சொன்னதாகவும் தகவல். அவளை தொடுவானேன் அவதிப்படுவானேன் என்று அப்பு சொல்லுறது கேட்குது.

இதுவும் டெல்லிக்கதைதான். மோடி சம்பந்தரிட்ட சொல்லிப் போட்டாராம். மஹிந்தவோட நிக்கிற ஆட்களை விட்டுட்டு வெளியால நிக்கிற தமிழர் தரப்புக்களை கூட்டமைப்புக்குள்ள கொண்டுவாங்கோவெண்டு சொல்லியிருக்கிறாராம். ஆனால் அவர் சொன்னது தமிழ்த் தேசிய மக்கள முன்னணிகாரரையோ அல்லது ஆனந்த சங்கரியையோவெண்டு சம்பந்தர் திருதிருவென திரியிறதாக தகவல்.

நவநீதம்பிள்ளைக்கு கடிதமனுப்பின விவகாரத்தில சிவாஜிலிங்கம் தங்களை சுத்திப்போட்டதாக அமைச்சர் மட்டத்தில குசுகுசுப்பொன்று உலாவுது. ஆனால் அந்த ஆள் கையெழுத்து வாங்குகின்ற வேளையிலேயே அனுப்புற கடிதத்தையும் அனுப்பிப்போட்டுதாம். கையெழுத்து வைக்காட்டி பேப்பர்காரரிட்ட சொல்லி சிவாஜி கிழிச்சுப்போடுவாங்கள் என்ற பயம் ஒரு பக்கம். இன்னொரு பக்கம் மேல்மட்டம் கோவிக்குமெண்டு பயம். தலையையும் வாலையும் காட்டி கதிரையை காப்பாற்றுகின்ற வேலையில தெளிவாக இருக்கினம் பாருங்கோ.

இனஅழிப்பில இருந்து சர்வதேச பாதுகாப்பு என்ற சிவாஜிலிங்கத்தின்ர பிரேரணையினை குழப்பினவை யாரெண்டு பார்த்தால் கொடிகாமத்தில மாவீரர் துயிலுமில்லம் கட்டப்போறதாக சொல்லி புள்ளடி கேட்ட தம்பியும் தன்னிகரில்லாப் பேரவை தலைவரும் தானாம் மும்முரமாக நிண்டவை. ஒரு பேப்பர் பொடியன் நல்லா சொன்னான் கொழும்பிலயிருந்து வந்த சோடிக்கு யாழ்ப்பாணத்தில நல்ல மூடி கிடைச்சிருக்கெண்டு. முதலில தான் முதலமைச்சர் இல்லாட்டி அமைச்சரெண்டு நின்ற ஆள் மாவைக்கேனும் முதலமைச் சர் கதிரையை கொடுங்கோவெண்ட ஆள் எப்பிடி பச்சோந்தியாகி பிழைக்கிறார் பாருங்கோ.

எங்கடை கட்டைப்பஞ்சாயத்து அமைச்சரிற்கு தனக்கு பிறகெண்டாலும் யாரேனும் குறுநில மன்னனெண்டு சிலை வைப்பாங்களெண்டு நப்பாசை. அது தான் யாழ்ப்பாணத்தில சிலை வைச்சிட்டு சொந்த செலவில தானே தனக்கு நோட்டீஸ் அடிச்சு ஒட்டியிருக்கிறாராம். ஆனாலும் பாருங்கோ காக்கைவன்னியனுக்கு யாரும் சிலை எழுப்பினதாக வரலாறு இல்லைப்பாருங்கோ. தனக்கு தானே கட்டிக் கொண்டால் சரி.

தமிழ் செயற்பாட்டு தரப்புக்களை முடக்க கோடாரிக்காம்புகளாக சில கும்பல் புறப்பட்டிருக்குது பாருங்கோ. எங்கடை போராட்டத்தை கொச்சைப்படுத்தவும் தியாகங்களை விற்கவும் இக்கும்பல் பாடு படுகுது. எந்த போராட்டத்தில இருந்து வயிறு வளர்த்து நாலெழுத்து படிச்சவையோ அவையை கொண்டு இப்ப கூலிக்கு மாரடிக்க வைக்க மஹிந்த அரசு முற்பட்டிருக்கு. விழிப்பாக இருக்க வேண்டிய காலமிது.

# அமுத வாக்கு



வரலாறு ஒரு நாட்டின், சமூகத்தின், பண்டைய இருப்பு, பெருமை, வளம் உட்பட பல்வேறு சிறப்புகளை வெளிப்படுத்தும் ஆதாரம். வரலாற்றை, வரலாற்றுச் சின்னங்களை பேணிப்பாதுகாத்து வெளிப்படுத்துவது சமூகத்தின் பொறுப்பு

த. மனோகரன்

முன்னாள் கல்விப்பணிப்பாளர்



இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு சிறந்த நண்பனாகவோ, அல்லது கூடாத எதிரியாகவோ இருக்கக்கூடும். ஒரு குறிக்கோளுடைய மனிதர் என்ற வகையில் மோடி ஒரு முட்டாள்தனமான தலைவரல்ல. முட்டாள்களையோ அல்லது எதிரிகளையோ மோடி ஒருபோதும் சகித்துக்கொள்ளமாட்டார்.

– பேராசிரியர் ரொஹான் குணரட்ன



தேசிய நல்லிணக்கச் செயன்முறையொன்று வெவ்வேறுபட்ட தடங்களில் சென்று கொண்டிருக்க முடியாது. சர்வதேச ரீதியில் நல்லிணக்க போக்கொன்றை கடைப்பிடிப்பதாக அரசு காட்டிக்கொள்ளும் அதேவேளை நாட்டிற்குள் பகைமையும் முரண்பாடும் தீவிரமடைந்து காணப்படுகின்றது.

– கலாநிதி ஜெஹான் பெரேரா




சர்வதேச நிபுணர்கள் ஆணைக்குழு தற்போதைக்கு சர்வதேச ரீதியில் அரசாங்கத்தின் மீது தெரிவிக்கப்படுகின்ற விமர்சனங்களுக்கு தாக்குப்பிடிப்பதற்கான ஒரு கருவியாக ஆட்சியாளர்களினால் பயன்படுத்தக்கூடிய ஒன்றாகவே இருக்கப்போகிறது.

– கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து.



ஒரு ஜனநாயக நாட்டில் அரசு சாரா நிறுவனங்கள் தாம் தாங்களாகவே தங்கள் அதிகார எல்லை எது என்பதையும் என்னென்ன செயற்பாடுகளை தாம் செய்யப்போகின்றோம் என்பதையும் தீர்மானிக்க வேண்டியவை. இது மிக வெளிப்படையான ஒரு உண்மை. அவை நாட்டின் அரசியல் யாப்பிற்கும் சட்ட ஒழுங்கமைப்புக்கும் முரண்படாத வகையில் செயற்பட்டால் போதுமானது. அரசியல் யாப்பின் ஏதாவது ஒரு உறுப்புரையை மீறினால் அல்லது இயற்றப்பட்ட சட்டமொன்றை மீறிச் செயற்பட்டால் அதைப்பற்றி தீர்மானிக்க வேண்டிய அதிகாரம் நீதிமன்றுகளுக்குரியதேயன்றி, பாதுகாப்பு அமைச்சிற்குரியதல்ல.

– லக்சிறி பெர்னாண்டோ



பிளவுபட்டுக்கிடக்கும் உக்ரெயினை தன்னுடன் இணைத்துக் கொள்ளும் ஆவல் கொண்டுள்ள ஐரோப்பிய யூனியன் ரஷ்யாவின் புவி அரசியல் அபிலாசைகளை பொருட்படுத்தாமல் நடந்துகொள்கிறது. ரஷ்யாவின் எல்லையில் உள்ளதும் விரிந்த நிலப்பரப்பையும் 45 மில்லியன் மக்கள் தொகையையும் கொண்ட உக்ரெயினை மேற்கிற்குத்தாரை வார்க்க ரஷ்யா தயாராகவில்லை

– எஸ். நிஹால் சிங்

இந்தியாவின் சிரேஷ்ட பத்திரிகையாளர்.

# மாகாண சபை முறைமையை மீண்டும் அம்பலப்படுத்திய உயர்நீதி மன்ற தீர்ப்பு

- சூரியவேந்தன்

சென்ற மாதம் இரண்டு நிகழ்வுகள் தமிழ் அரசியலில் முக்கிய இடத்தை பெற்றிருந்தன. அவற்றில் ஒன்று வடமாகாண பிரதம செயலாளர் விஜயலக்சுமி ரமேசிற்கு உத்தரவிட வடமாகாண முதலமைச்சருக்கு அதிகாரமில்லை என்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு. இரண்டாவது ஜெயலலிதாவையும் நரேந்திரமோடியையும் ஆபாசமாக தொடர்புபடுத்தி பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வந்த செய்தி. இவை இரண்டும் அரசியல் ஆர்வலர்களிடையே பலத்த வாதபிரதிவாதங்களை உருவாக்கியுள்ளது.



வட மாகாண பிரதம செயலாளர் விஜயலக்சுமி ரமேசிற்கு உத்தரவிட வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு அதிகாரமில்லை என உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தமை பொதுவாக அரசியல் ஆய்வாளர்களினால் எதிர்பார்க்கப்பட்டது. சட்டரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இவ்வாறான தீர்ப்பே இலங்கையில் சாத்தியமாகவிருக்கும். இது வடமாகாண முதலமைச்சருக்கு தெரியாததல்ல.

மாகாணத்தின் நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்ற அரசாங்க முறையைப் போல மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலமைச்சரை தலைவராகக் கொண்ட அமைச்சரவையிடம் இல்லை. மாறாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடமே உண்டு. இங்கு ஆளுநருக்கு ஆலோசனை வழங்குவதற்குத்தான் அமைச்சரவைக்கும் முதலமைச்சருக்கும் அதிகாரம் உண்டு. அந்த ஆலோசனைகளை ஏற்க வேண்டிய கட்டாயமும் ஆளுநருக்கு கிடையாது. இவை தெளிவாக 13வது திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது. இங்கு உயர்நீதிமன்றம் ஆளுநரிற்கு தான் உத்தரவிட அதிகாரமுண்டு எனக்கூறவில்லை. அரசியல் சர்ச்சை ஏற்படலாம் எனத் தவிர்த்திருக்கலாம்.

விஜயலக்சுமி ரமேஸ் ஒரு பொதுநிர்வாக அதிகாரி இவரை ஜனாதிபதி நியமித்தாலும் கட்டுப்படுத்தும் அதிகாரம் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கே உண்டு என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முதலமைச்சருக்கு எந்தவித அதிகாரமும் இல்லாத நிலையில் பிரதம செயலாளரை கட்டுப்படுத்தும் வகையில் சுற்றுநிரூபத்தை வெளியிட்டது மாகாண அமைச்சரவை முதல்தவறு. நீதி மன்றம் சென்றால் விஜயலக்சுமிக்கு சார்பாகவே தீர்ப்பு வரும் என்பது முன்னாள் உச்ச நீதிமன்ற

**மாகாணத்தின் நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்ற அரசாங்க முறையைப் போல மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலமைச்சரை தலைவராகக் கொண்ட அமைச்சரவையிடம் இல்லை. மாறாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடமே உண்டு. இங்கு ஆளுநருக்கு ஆலோசனை வழங்குவதற்குத்தான் அமைச்சரவைக்கும் முதலமைச்சருக்கும் அதிகாரம் உண்டு. அந்த ஆலோசனைகளை ஏற்க வேண்டிய கட்டாயமும் ஆளுநருக்கு கிடையாது.**

நீதிபதியான விக்கினேஸ்வரனுக்கோ அல்லது இந்த வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுத்த பிரபல சட்டத்தரணி சுமந்திரனுக்கோ தெரியாதா?

வழக்கின் இடைநடுவில் தீர்ப்பு தங்களுக்கு சாதகமாக வராது என்பது தெரிந்த



பின்னர் தான் அவசர அவசரமாக சுற்றுநிரூபத்தை வாபஸ் பெற்றதோடு அதற்கான சத்தியக்கடதாசியையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

அரசியல் ரீதியாக முழு அரச அதிகார கட்டமைப்பும் பேரினவாத மயப்பட்ட நிலையில் உயர்நீதிமன்றமும் அதற்கு விதிவிலக்காக இருக்கப்போவதில்லை. சட்டரீதியாக வாய்ப்பு இல்லாவிட்டாலும் பொருள் விளக்கம் கொடுக்கும் அதிகாரத்தினூடாக விக்கினேஸ்வரனுக்கு எதிராகவே நீதிமன்றம் தீர்ப்பினை வழங்கியிருக்கும்

உண்மையில் விஜயலக்சுமி விவகாரம் ஒரு சட்டவிவகாரமல்ல. அது ஒரு அரசியல் விவகாரம் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருடன் அவர் ஒத்துழைப்பதில்லை. மாறாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் கட்டளைப்படியே செயற்படுகின்றார். இதனை அரசியல் அரங்குகளில் எழுப்பியிருக்க வேண்டும். அதனூடாக சட்ட ஏற்பாடுகளை மாற்றியிருக்க வேண்டும். அவற்றைச் செய்யாமல் சுற்றுநிருபத்தை வெளியிட்டதன் மூலம் கூட்டமைப்பு மூக்குடைபட்டு நிற்கின்றது. மக்களாட்சிக் கொள்கையின்படி நிரந்தர நிர்வாகத்தின் கடமை அரசியல் நிர்வாகத்தின் கட்டளைப்படி செயற்படுவதே? மாகாண நிர்வாகத்தில் இக்கோட்பாடு தலைகீழாக இடம் பெறுகின்றது. இங்கு அதிகாரியான ஆளுநரின் கட்டளைப்படி மாகாண அமைச்சரவை செயற்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கே தவறு 13வது திருத்தத்தில் தான். அது அதிகாரமில்லாத மாகாணசபை முறையினைத்தான் உருவாக்கியுள்ளது. மாகாணசபையை ஏற்றது அது தொடர்பான நம்பிக்கையை மக்களுக்கு கொடுத்தது என்பவை தான் மிகப்பெரிய தவறு.

இங்கு அரசியற் சர்ச்சைகள் வரக்கூடாது என்பதற்காக மாகாண அரசியல் நிர்வாகமும் பிரதம செயலாளரும் நல்லிணக்கத்துடன் செயற்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் ஆலோசனை கூறியிருக்கின்றது. இது நடைமுறையில் சாத்தியமாகப்போவதில்லை. விக்கினேஸ்வரன் ஆளுநரின் அதிகாரத்திற்கு பணிந்து போனால் தான் இவை சாத்தியமாகும்.

இங்கு எழும் கேள்வி இவ்வளவு அவமானப்படுத்தப்பட்ட பின்னரும் கூட்டமைப்பினர் மாகாணசபையிலிருந்து வெளியேறத் தயாரா?

ஒருபோதும் இவர்கள் வெளியேறப் போவதில்லை.

இரண்டாவது நிகழ்வான பாதுகாப்பு



அமைச்சின் இணையத்தள செய்தியை பொறுத்தவரை மீனவர் பிரச்சனை தொடர்பாக ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதங்களை காதல் கடிதங்களாக விபரித்து செய்தி வெளிவந்திருக்கின்றது.

இது அரசாங்கத்திற்கு தெரியாமல்



நடந்த ஒன்றல்ல. சிலவேளை மகிந்தருக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபாய ராஜபக்சவிற்கு தெரியாமல் நடந்திருக்கும் எனக்கூற முடியாது. செய்திகளுக்கு பொறுப்பாக இருப்பவர்கள் ஒரு பிராந்திய வல்லரசின் முக்கியமான தலைவர்கள் பற்றி கிண்டலடிக்கும் செய்தியை அதற்கு பொறுப்பானவர்களுடன் கலந்தாலோசிக்காமல் வெளியிட்டிருப்பார்கள் எனக் கூறமுடியாது.

தமிழக அரசு இதனை மிகத்தீவிரமான விவகாரமாக எடுத்தது. ஜெயலலிதா இந்தியாவிற்கான இலங்கை தூதுவரை அழைத்து பலத்த கண்டனம் தெரிவிக்கவேண்டும் என நரேந்திரமோடிக்கு கடிதம் எழுதினார். தமிழக அரசியற் கட்சிகள் கட்சி வேறுபாடுகள் இல்லாமல் கண்டனம் தெரிவித்தன. ஜெயலலிதாவின் பரம எதிரியான கருணாநிதியும் கண்டனம் தெரிவித்தார். அ.தி.மு.க ஆதரவாளர்கள் இலங்கை தூதுவராலயத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடாத்தினர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. சிறீலங்கா எயார்லைன்ஸ் அலுவலகம் தாக்கப்பட்டது.

மத்திய அரசு வெளிப்படையாக அமைதி காத்தாலும் இலங்கை அரசிற்கு மன்னிப்பு கேட்குமாறும் குறிப்பிட்ட செய்தியை இணையத்தளத்திலிருந்து அகற்றுமாறும் கட்டளையிட்டது. இதற்கிணங்க உடனடியாக அச்செய்தி இணையத்தளத்திலிருந்து அகற்றப்பட்டதுமல்லாமல் இலங்கை பாதுகாப்பு அமைச்சு பகிரங்க மன்னிப்பையும் கேட்டுக்கொண்டது.

இலங்கை அரசு மன்னிப்பு கேட்டாலும் தமிழகத்தில் எதிர்ப்புகள் அடங்கவில்லை. திரைப்பட நடிகர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அ.தி.மு.க ஆதரவாளர்கள் மகிந்தராஜபக்ஷ பணிந்து மன்னிப்புக்கேட்டு எனக்கு வாழ்வு கொடுங்கள் எனக்கேட்பதாக பதாதைகளை தொங்கவிட்டனர். இலங்கையிலும் பல்வேறு அரசியற்கட்சிகளின் தலைவர்களும் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு இதனை திட்டமிட்டும் செய்திருக்கலாம். தமிழ் மக்களை வீதியில் விட்டுவிட்டு இலங்கை அரசாங்கத்துடன் கொஞ்சி விளையாட முற்படும் இந்திய அரசாங்கத்திற்கு விழுந்த பெரும் அடி என்றே இதனைக்கூற வேண்டும்.

# இலங்கையில் சர்வதேச சக்திகளின் ஆட்சிமாற்ற முயற்சிகளும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும்

- ஊர்சுற்றி

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் இந்த வருட இறுதியில் நடைபெறலாம் என்ற செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து ஆட்சி மாற்றத்திற்கான முயற்சிகளும் மும்முரமாக இடம் பெறுகின்றன. இந்த முயற்சியில் அமெரிக்கா நேரடியாகவே ஈடுபட்டுள்ளது. பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க முயற்சிக்கின்றது.

பொது வேட்பாளர் முயற்சி ஒரு புறமிருக்க ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி பட்டறைகள் என்ற பெயரில் ஊடகவியலாளர்களை ஆட்சி மாற்றத்திற்கு சார்பாக திரட்டும் திட்டம் ஒன்றினையும் அமெரிக்கா முடுக்கிவிட்டதாக மகிந்தர் அரசாங்கம் சந்தேகப்படுகின்றது. இதனால் தான் அந்தப் பயிற்சி பட்டறைகளை நடத்திடாமல் தடுத்து நிறுத்துகின்றது. பாதுகாப்பு அமைச்சு, அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஊடகவியலாளர்கள் தொடர்பான பயிற்சி பட்டறைகளை நடாத்தமுடியாது என ஒரு சுற்றுநிரூபத்தை ஊடகங்களுக்கு அனுப்பியுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் இரட்டைப்பயம் அரசிற்கு உண்டு. ஒன்று மக்கள் மத்தியில் கருத்துக்களை பரப்பி ஆட்சி மாற்றத்திற்கு அவர்களும் உதவிவிடுவார்கள் என்பதாகும். இரண்டாவது போர்க்குற்ற விசாரணைக்கான எழுத்து மூல சாட்சியங்கள் வழங்கிவிடுவர் என்ற அச்சமாகும். இதனால் தமிழ் ஊடகவியலாளருக்கு பயிற்சி பட்டறைகள் நடக்கும் இடமெல்லாம் தேடித்தேடி அவற்றை தடை செய்து வருகின்றது. இதன் உச்ச நிலையில் தமிழ் ஊடகவியலாளர்கள் சென்ற வாகனத்தில் கஞ்சாப்பொதி வைக்கும் வரை அது சென்றிருக்கின்றது. ஊடக வியலாளர்களுக்கு சார்பான ஆதரவுக்குரல் உலக ரீதியாக இருப்பதால் அங்கிருந்து வரும் கண்டனங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் அரசு திணறிக்கொண்டிருக்கிறது.

**தென் இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் தமிழ் மக்களை ஒடுக்குபவை தான். ஒடுக்கும் முறைகளில் வேண்டுமானால் வேறுபடலாம். மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஒரு கட்சியை தமிழனின் நெஞ்சில் குத்துகின்ற கட்சி என்றும் மறுகட்சியை முதுகில் குத்துகின்ற கட்சி என்றும் வர்ணித்தார்.**

இவ்வளவு காலமும் ஆட்சிமாற்றம் தொடர்பாக மகிந்தர் பெரியளவிற்கு அச்சப்படவில்லை. போர்வெற்றி அரசியலும் எதிர்க்கட்சிகளின் பலவீனமும் தான் இதற்கு காரணம். ஆனால் தற்போது மகிந்தர் இரண்டு விடயங்களுக்கு பயப்படுகின்றார். ஒன்று அமெரிக்கா வல்லரசு ஆட்சி மாற்ற செயற்பாடுகளில் இறங்கியிருக்கின்றது என்ற விடயம். இரண்டாவது பொது வேட்பாளருக்கு முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகள்.

அமெரிக்கா ஒரு முயற்சியை மேற்கொண்டால் வெற்றி கிடைக்கும் வரை சலிப்பில்லாது முயற்சி செய்யும். அப்போது கூட ஒரு அணுகுமுறையை பின்பற்றாமல் பல்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றும் அந்த அணுகுமுறைகளில் சில கண்ணுக்கு தெரியாமல் கூட இருக்கலாம். பல்வேறு நாடுகளிலும் வெற்றிகரமாக ஆட்சிக்கவிழ்ப்பை செய்த அனுபவம் அமெரிக்காவிற்கு உண்டு. முன்னர் ஆட்சி மாற்றத்திற்கு இராணுவ வழிமுறைகளை பின்பற்றிய அமெரிக்கா அண்மைக் காலமாக அரசியல் வழிமுறைகளையே பின்பற்றுகின்றது. அரசாங்கத்தை தனிமைப் படுத்துதலே அந்த வழிமுறை. இன்று தமிழ், முஸ்லிம் மக்கள் அரசாங்கத்துடன் இல்லை, இது பற்றிக்கூட மகிந்தர்



பயப்படவில்லை. ஆனால் தற்போது சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு எதிரான அபிப்பிராஜத்தை வளர்த்து விடுமோ என அஞ்சுகின்றது.

இரண்டாவது பொது வேட்பாளருக்கு விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள். இதில் இரண்டு நிபந்தனைகள் முக்கியமானவையாக உள்ளன. ஒன்று பொது வேட்பாளர் வெற்றி பெற்றவுடன் 6 மாதத்திற்குள் ஜனாதிபதி முறையினை நீக்கிவிட வேண்டும். இரண்டாவது 17வது திருத்த சட்டத்தினுள் மீளக்கொண்டுவந்து நடைமுறைப்படுத்தவேண்டும்.

இந்த இரண்டு நிபந்தனைகளும் சிங்கள மத்திய தரவர்க்கத்தினை கவரக் கூடியவை. அந்த வர்க்கம் ஆதரவாக செயற்பட முற்படலாம். அந்த வர்க்கம் தான் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்ற வர்க்கம். இது ஏனைய வர்க்கப் பிரிவினரையும் அரசாங்கத்திற்கு எதிராக திருப்பிவிடுமோ என்ற அச்சம் மகிந்தவுக்கு உள்ளது. தற்போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவது பற்றி பரிசீலிக்க தானும் தயார் என அரச அமைச்சர்கள் கூறுகின்றனர். எனினும் தலையணையை மாற்றுவதில் எந்த பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை எனக் கூறுகின்றார்.

ஐ.நா விசாரணையைச் சமாளிப்பதற்கு மகிந்தர் தானும் சர்வதேச நிபுணர் குழுவினை நியமித்தார். இதனால் அரசாங்கத்துடன் இணைந்துள்ள தீவிர இனவாதக்கட்சிகள் அதிர்ப்தியடைந்துள்ளன. இவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேற்றினால்தான் நம்பியிருந்த பேரினவாதத்தளம் தன்னைக் கைவிட்டுவிடுமோ என்ற அச்சமும் மகிந்தருக்கு ஏற்பட்டிருக்கின்றது.


ஒரு பக்கத்தில் ஆட்சி மாற்றத்திற்கான அமெரிக்க வல்லரசின் முயற்சிகள், மறு பக்கத்தில் சர்வதேச விசாரணை என்கின்ற அச்சுறுத்தல்கள் இன்னோர் பக்கத்தில் அதனையே துரும்பாக வைத்து தனது செல்வாக்கிற்குள் கொண்டு வர இந்தியா எடுக்கும் முயற்சிகள் என பல பக்கத்தாலும் மகிந்தரை நோக்கி நெருக்குதல்கள் வரத் தொடங்கியுள்ளன.

இந்த நெருக்குதல்கள் எல்லாம் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருமா? தற்போது இதற்கு பதில் கூறுவது கடினமாக இருக்கும்.

பொது வேட்பாளரை தெரிவு செய்யும் கூட்டில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இணைந்தமை தமிழ் மக்களின் நலன்களுக்கு சாதகமானதா என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. சாதக மில்லை என்றே கூற வேண்டும். இவ் எதிர்க்கட்சிக் கூட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றியதோடுமல்லாமல் சம்பந்தனும் அதில் கலந்துகொண்டிருக்கின்றார். அமெரிக்கத்தலைமையிலான மேற்குலகின் கட்டளையின் பேரிலேயே அவர் கலந்து கொண்டிருப்பார் என்பது பலரது அபிப்பிராயம். அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்திருக்கின்றார்கள் என்பதைக் காட்டுவதற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மேற்குலகம் அதில் இணைத் துள்ளது.

ஆனால் இந்த இணைவு மேற்குலகத்தின் இலக்காக இருக்கின்ற ஆட்சி மாற்றத்திற்கும் உதவப்போவதில்லை. தமிழ்த்தேசிய அரசியலின் நலன்களுக்கும் உதவப்போவ தில்லை. இது பற்றி முன்னரும் பலதடவை கூறப்பட்டிருக்கிறது.

இலங்கைத்தீவு சமூகமளவில் இரண்டாகப் பிரிந்துள்ளது. போரின் முடிவு அந்தப்பிளவினை மேலும் அகலப்படுத்தியுள்ளது. இத்தீவில் அனைத்து இனங்களையும் இணைக்கக்கூடிய இலங்கைத் தேசியம் என ஒன்று நடைமுறையில் இல்லை. இருப்பவை சிங்களத்தேசியம், தமிழ்த்தேசியம், முஸ்லிம்தேசியம், மலையகத்தேசியம் என்பவையே. இலங்கை அரசு என்பது சிங்கள தேசத்திற்குரிய அரசே. இந்த அரசின் உருவாக்கம் சிங்கள



பௌத்த கருத்து நிலையின் அடிப்படையிலேயே நடந்தேறியுள்ளது. இதன்படி இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரியது.

ஏனையவர்கள் வாழ்வது சிங்கள பௌத்தத்தின் தயவில் மட்டுமே. இந்த நிலை காரணமாக தமிழ் மக்கள் இந்த அரச கட்டமைப்புக்கு வெளியே தான் நிற்கின்றனர். எம்மை சமத்துவமாக எமது அடையாளத்துடன் அங்கீகரித்தால் இந்த அரச கட்டமைப்பில் இணையத்தயார் என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடு. தமிழ் மக்களின் தியாகம் நிறைந்த 60 வருடப்

**தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் இரட்டைப்பயம் அரசிற்கு உண்டு. ஒன்று மக்கள் மத்தியில் கருத்துக்களை பரப்பி ஆட்சி மாற்றத்திற்கு அவர்களும் உதவிவிடுவார்கள் என்பதாகும். இரண்டாவது போர்க்குற்ற விசாரணைக்கான எழுத்து மூல சாட்சியங்கள் வழங்கிவிடுவர் என்ற அச்சமாகும். இதனால் தமிழ் ஊடகவியலாளருக்கு பயிற்சி பட்டறைகள் நடக்கும் இடமெல்லாம் தேடித்தேடி அவற்றை தடை செய்து வருகின்றது.**

போராட்டம் இதற்காகத்தான் நடைபெற்றது.

போரில் சிங்கள தேசம் வெற்றியடைந்த பின்னர் இன்று தமிழ்த் தேசத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் இடையிலான இடைவெளி மேலும் அதிகரித்துள்ளது. இந் நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் இணைந்தால் தமிழனுடன் கூட்டுச்சேர்ந்துள்ளனர் என்ற பிரச்சாரத்தை மகிந்தர் முன்னெடுப்பார். இப்பிரச்சாரம் மகிந்தரின் வெற்றிக்கான வாய்ப்புக்களை அதிகரிக்கச்செய்யும். கடந்த ஜனாதிபதி தேர்தலில் இதுவே நடைபெற்றது. கூட்டமைப்பு பகிரங்கமாக சரத்பொன் சேகாவினை ஆதரித்ததினால் மகிந்தர் இலகுவாக வெற்றிபெற்றார்.

மறு பக்கத்தில் சிங்கள தேசத்தின் ஜனாதிபதி யார்? எனத் தீர்மானிக்கின்ற தேர்தலில் கூட்டமைப்பு பங்குபற்றுவதனால் அது தமிழ்த்தேசிய அரசியலின் எதிர்காலத்தை வெகுவாகப் பாதிக்கும். இந்த அணுகுமுறை சிங்கள தேசத்தின் அரசினைதமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என்பதை அர்த்தப்படுத்தும்.

தென் இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் தமிழ் மக்களை ஒடுக்குபவை தான். ஒடுக்கும் முறைகளில் வேண்டுமானால் வேறுபடலாம். மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஒரு கட்சியை தமிழனின் நெஞ்சில் குத்துகின்ற கட்சி என்றும் மறுகட்சியை முதுகில் குத்துகின்ற கட்சி என்றும் வர்ணித்தார்.

எனவே தமிழ்த் தேசிய அரசியல் நிலைநின்று பார்த்தாலும் சரி அல்லது இராஜதந்திர நிலை நின்று பார்த்தாலும் சரி தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளையும் பொறுத்தவரை தமிழ்த்தரப்பு சமதூரத்தில் நிற்பதே தமிழ் அரசியலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி : இல.43, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே இல : 021 222 3739 மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com
www.ithunamthesam.com

## ஐ.நா. விசாரணை

**இந்த ஆண்டின் மார்ச் மாதத்தில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அத்தீர்மானத்தில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் விசாரணை நடாத்த வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. அதிகம் இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவினால் விசாரணை நடாத்தப்படும் காலப்பகுதியில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களையே விசாரிக்க வேண்டும் என்றும் குறிபிடப்பட்டிருந்தது.**

**இத் தீர்மானம் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பெரும் ஏமாற்றமும் விமர்சனமும் எழுந்திருந்ததுடன் எதிர்ப்பலைகளும் தோன்றி இருந்தன. இத் தீர்மானம் வெறுமனே மனித உரிமை மீறல்கள் தொடர்பிலேயே விசாரிக்க கோரியமையும் விசாரணைக் காலப்பகுதியாக குறுகிய காலப்பகுதியான 2002ம் ஆண்டு தொடக்கம் 2009 மே மாதம் வரையுமாக குறுக்கப்பட்டிருந்தமையுமே இவ் எதிர்ப்பலைகள் தோன்றக் காரணமாக இருந்தது. அதிலும் குறிப்பாக மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் எத்தகைய விசாரணையும் கோரப்பட்டிருக்கவில்லை.**

**எனினும் இவ் எதிர்ப்பலைகள் காரணமாக அண்மையில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினை மனிதாபிமானச் சட்ட மீறல்களினையும் விசாரிக்க கோரியுள்ளதுடன் விசாரணைக் காலப்பகுதியாக 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை விசாரிக்கலாம் என்றும் இக்காலப்பகுதியில் நடைபெற்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் 2002ஆம் ஆண்டிற்கு முன்னரோ 2011ஆம் ஆண்டிற்கு பின்னரோ இடம்பெற்றிருப்பின் அது தொடர்பிலும் விசாரிக்கலாம் என்றும் கோரப்பட்டுள்ளது.**

**இந்த மாற்றமானது தாயகத்திலும் புலத்திலும் தமிழகத்திலும் இருந்து கிளம்பிய எதிர்ப்பலைகளுக்கு கிடைத்த பலாபலன்கள் ஆகும்.**

**இத்தகைய விசாரணைகள் ஈற்றில் தமிழ் மக்களுக்கு அரசியல் விடுதலையை பெற்றுத்தருமா? என்கின்ற வினா எழுகின்ற பொழுதும், தமிழ் மக்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளினை சர்வதேச அரங்கில் முறையாக பதிவு செய்ய ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது.**

**அண்மையில் இந்த விசாரணைகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட த.தே.கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் சாட்சியம் அளிபபது மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் எனவே ஏற்கனவே வெளிவந்த விடயங்கள் தொடர்பில் சாட்சியம் அளிபபதில் பிரயோசனம் இல்லை என்றும் ஏதேனும் முக்கியமான வெளிவராத விடயம் தொடர்பில் சாட்சியங்கள் அளிக்க எவரேனும் விரும்பின் தம்மிடம் அவற்றை தருமாறும் கூறியுள்ளார்.**

**இந்த கருத்து தொடர்பில் இது நம்தேசம் விசனமடைகின்றது. இலங்கை தீவை விட்டு பிரித்தானியர் வெளியேறிய நாளில் இருந்து தமிழ் மக்கள் மீது சிங்கள ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அநீதிகளையும் பதிவு செய்யவேண்டியது வரலாற்றுக் கடமையாகும். இது ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பமாகும்.**

**ஒரு விடயம் தொடர்பில் பலர் சாட்சியம் அளிபபின் அவ்விடயம் மறுக்க முடியாதவாறு நிரூபிக்கப்படும். எனவே உங்களுக்கு தெரிந்த அத்தனை அநீதிகளையும் ஒவ்வொருவரும் சாட்சியமாக பதிய வேண்டியது வரலாற்றுப் பணி என்றே "இது நம்தேசம்" விடுக்கின்றது.**

**தாயகம், புலம், தமிழகம் எங்கும் வாழுகின்ற தமிழ் மக்களே உங்களுக்கு தெரிந்த சாட்சியங்களை பதிவு செய்யுங்கள். உங்களுடைய சாட்சியங்களை சத்தியக்கூற்று மூலமோ, அல்லது உங்கள் குரலை பதிவு செய்தோ பல்வேறு வழிகளினூடாக உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஐ.நா விசாரணையாளர்களை சென்றடையும் வண்ணம் அனுப்பி வையுங்கள் என்று இது நம்தேசம் கோருகின்றது.**

# தமிழ் மக்கள் நீதியைப்பெற்றுக் கொள்வதற்கு சாட்சியமளிப்பது அவசியம் - கஜேந்திரகுமார்

இறுதிப்போர் தொடர்பில் ஐ.நாவின் நிபுணர்குழு மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு சாட்சியமளிப்பவர்கள் ஸ்கைப், மின் அஞ்சல் மூலம் தமது சாட்சியங்களை வழங்க முடியும். சாட்சியம் அளிப்பவர்களுக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் விடுத்துள்ள வேண்டுகோளை வாசகர்களுக்காகத் தருகின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்படும் சர்வதேச விசாரணை ஆக்கபூர்வமானதாக அமைவதற்கும் பாதிக்கப்பட்ட எம்மினத்திற்கு பூரணமான நியாயத்தைப் பெற்றுத்தருவதற்கும் இனஅழிப்பு நடைபெற்ற தமிழ் மண்ணிலுள்ள பொது மக்கள் ஒன்றுதிரண்டு சாட்சியமளிப்பது அவசியம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேசத்தின் துணையுடன் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பமொன்று ஏற்பட்டுள்ள நிலையில் அந்த வாய்ப்பை ஒருபோதும் தவறவிட்டுவிடக் கூடாது எனக் குறிப்பிட்டவர் சாட்சியமளிப்பது தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தும் விசேட வேலைத்திட்டமொன்றை அடுத்தவார இறுதிக்குள் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு 18.08.2014 அன்று கொழும்பில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இங்கு கருத்து வெளியிடுகையிலேயே முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கடந்த கூட்டத் தொடரின் போது இலங்கை தொடர்பாக தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. இதன்போது நாம் அத்தீர்மானத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக கூறியிருந்ததுடன் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் தமிழ்த் தரப்புக்களின் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் குறிப்பிட்டிருந்தோம். இதையொத்த கருத்துக்களே சிவில் சமூகத்தின் தரப்பிலும் முன்வைக்கப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்காக சாட்சியங்களை திரட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இறுதியாக அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையின் பிரகாரம் விசாரணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை விடவும் பரவலான அதிகாரத்தை தாமாகவே ஏற்றுக்கொண்டிருப்பதை காட்டி நிற்கின்றது. அதிலும் சில குறைபாடுகள் இருப்பதை அவர்களே ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் அவற்றை பெரிதுபடுத்தாது அவ்வறிக்கையை நாம் வரவேற்கின்றோம்.

இந்நிலையில் தமிழ்த்தேசத்தில் உள்ளவர்கள் சாட்சியமளிப்பதற்கு


கோப்புப் படம்

ஆபத்தான சூழல் காணப்படுவதால் இங்கிருப்பவர்கள் இல்லாமலேயே சாட்சியங்கள் வழுங்கி முழுமையான விசாரணையை மேற்கொண்டு தீர்ப்புகள் வழங்கமுடியும் என்ற கருத்துருவாக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. இது தவறானதாகும். தமிழ்த்தேசத்தில் இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டு பாதிப்புக்குள்ளாகியிருக்கும் தரப்புக்கு நீதி கிடைக்க வேண்டியது அவசியமாகும். ஆகவே அதற்கான கணிசமான பங்களிப்பை எமது மக்களே வழங்க வேண்டியவர்களாக உள்ளனர்.

ஐ.நாவின் சர்வதேச விசாரணை ஆக்கபூர்வமானதாக அமைவதற்கு மிக முக்கியமான சாட்சியங்கள் தமிழர்களின் மண்ணில் தான் இருக்கின்றது. இங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக்குற்றங்கள் இனவழிப்பு தொடர்பாக பூரணமான சாட்சியமளிக்கக் கூடியவர்கள் இங்குதான் வாழ்கின்றார்கள். குற்றங்கள் தொடர்பாக விபரங்கள் தெரிந்தவர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு சாட்சியங்களை வழங்க வேண்டியது அவசியமாகும்.

பாதிப்புற்ற அனைவரும் ஒன்று திரண்டு வேலைத்திட்டத்தில் இணையும் போது அந்தப்புரட்சியை அரசாங்கத்தால் தடுத்து நிறுத்தமுடியாது. புலம்பெயர்ந்த மக்களும் அவர்களின் கணிசமான பங்களிப்பை வழங்க வேண்டும். எமது கட்சியானது அடுத்தவாரத்தினுள் சாட்சியமளிப்பது தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்தும்

(23ஆம் பக்கம் பார்க்க)

# சுப்பிரமணிய சுவாமி குழுவினரின் இலங்கை விஜயமும் இந்தியாவின் புதிய நகர்வுகளும்

முத்துக்குமார்

பாரதீய ஜனதாக் கட்சியின் மூலோபாயச் செயற்பாட்டுக் குழுவின் தலைவர் சுப்பிரமணியசுவாமி தலைமையில் ஒரு குழுவினர் இலங்கை வந்து திரும்பியிருக்கின்றனர். இக்குழுவில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் அரசியல் விமர்சகருமான பேராசிரியர் மாதவ் நலப்ப, முன்னாள் மத்திய அமைச்சர் கலாநிதி சுரேஷ்பிரபு, பா.ஜ.க.வின் தேசிய வெளியுறவுக் கொள்கை ஏற்பாட்டாளர் கலாநிதி ஸ்வப்பன் தாஸ்குப்தா, பா.ஜ.கவின் தேசிய செயற்பாட்டுக்குழு உறுப்பினர் கலாநிதி சேஷாத்திரி சாரி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்கா நிலையத்தில் "பிரதமர் மோடியின் கீழான இந்தியா" என்ற தலைப்பில் சுப்பிரமணியசுவாமி உரையாற்றியிருக்கின்றார். ஜனாதிபதி மகிந்தரையும் இக்குழுவினர் சந்தித்து பேசியிருக்கின்றனர். பாரதீய ஜனதாக்கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் சேஷாத்திரி சாரி வீரகேசரி பத்திரிகைக்கு ஒரு நேர்காணலையும் வழங்கியிருக்கின்றார்.


இந்த இருவரினது கருத்துக்களும் பலத்த வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியதோடு மோடி அரசாங்கம் தங்களுக்காக நிற்கும் என நம்பியிருந்த தமிழ் மக்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கின்றது. அரசியல் ஆய்வாளர்கள் மோடி வருகையுடன் பிராந்திய அரசியல் ஒழுங்கும் மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றது என அபிப்பிராயப்படுகின்றனர். இந்தக் குழுவினரின் கருத்துக்களும் அதன் வெளிப்பாடே எனக் கூறுகின்றனர்.

பாயப்பார்க்கும். இதனால் சுரேஷ்பிறேமச்சந்திரன், சுமந்திரன் போன்றோர் சுப்பிரமணியசுவாமி இலங்கை அரசாங்கத்தின் ஆதரவாளர், இந்தியாவில் கோமாளி அரசியல்வாதி எனக் கருதப்படுவர். அவரது உரையினைக் கணக்கெடுக்கத் தேவையில்லை எனக் கூறியிருக்கின்றனர்.

சுப்பிரமணியசுவாமி மோடி அரசாங்கத்தின் நிலைப்பாட்டுடன் மகிந்தர் அரசிற்கு ஆதரவான கருத்துக்களையும் இந்தியாவின் நிலைப்பாடு போன்று பெருப்பித்துக் கூறியுள்ளார் என்பது உண்மையே. இந்த வகையில் அவரது கருத்துக்களை நாம் கணக்கெடுக்காது விடலாம். ஆனால் பா.ஜ.கவின் தேசிய செயற்பாட்டுக்குழு உறுப்பினர் கலாநிதி சேஷாத்திரி சாரியின் கருத்துக்களை கவனிக்காமல் இருக்க முடியாது. அவருடைய கருத்துக்களில் பல ஏற்கனவே பாரதீஜ ஜனதா கட்சித்தலைவர்களினால் முன்வைக்கப்பட்டவை. உண்மையில் இந்தக் கருத்துக்கள் தான் நரேந்திரமோடி அரசாங்கத்தின் புதிய நகர்வுகளை கோடிட்டு காட்டுபவையாக உள்ளன.

இலங்கையில் எந்தவிதமான வெளிநாட்டுத் தலையீடுகளுக்கும் இந்தியா எதிர்ப்பை தெரிவிக்கும். அரசாங்கமும் கூட்டமைப்பும் மட்டும் பேச்சுவார்த்தை நடத்தாது அனைத்து கட்சிகளும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். கடந்த கால யுத்தத்தினால் தமிழ் மக்கள் மட்டும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தவறான அபிப்பிராயம். இந்தியாவும் பாதிக்கப்பட்டது. இலங்கை இந்திய வர்த்தகம் பாதிக்கப்பட்டது. இந்தப் பிராந்தியம் பாதிக்கப்பட்டது. வெளிநாட்டுக் கொள்கை விவகாரத்தில் மாநில அரசுகள் தலையிடக்கூடாது எனக் கூறியிருக்கின்றார்.

மொத்தத்தில் இந்தப்பயணம் புதுடில்லியின் கட்டுப்பாட்டுக்குள் இலங் கையைக் கொண்டு வருவதற்கான முன் தயாரிப்பு பயணம் என்றே கூறவேண்டும். அதனால்தான் உத்தியோகபூர்வமற்ற பிரதிநிதிகளாக வந்திருக்கின்றனர். சுப்பிரமணிய சுவாமியின் உரையினைக் கேட்க இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் செல்லவில்லை. உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் வருவதாயின் பெறுமதியான விளைவுகள் கிடைக்க வேண்டும் இல்லையேல் பயணத்தின் நோக்கம் பலவீனமடைந்து எதிர் காலத்தில் அந்த நோக்கத்தை முன்னெடுக்க முடியாத நிலையும் உருவாகும். அதனால் உத்தியோகபூர்வ பிரதிநிதிகளை இந்தியா அனுப்பவில்லை.



இஸ்ரேலின் தாக்குதலை கண்டித்துள்ளதோடு ஐ.நா மனித உரிமைகள் பேரவை அதனை விசாரணை செய்ய வேண்டும் எனவும் கூறியிருக்கின்றது. இங்கு நாடுகளின் இறைமையில் தலையிடக் கூடாது என்ற கொள்கை எங்கே போனது.

இதற்கு அப்பாலும் சென்று தமிழர் பிரச்சனை அதிகரித்தளவில் சர்வதேச மயமாகுவதையும் தாங்கள் விரும்பவில்லை என பாரதீய ஜனதாக்கட்சியின்

நியத்தலையீடுகளை அதிகரிக்கச்செய்வதோடு தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் பாத்திரத்தையும் வெகுவாகக் கீழிறக்கும் என மோடி அரசாங்கம் கருதுகின்றது.

பேச்சுவார்த்தை விடயத்திலும் இலங்கை அரசின் கருத்துப்பக்கமே சேஷ்த்திரி சாரி நிற்கின்றார். அரசு - கூட்டமைப்பு பேசுவதை விட அனைத்துக் கட்சிகளும் பேசித் தீர்மானிக்க வேண்டும் எனக் கூறுகின்றார். சாராம்சத்தில் இது தெரிவுக்குழு யோசனையை ஒத்ததாக உள்ளது.

மொத்தத்தில் இந்தப்பயணம் புதுடில்லியின் கட்டுப்பாட்டுக்குள் இலங்கையைக் கொண்டுவருவதற்கான முன் தயாரிப்பு பயணம் என்றே கூறவேண்டும். அதனால் தான் உத்தியோக பூர்வமற்ற பிரதிநிதிகளாக வந்திருக்கின்றனர். சுப்பிரமணியசுவாமியின் உரையினைக்கேட்க இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் செல்லவில்லை. உத்தியோக பூர்வ பிரதிநிதிகள் வருவதாயின் பெறுமதியான விளைவுகள் கிடைக்கவேண்டும் இல்லையேல் பயணத்தின் நோக்கம் பலவீனமடைந்து எதிர்காலத்தில் அந்த நோக்கத்தை முன்னெடுக்க முடியாத நிலையும் உருவாகும். அதனால் உத்தியோக பூர்வ பிரதிநிதிகளை இந்தியா அனுப்பவில்லை.

தமிழ்த்தரப்பு இந்தப் புதிய சூழலை தெளிவாக அடையாளம் காணவேண்டும். அதனடிப்படையில் மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுப்பதற்கு தயாராக வேண்டும்.

சர்வதேச மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் மோடி அரசாங்கத்தின் நகர்வுகளை தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். இதற்கு மாறிவரும் புதிய உலக ஒழுங்கு தொடர்பான புரிதலை முதலில் நாம் பெற வேண்டும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்கா சோவியத் யூனியன் என்கின்ற இரண்டு வல்லரசுகள் எழுச்சியடைந்தன. உலகம் இந்த இரண்டு வல்லரசுகளின் ஆதிக்கத்தில் இருந்தது. இதன் விளைவாக நேட்டோ, வார்சோ அமைப்புகளும் உருவாகியிருந்தன. இவ் அதிகாரப் போட்டியை சமநிலைப்படுத்தி ஐ.நா சபை உருவாக்கப்பட்டது.

1990களின் ஆரம்பத்தில் சோவியத் யூனியனின் சிதைவுடன் அமெரிக்க ஏக வல்லரசாக மாறியது. அதற்கு ஏற்பவே உலக ஒழுங்கு மாற்றியமைக்கப்பட்டது. ஐ.நா சபை பெயரளவு சபையாக மாறியது. ஆனால் 2010இலிருந்து

(19ஆம் பக்கம் பார்க்க)



கூட்டமைப்பினருக்கு சுவாமியின் உரை இந்தியா தொடர்பான நம்பிக்கையின்மையை தமிழ்மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிடும் என்ற அச்சம் தோன்றியுள்ளது. அது தோற்றம் பெற்றால் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலிற்குள் நிற்கும் கூட்டமைப்பை நோக்கியும் கேள்விக்கணைகள்

இலங்கையில் வெளிநாட்டுத் தலையீடுகளை அனுமதிக்க முடியாது என்பது காங்கிரஸ் கால வெளிநாட்டுக் கொள்கையே. மோடி அரசாங்கமும் அதனைத் தான் பின்பற்றப்போகின்றது. ஆனால் இதே மோடி அரசாங்கம் காஸா மீதான

தலைவர்கள் பலர் ஏற்கனவே கூறியிருக்கின்றனர். கொழும்பு எப்போதும் புதுடில்லியின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்பதே இந்தக் கருத்திற்கு பின்னாலுள்ள இலக்காகும். அதிகரித்த சர்வதேச மயமாகுதல் இலங்கையில் அந்

# கனவுகள் மெய்ப்பட வேணும் பாருங்கோ

நையாண்டி
கல்வயல் கனகசிங்கம்

வணக்கம் வணக்கம்
நான் கல்வயல் கனகசிங்கம். எப்பிடி உங்களின்ர பாடு. இருந்திருந்திட்டு அதிசயங்கள் நடக்கிறது மாதிரி கூட்டமைப்பு மாகாணசபை உறுப்பினர்கள் 33 பேர் ஒன்று சேர்ந்து நவநீதம்பிள்ளை அம்மையாருக்கு கடிதம் எழுதியிருக்கினம். கடிதம் பிந்திப்போச்சுது எண்டது ஒருபக்கம் இருக்க என்னடாப்பா இவங்களுக்கு மானம் ரோசம் பொத்திக்கொண்டு வந்திட்டுதோவெண்டு எனக்கு பலத்த சந்தேகம் பாருங்கோ.

ஆனால் வடமாகாண அமைச்சர் ஒருவர் உண்மையை உளறிப்போட்டார் பாருங்கோ. உண்மையில கடிதம் பென்சனில வீட்டுக்கு போற நவநீதம்பிள்ளை அம்மையாருக்கு வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கவெண்டு தான் தாங்கள் எல்லோரிடமும் ஒப்பம் பெறப்பட்டதாம். எதிலயும் குறுக்கால ஓடுற சிவஞானத்தாரையும் விக்கியரையும் விட்டுட்டுத்தான் கையொப்பம் வேண்டியிருக்கு.



பிறகு கடிதத்தை அனுப்பையுக்குள்ளதான் ஆள் விசயத்தை மாற்றிப்போட்டு. அனுப்பினதெண்ட உண்மை உறைச்சிருக்கு. ஆனால் நாங்கள் கையொப்பம் வைக்கவில்லையெண்டு பிறகு சொன்னால் சிவாஜிலிங்கம் பேப்பர்காரங்களிட்ட சொல்லி நாறடிச்சுப் போடுமென்ற பயத்தில தானாம் அடக்கிக்கொண்டிருக்கினம். ஏற்கனவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மனசில வைச்சு பேப்பர்காரர் கிழிகிழியெண்டு கிழிச்சுப்போட்டு எங்கையெண்டு திரியிறாங்கள். பிறகும் அகப்பட்டால் துவைச்செடுத்துப் போடுவாங்களெண்ட பயம் தான்.

போதாக்குறைக்கு அதிகாரமில்லா மகாணசபையை ஏற்றுக் கொள்ள வேண்டாம் எண்டு சொல்லசொல்ல கேட்காமல் மாகாணசபையில முட்டிமோதி போட்டிபோட்டுட்டு சகல சுகங்களையும் அனுபவிக்கினம். மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியாதமைக்கு இப்ப ஆயிரம் நொட்டையளை ஊடகங்களுக்கும் சனத்துக்கும் மட்டும் சொல்லிக்கொண்டு திரியினம். போற போக்கை பார்த்தால் அவையின்ர வீட்டு குழாயில தண்ணீர் வராவிட்டாலும் ஆளுநர் சதி, பிரதம செயலாளர் துரோகமெண்டு அறிக்கை விடுவினம். ஆனால் எங்கட மக்களுக்கு உதவி செய்ய இந்த மாகாண சபையில எந்த அதிகாரமும் இல்லை எண்டு ஒரு தீர்மானத்தை முதலமைச்சர் தலைமையில எல்லோரும் சேந்து எடுத்து ஐ.நாவுக்கோ, இராஜதந்திரியளுக்கோ அனுப்ப இவையள் ஒருபோதும் தயாராக இல்லை. ஏனென்டால் இந்திய எஜமான் கோவிச்சுடுவாரு. ஆனால் இருட்டினாப்பிறகு பின் கதவால ஆளுநரை அவற்றை மாளிகையில சந்திச்சு அலுவல் முடிச்சுப்போட்டு வருவினம். குடும்பம், குட்டியள் சுற்றுலா போக குளிரூட்டின சொகுசு கார், மாதம் அப்பிடி இப்பிடியெண்டு நல்ல வருமானம் பிறகென்ன சனத்துக்கு தண்ணியில்லையோ தீனியில்லையோ எல்லாத்துக்கும் ஆளுநரும் பிரதம செயலாளரும் சதி எண்டு சொல்லிப்போட்டு அடுத்த தேர்தலில வரேக்கை கண்டுகொண்டால் சரி.

உலகம் முழுக்க சொல்லுது இஞ்சை நடந்தது இனஅழிப்பெண்டு. ஆனால் அவையோ இன அழிப்பிற்கு ஒப்பானதெண்டு தீர்மானம் கொண்டுவருகினம். இன அழிப்பிலிருந்து சர்வதேச பாதுகாப்பெண்டு கதைச்சால் இப்ப உதுக்கு என்ன அவசரமெண்டு கேட்கினம்.

கறையான் கீழால அரிச்ச மாதிரி தமிழர் தாயகம் சூறையாடப்பட்டுக்கொண்டிருக்குது. கிழக்கை அப்பிடியே தாரைவார்த்து கொடுத்திட்டினம். இப்ப மிச்சமிருக்கிற வடக்கையும் தாரை வார்த்துப்போட்டுத்தான் ஓய்வினம். முழுத்துக் கொண்டென்று படைத்தளங்களை கட்டித் தீர்க்கிறாங்கள். வலி.வடக்கில ஆமிக்காரங்களின்ர குடும்பங்களை குடியமர்த்த வீட்டுத்திட்டம் கட்டுறாங்கள் எல்லைக்கிராமங்களில நிலம் பறிபோகுது, குடியேற்ற திட்டங்கள் வேகமாக நடக்குது. மனிதஉரிமை செயற்பாட்டாளர்கள் பத்திரிகையாளர்களெண்டு எல்லோருக்கும் விசாரணைகளும் அலைக்கழிப்புகளும் தொடருது. உவங்களோ இப்ப என்ன அவசரமெண்டு கேக்கிறாங்கள். சத்தியமா உவங்கள் அதிகாரத்தில இருந்துகொண்டு இந்த அநியாயங்களை தடுக்கிறமாதிரி நடித்துக்கொண்டு தடுக்க கூடியவர்கள் தலமைக்கு வந்துவிடாதபடியும் நடிக்கிறாங்களோவெண்டு எனக்கு சந்தேகமா கிடக்குது.

அது ஒருபுறமிருக்க பழையபடி டெல்லிக்கு காவடியெடுக்கிற குலத்தொழிலை கூட்டமைப்புகாரர் ஆரம்பிச்சிருக்கினம். காங்கிரஸ் ஆட்சி போய் பாரதிய ஜனதாக்கட்சி ஆட்சி வந்தால் தமிழீழம் வந்து சேர்ந்திடுமெண்டு சனத்துக்கு ரீல் சுத்திக்கொண்டிருந்தவங்கள். ஆட்சிக்கதிரையில மோடி ஏறினாப்பிறகு மூச்சுக்கூட விடேயில்லை. அவங்கள் தெளிவாகச் சொல்லிப்போட்டாங்கள் இந்தியாவின் வெளியுறவு கொள்கை மாறாதெண்டு.

போதாக்குறைக்கு சுப்பிரமணியசுவாமியை பல சுற்று இலங்கைக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறாங்கள். மஹிந்தராசா விரும்பினால் தான் கூட்டமைப்புகாரரை மோடி சந்திப்பாரெண்டு அந்த ஆள் கொழும்பில கொழுப்போட கதைக்குது. இவையோ அந்த ஆளுக்கு மனவியாதியெண்டு விளக்கம் கொடுக்கினம். நான் ஒரேயொரு கேள்வி கேட்கிறன், இத்தின சுற்று டெல்லியில சுத்திவந்து என்னத்தை கண்டனியள். உதையே திருப்பதி கோயிலுக்குப் போய் சுத்தியிருந்தால் தமிழ் சனத்திற்கு விமோசனம் கிடைச்சிருக்குமோ என்னவோ? பிள்ளை, குட்டியள பார்க்கப்போய் வாறதும் இந்திய பயணக்கணக்கில இருக்கிறதோ? என்னவோ? அது சரி இப்ப டெல்லிக்குப் பறந்துபோய் ஏதோ மோடியிட்ட தமிழருக்கு வேண்டியதை கேட்கவா போகினம். இல்லையே மோடி ஐயா காலால் இடும் கட்டளையை தலையால் நிறைவேற்றும் உத்தரவு பெறவல்லவா போயிருக்கினம்.

தமிழ் அரசியல் தலைமைகள் பலவீனப்பட்டும் முடக்கப்பட்டும் போற சூழல் ஆரோக்கியமாக இருக்கப்போறதில்லை. இலங்கை அரசு திட்டமிட்டபடி தன்ரை அனைத்து நடவடிக்கைகளையும் தமிழர் தாயகத்தினில் முன்னெடுத்தே வருகின்றது. நில ஆக்கிரமிப்பு, குடியேற்றங்கள், அச்சுறுத்தல்கள் என எல்லாமுமே துல்லியமாக நடக்குது. ஆமிக்கு ஆள்பிடிக்கிறது முதல் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளை படையினருக்கு கொத்தணி முறையிலான வீடு கட்டுறது வரை தொடருது.

ஆனால் இதுகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்ட வேண்டிய அதிகாரத்தை கையில் வைத்திருக்கிற தமிழ் அரசியல் தலைமைகள் ஒய்வெடுத்துக்கொண்டிருக்கினம். குழுச்சேர்த்து மற்றைய ஆட்களில நொட்டை பிடிக்கிறதும் குற்றஞ் சுமத்திறதும் தொடருது. என்னத்தை செய்து கிழிக்கினமெண்டால் சனத்துக்கு தண்ணீர் பைப்பில கொடுத்திட்டு ஒரு போட்டோ மாட்டுவண்டி சவாரிக்கு போட்டு ஒரு போட்டோவெண்டு பேப்பர்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கினம்.

இன்னொரு பக்கம் எங்கை மாலை விழுமெண்டு கழுத்தை ஒட்டகச்சிவிங்கி கணக்கில நீட்டிக்கொண்டு திரியினம். சனம் பாவம் போட்ட புள்ளடியை மறந்து அடுத்த வேளை வயிற்றைக்கழுவ புறப்பட்டிட்டுதுகள். ஆனாலும் இவையோ தெளிவாக அடுத்த முறை எப்பிடி எம்பி சீற்றை பிடிக்கிறதெண்டு வியூகம் வகுக்க தொடங்கியிட்டினம். இப்பவே குழுச்சேர்ப்பு குடுமிப்பிடி சண்டையெண்டு தொடங்கியிட்டினம். தள்ளுவண்டியில வந்தேனும் அரசியல் செய்து மக்களுக்கு சேவையாற்ற வேணுமெண்டு மூத்த (?) அரசியல் தலைவர்கள் பலரும் அலைஞ்சு திரியினம்.

உண்மையில எங்கடை சனம் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை. நல்லதொரு அரசியல் தலைமைக்கு அலைஞ்சு திரியுதுகள். யார் அந்த வெற்றிடத்தை நிரப்பப்போகினம்? தந்தை செல்வா சொன்ன அதே கடவுள் தான் காப்பாற்ற வேணும்.

## நையாண்டியார் பதில்கள்

**ப.சத்தியசீலன்,**
**இமையாணன், உடுப்பிட்டி.**

**கேள்வி – கூட்டமைப்பின் டெல்லி விஜயம்?**

**பதில்** – பத்திரிகைகளிற்கு இரண்டு நாட்கள் தலைப்பு செய்திக்கு உதவும்.மற்றைய படி எதுவுமே நடக்காது. வழமை போல எஜமான் எங்களுக்கு தங்களின் உத்தரவு என்ன என்று கேட்டிருப்பார். அதோட அனைவருக்கும் வாகன சுகங்கள், சகல சௌபாக்கியங்களும் கோரியிருப்பர். மற்றது மக்களை ஏமாற்ற வசதியா சிவில் ஆளுனரை போடச் சொல்லுங்கோ முடியாதுபோனால் பிரதம செயலாளரையாவது மாத்தித்தாருங்கோ என்று கேட்டிருப்பினம். அவ்வளவுதான்.

**இ.தனுசியா,**
**திருவையாறு, கிளிநொச்சி.**

**கேள்வி – கடந்த ஒரு வருடத்தினுள் வடமாகாணசபை சாதித்ததென்ன?**

**பதில்** – ஐம்பதினாயிரம் வரையில் கொடுப்பனவு, அதிசொகுசு கார், விரைவில் இந்திய அரசினது இலவச கார், கார் வாங்க சுங்க தீர்வை விலக்கு, உதவியாளர்களிற்கென ஒருபகுதி கொடுப்பனவு

**ம.வாஸ், மன்னார்**

**கேள்வி – போப்பாண்டவரின் இலங்கை விஜயம்?**

**பதில்** – தமிழ் அரசியல் தலைமைகளும் புலம்பெயர் தமிழரும் முயற்சி செய்து அவரை வடக்கு கிழக்குக்கு வரச்செய்து நிலைமையை நேரில் பார்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் இலங்கை ஆட்சியாளர்களது இரத்த கறைகளை கழுவி வெளி உலகிற்கு புனிதர்களாக காண்பிக்கவே உதவும். அடுத்த ஜனாதிபதி தேர்தலிலோ பாராளுமன்ற தேர்தலிலோ வெற்றியை தக்கவைத்துக்கொள்ள உதவும் அவ்வளவே.

**த.சிவரூபன்**
**செட்டிக்குளம், வவுனியா**

**கேள்வி – ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் சாத்தியமா?**

**பதில்** – மஹிந்தவோ, பொதுவேட்பாளரோ சிங்கள தேசத்திற்கான தலைவரை தெரிவு செய்யும் தேர்தலில் தமிழ் மக்களை பொறுத்தவரையினில் வெறுமனே வேடிக்கை பார்க்கும் மனோநிலையே இருக்கும். கடந்த 2010ல் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தாது எஜமான்களின் உத்தரவை கேட்டு சரத்பொன்சேகாவை ஆதரிக்க முற்பட்டு இப்போது "மாதன முத்தா" க்களாக இழுபடும் கூட்டமைப்பு என்ன செய்யப்போகின்ற தென்பது தெரியவில்லை.

**ப.சாந்தன்**
**களுவான்சிகுடி, மட்டக்களப்பு**

**கேள்வி – அண்மைக்காலமாக தமிழர் தாயகமென்பதில் கிழக்கு பற்றி கதைக்கும் மனப்பாங்கு குறைந்து செல்கின்றதே.**

**பதில்** – இலங்கை அரசு வடக்கு– கிழக்கு இணைந்த தாயகமென்ற மையக்கருத்தை சிதைப்பதில் வெற்றிபெற்று வருவது தெரிந்ததே. தாயகக் கோரிக்கையை கைவிட வேண்டும் என்றது இந்தியாவின் உத்தரவு. அந்த உத்தரவுக்கு அமைய தமிழ் தலமைகள் கிழக்கு பற்றி பேசுவதனை முழுமையாக கைவிட்டுள்ளதன் மூலம் துணை போகின்றன. அங்குள்ள அரசியல் தலைவர்களும் பெயரளவில் தலைவர்களாக உள்ளதே பரிதாபம்.

# தனித்து விடப்பட்ட பாரதிபுரம்

து.தமிழ்ச்செல்வன்



1970களில் இனக்கலவரங்களால் தென்பகுதியில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழ் மக்கள் யாருடைய உதவியுமின்றி தம்முடைய முயற்சியினால் காடுகளை வெட்டி உருவாக்கிய கிராமம்தான் கிளிநொச்சி பாரதிபுரம். யுத்தத்திற்கு முன்னர் வாழ்க்கையின் எதிர்காலம் பற்றி ஓர் நம்பிக்கை இருந்ததாக கூறும் அந்த மக்கள் யுத்தத்திற்கு பின்னர் தமது வாழ்வு துயரம் சுமந்ததாகவே காணப்படுகின்றது. என்றும் கூறியுள்ளனர். இதனால் யுத்தத்திற்கு முன்னரும் பின்னருமான இவர்களது வாழ்வுப்பாதை வேறுபட்டதாகவே உள்ளது. 18 தடவைகள் இடப்பெயர்வுகளை சந்தித்திருக்கின்றார்கள். இதனால் இவர்களது அனைத்து உடமைகளையும் இழந்து இன்று ஏக்கத்துடன் தமது வாழ்க்கையைத் தொடங்கியிருக்கின்றார்கள்.

2009ம் ஆண்டு போர் முடிவுற்ற பின்னர் 2011ம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள். ஆரம்பகட்டத்தில் சில நிறுவனங்கள் உதவிகளை வழங்கியிருந்தாலும் காலப்போக்கில் இவர்களை எவருமே கண்டு கொள்ளவில்லை.

மூன்று பகுதிகளைக்கொண்ட இக்கிராமம் 750 குடும்பங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இன்றைய காலப்பகுதியில் இவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். இந்த பிரச்சினைகளை உரிய வகையில் அரசுதரப்பிடம் கூறியும் எவருமே கண்டு கொள்ளவில்லை.

### பிரச்சினைகளுக்குள் மூழ்கியிருக்கும் பாரதிபுரம்

பாரதிபுரம் இன்று எல்லோராலும் கண்டுகொள்ளாத நிலைக்குத்தள்ளப்பட்டிருக்கின்றது. ஓரிரு அரசியல் தலைவர்கள் மட்டும் தேர்தல் காலங்களில் வந்து போகின்றனர். அவர்களது தேவைகள் நிறைவேறிய பின்னர் மறந்து போகின்றனர். இந்த கிராமத்தின் மிக முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று நீர்ப் பிரச்சினையாகும்.

பாரதிபுரம் வடக்கு, மத்தி, மேற்கு என்ற பகுதிகளைக்கொண்டிருக்கின்றது. இதில் பெரும் பகுதிகள் அனைத்தும் உவர்நீர் பிரதேசமாகும். இதனால் அப்பகுதி மக்கள் வடபகுதி எல்லைக்கோ அல்லது வேறு இடங்களை நோக்கியோ தண்ணீரை பெற்றுக்கொள்ள செல்லவேண்டியிருக்கின்றது. இப்படியிருக்கும் போது இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டிருக்கும் வறட்சியும் இவர்களை மேலும் காயப்படுத்தியிருக்கின்றது. அத்தோடு தொழிலின்மை போதிய வருமானம் இன்மை, போக்குவரத்துப் பிரச்சினைகள் என பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

நாடு முழுவதும் வறட்சி ஏற்படும்போது மட்டும் இப்பகுதி மக்களுக்கு தண்ணீர் வழங்க சில அமைப்புகள் முன்வருகின்றன. மழை பெய்ததும் அப்பகுதிக்கான நீர்விநியோகத்தையும் நிறுத்திக்கொள்கின்றனர். ஆனால் அப்பகுதியில் கிணறுகள் உவர் நீராக உள்ளன என்பதனை நினைவிற் கொண்டு அவர்களுக்கு குடிநீர் தொடர்ந்து வழங்க அல்லது நன்னீர் விநியோகத்தை ஏற்படுத்திக் கொடுக்க யாரும் முன்வருவதில்லை.

### மின்சாரத்தை எதிர்பார்த்திருக்கின்றோம்

நகரின் அண்மையில் காணப்படும் இந்த கிராமத்திற்கு இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை. பிரதான பாதையில் இருந்து 250m தூரம் வரையிலேயே மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. மற்றைய பகுதிகளுக்கு இல்லை. இதனால் இந்த கிராமம் இருளில் மூழ்கியே காணப்படுகின்றது. மின்சாரத்தை பெற்றுத்தருமாறு பல தமிழ் அரசியல் தலைவர்களிடமும், அரசாங்க செயலகத்திடமும் முறையிட்டும் எந்தப் பலனும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.



### சிறுவயதிலே கூலிவேலைக்கு செல்லும் சிறுவர்கள்

இந்தக் கிராமத்தில் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்று கல்வி. கிராமத்திலுள்ள சிறுவர்கள் குடும்பக் கஷ்டங்களை கடந்து விருப்பத்துடன் கல்வி கற்பதற்கான எந்த வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இந்த கிராமத்தில் இருக்கின்ற பாடசாலை சாதாரண தரம் வரையிலேயே காணப்படுகின்றது மேலதிகக் கல்வியை தொடரவேண்டியிருந்தால் நகர்ப்புற பாடசாலைக்கே செல்லவேண்டும். இதனால் ஓரிரு மாணவர்களே உயர்தர பாடசாலையை நோக்கி செல்லுகின்றனர். மற்றைய மாணவர்கள் கல்வியை தொடர முடியாமல் இடையிலேயே வீட்டின் வறுமையால் கூலிவேலைக்கு செல்லுகின்றனர். கிராமத்தின் மத்தியில் தனியார் கல்விநிலையம் ஒன்று உள்ளது. அதில் சேர்ந்து கல்வி கற்பதற்கான வசதி பெருமளவு மாணவர்களுக்கு கிடையாது. அதனால் பிள்ளைகளை பகுதிநேர வகுப்புக்கு செல்ல பெற்றோரால் அனுப்ப முடியாமல் இருக்கின்றது.

### முன்னாள் போராளிகளும் விதவைகளும்

போருக்குப்பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பல இளைஞர்கள் இக்கிராம வாழ்க்கைக்குள் உள் நுழைந்திருக்கின்றார்கள் இதனால் இவர்கள் இன்று பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பதிவுகள் விசாரணைகள் என தொடர்ச்சியாக படியேறிக்கொண்டே இருக்கின்றனர். ஏதும் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது விசாரணைகளுக்கு தள்ளப்படுகின்றனர். இதனால் இவர்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். அத்தோடு, இங்கு 30ற்கு மேற்பட்ட விதவைக் குடும்பங்கள் இருக்கிறனர். அவர்களுக்கு எந்த கொடுப்பனவுகளும் கொடுக்கப்படுவதில்லை. இவர்கள் நாளாந்த கூலிவேலைக்கு சென்று தமது குடும்பத்தை சுமக்கின்றனர்.

இங்கு விதவைகளாக இருப்பவர்களின் கணவன்மார் யுத்தத்தில் இறந்திருக்கின்றனர் அதனால் தங்கள் நிலைமைகளை பலரிடம் எடுத்துக் கூறியும் எவரும் கண்டுகொள்ள வில்லை என குறிப்பிடுகின்றனர்.

### அதிகரித்திருக்கும் கலாச்சார சீரழிவுகள்

போருக்கு முன்னர் இந்தக் கிராமத்தில் இவ்வாறான கலாச்சார சீரழிவுகள் எதுவும் இடம்பெறவில்லை. போருக்கு பின்னரே பல கலாச்சார சீரழிவுகளை கண்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் அப்பகுதி வீடுகளில் வாடகைக்கு குடியமர்கின்றார்கள். இதனால் களியாட்டம், போதைப் பொருள் பாவனை, போன்றன அதிகரித்திருக்கின்றன. அத்தோடு கிராமத்தின் மேற்கு பகுதியில் இருக்கும் விடுதி ஒன்றின் மூலம் விபச்சார செயற்பாடுகள் இடம்பெறுவதாக மக்கள் கூறிக்கொள்கின்றனர். இந்த விடயம் தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்டு இரண்டு தடவைகள் குறித்த விடுதி தடைசெய்யப்பட்டது. தற்போது மீண்டும் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் கவலையை வெளியிட்டுள்ளனர்.

### தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடுகளை வரவேற்கின்றோம்

நீண்ட காலமாக இந்த கிராமத்தில் நிலவி வந்த குடிநீர்ப்பிரச்சினை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மூலம் தற்காலிகமாக தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மக்களின் துயரப் பிரச்சினைகளில் ஒன்று குறைந்திருக்கிறது. இதுவரைக்கும் பல அரசியல் கட்சிகளிடம் இது தொடர்பாக முறையிட்டாலும் பெரிதாக கவனம் செலுத்தவில்லை. ஆனால் இன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி எமது வாழ்க்கையில் அக்கறைகொண்டு ஏற்படுத்திய செயற்திட்டத்தை வரவேற்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்திருக்கின்றனர். அத்தோடு இவர்களது இந்த செயற்திட்டத்திற்குப்பின்னரே வேறு அரசியல் கட்சியினர் விழுந்தடித்து குடிநீர் வழங்க முன்வந்துள்ளனர். இவ்வாறு முந்திச்செல்லும் அரசியல் கட்சிகள் காலப்போக்கில் கைவிட்டு விடுவார்கள் இதனால் மக்களது எதிர்காலமும் எதிர்பார்ப்புகளும் கேள்விக்குறியாக இருக்கின்றன.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கண்டன அறிக்கை

## சப்ரகமுவ மாணவன் மீதான தாக்குதலுக்கு கண்டனம்



சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் யாழ் முகமாலையைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன் (வயது 21) என்ற மாணவன் மீது கடந்த 3.8.2014 அன்று அதிகாலை 2.30 மணியளவில் மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

அந்த கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது

சிங்கள பௌத்த தேசியவாதமானது இலங்கை ஓர் சிங்கள பௌத்தநாடு, அதில் சகல அதிகாரங்களும் சிங்கள பௌத்தர்களுக்கே உரியதென்ற கருத்து நிலையை கொண்டுள்ளது. அந்த அதிகாரத்திற்கு சவால் விடக்கூடிய ஆற்றலுள்ளவர்களாக வேறு எந்த இனத்தவரோ மதத்தவரோ வளர்ந்து விடக்கூடாது என்ற சிந்தனை அதனிடம் மேலோங்கி வருகின்றது. அத்தகைய சிந்தனைப் போக்கின் வெளிப்பாடாகவே மேற்படி சம்பவங்கள் அமைகின்றன.

உண்மைநிலை இவ்வாறிருக்க தாக்கப்பட்ட மாணவன் தன்னைத் தானே தாக்கினார் என்று உயர்கல்வி அமைச்சர் கூறியிருப்பதானது இனவாதத்தின் குரூர முகத்தினை மூடி மறைப்பதுடன், இச்சம்பவத்தின் உண்மையான பின்னணியையும் திசை திருப்புவதாகவும் அமைந்துள்ளது. உயர்கல்வி அமைச்சரின் இத்தகைய செயற்பாடானது சம்பவத்தில் ஈடுபட்டவர்களை பாதுகாத்துள்ளதுடன், எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு அரசின் முழுமையான ஒத்துழைப்பும் பாதுகாப்பும் இருக்கும் என்ற சமிக்ஞையையும் வெளிப்படுத்தியுள்ளது.

சிங்கள பௌத்த தேசியவாதத்தின் இத்தகைய மனோநிலையோடு தமிழ்த் தேசமானது நல்லிணக்கத்திற்கு வர வேண்டுமெனவலியுறுத்தும் சர்வதேச சமூகத்திற்கு இத்தகைய சம்பவங்கள் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

மிலேச்சத்தனமான மேற்படி தாக்குதல் சம்பவத்தினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பக்கபலமாக நாம் எப்போதும் நிற்போம் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றுள்ளது.

## மாணவர்களுக்கு நிதியுதவி




யாழ். பண்டத்தரிப்புஜசிந்தாறோ.க.த.க.வித்தியாலய மாணவிகளுக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறங்கா விழிகள் அமைப்பின் அனுசரனையுடன் நிதியுதவி வழங்கியுள்ளனர

பாடசாலையில் 20.08.2014 அன்று நடைபெற்ற இச் சந்திப்பிலே கட்சியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன் அவர்களால் இந் நிதியுதவி வழங்கப்பட்டது. கபடி விளையாட்டில் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக்கு சீருடையினைப் பெற்றுக் கொள்வதற்காகவே செயலாளர் செ.கஜேந்திரன் அவர்களால் பாடசாலையில் வைத்து துணை அதிபரிடம் இந்த நிதி கையளிக்கப்பட்டது.

## குடிதண்ணீர் வழங்கல்

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறங்கா விழிகள் அமைப்பின் ஊடாக 21.08.2014 பாரதிபுரம் மத்தி, மலையாளபுரம், கிருஸ்ணபுரம் மக்களுக்கு எட்டு நீர் கொள்கலன்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம் போன்ற கிராம மக்களுக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான சந்திப்பின் போதே குடிதண்ணீர் கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ளது

கடந்த மாதம் எட்டு நீர் கொள்கலன்கள் இக் கிராமங்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா. கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம். மணிவண்ணன், மத்திய கட்சி உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள். பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்

## வரதராஜனின் இறுதியாத்திரை



பிரபல பொருளியல் ஆசானும், தமிழ்த்தேசிய அரசியலின் தீவிர செயற்பாட்டாளரும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவருமான சி.வரதராஜன் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சி புதன்கிழமை (20.08.2014) நடைபெற்றது.

பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இறுதிக் கிரியைகளும் அஞ்சலி நிகழ்ச்சியும் நடைபெற்று அவரது புகழுடல் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள DCM கல்வி நிறுவனத்தில் மாணவர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் அஞ்சலி செலுத்தியபின் அவரது புகழுடல் கோம்பையன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா.கஜேந்திரன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அரசியல் பிரமுகர்களும் அதிக எண்ணிக்கையான கல்விமான்களும் பெருந்தொகையான மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## அறிவொளி கல்வி நிலையம் திறப்பும் உபகரணங்கள் வழங்கலும்

இலவச அறிவொளி கல்வி வளர்ச்சி நிலைய திறப்பும், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் 14.08.2014ம் திகதி வவுனியா வடக்கு பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் முற்பகல் 11 மணிக்கு இலவச அறிவொளி கல்வி வளர்ச்சி நிலைய திறப்பும், பிற்பகல் 2 மணிக்கு மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றுள்ளன.

வவுனியா வடக்கு கனகராயன் குளம், பெரிய குளம், புளியங்குளம், முத்துமாரி நகர் போன்ற இடங்களில் இலவச அறிவொளி கல்வி நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டன.

இந்த நிலையத்தில் மாணவர்களுக்கு இரு பிரிவுகளாக வகுப்புக்கள் இடம் பெறவுள்ளன. அதாவது புலமைப் பரிசில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும், தரம் 1, 3 மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும் வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கனடா உறங்கா விழிகள் நிதியுதவியுடன் 110 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொதுச்செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். வவுனியா வடக்கு நெடுங்கேணி சேனப்புலவு கிராமத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் இலவச அறிவொளி கல்வி நிலையம் திறக்கப்பட்டு இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களுக்கென தனியான வெ

## அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கத்துடன் ஒரு நேர்காணல்

**நேர் கண்டவர்-நந்தன்**



**இலங்கை அரசாங்கம் போர் வெற்றிக்கு பின்னர் வருடாவருடம் பாதுகாப்பு மாநாட்டினை நடாத்தி வருகின்றது. இந்தத்தடவையும் நடாத்தியுள்ளது இது பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**

இலங்கை அரசாங்கம் வருடாவருடம் நடாத்தும் பாதுகாப்பு மாநாட்டினை இந்த வருடமும் வெற்றிகரமாக நடாத்தி முடித்திருக்கின்றது. “இலங்கை எழுச்சி பெறும் நாட்டின் சவால்கள்” என்பதே மாநாட்டின் தலைப்பாகும். இந்தியப் பிரதிநிதிகள் தான் இந்தத் தடவை மாநாட்டில் முக்கிய இடத்தை பெற்றிருந்தனர். இலங்கை அரசாங்கமும் இந்தியாவை குளிர வைப்பதிலேயே அதிக கவனம் செலுத்தியிருந்தது. ஜனாதிபதி தனது சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டிலும் இந்தியாவை குளிர வைக்கும் வகையில் நரேந்திரமோடி இலங்கை வருவதை எமது மக்கள் விரும்புகின்றனர் எனக் குறிப்பிட்டிருந்தார். இந்தியாவின் புதியஅரசாங்கம் தமிழர் விவகாரம் தொடர்பில் அடக்கிவாசிப்பதும் தமிழ்நாட்டு எதிர்பார்ப்புகளை கணக்கெடுக்காததுமே இலங்கையின் சந்தோச துள்ளலுக்கு காரணங்களாகும்.

இந்த மாநாடு தொடர்பாக அரசிற்கு பல இலக்குகள் இருக்கின்றன. அதில் முதலாவது போர் வெற்றியை பறை சாற்றுவது, பயங்கரவாதத்தை வென்றோம் என மார் தட்டுவது என்பவையாகும். போர் வெற்றியையே அரசியல் முதலீடாக கொண்டிருக்கும் அரசிற்கு வெற்றியை தொடர்ந்தும் கொண்டாடுவது தொடர்ந்தும் தொடர்ந்தும் நினைவூட்டுவது தவிர்க் கமுடியாத ஒன்று தான். அரசின் இருப்பிற்கு தற்போது ஆதாரமாக இருப்பவை இனவாத அரசியலும் இராணுவ இறுக்கமும் தான். இவற்றை நியாயப்படுத்துவதற்கும் இவ்வாறான மாநாடுகள் தேவையாக இருக்கின்றது.

இரண்டாவது ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் விசாரணைக்கு எதிராக ஒரு சர்வதேச வலைப்பின்னலை உருவாக்குவதாகும். மாறிவரும் உலக ஒழுங்கும் இவ் வலைப்பின்னலுக்கு உதவுகின்றது. புதிய உலக ஒழுங்கு வல்லரசுகளும் பிராந்திய அரசுகளும் செல்வாக்கு செலுத்தும் பல் அரங்க உலக ஒழுங்கு. இந்த உலக ஒழுங்கில் தனக் கான வெளியைக் கண்டுபிடித்து பலப்படுத்த அரசாங்கம் முனைகின்றது. பிரிக்ஸ் அமைப்பின் தோற்றமும் அதன் முன்னெடுப்புகளும் இன்னோர் வகையில் இலங்கைக்கு உதவுகின்றது. ஏற்கனவே அரசிற்கு ஆதரவான வலைப்பின்னலில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா, சில மத்தியகிழக்கு நாடுகள் சில ஆபிரிக்கநாடுகள் என்பன உள்ளன.

இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாக தென்னாசியாவில் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளதால் அதனை தனது வலைப்பின்னலில் சேர்க்கும் முயற்சியில் அரசாங்கம் தற்போது தீவிரமாக இறங்கியுள்ளது. அதனுடன் சேர்த்து ஜப்பானையும் கொண்டுவர முயற்சிக்கின்றது. இந்த பாதுகாப்பு மாநாடு அதற்கான ஒன்றுகூடலுக்கு வாய்ப்பினை கொடுத்திருக்கின்றது என்றே கூற வேண்டும்.

மூன்றாவது போருக்கு பின்னரான தனது அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பிரச்சாரப்படுத்துவதாகும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்கு எதிராக அரசாங்கத்தினால் தனது பக்க நியாயங்களுக்காக முன்வைக்கக் கூடியவை இந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மட்டுமே. குறிப்பாக வீதிகள் அமைத்தல், வர்த்தக நிலையங்களை உருவாக்குதல் என்பவற்றையே முன்வைக்கின்றது. பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பவை தொடர்பாக பெரிய முன்னேற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை பிரச்சாரப்படுத்துவதற்கு ஒரு மேடையாக அரசாங்கம் இந்த பாதுகாப்பு மாநாட்டினை பயன்படுத்தியுள்ளது.

நான்காவது படைவீரர்களை உற்சாகப்படுத்துவதாகும். போருக்கு பின்னர் கட்டிட வேலை, விவசாயம், கழிவகற்றல் எனப்பல கீழ்மட்ட வேலைகளில் படையினரை அரசாங்கம் ஈடுபடுத்தப்படுகின்றது. இதனால் படையினர் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான மாநாடுகள் அவர்களின் உளவியல் ரீதியான வீழ்ச்சியை தடுக்க உதவும் என அரசாங்கம் நினைக்கின்றது.

ஐந்தாவது சர்வதேச நாடுகளுடன் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்களை செய்து கொள்வதாகும். குறிப்பாக படையினருக்கு உயர்மட்ட பயிற்சிகளை வழங்குதல் போன்ற விடயங்களை இந்த மாநாடு மூலம் மேற்கொள்ள முயல்கின்றது.

ஆறாவது சிங்கள வாக்கு வங்கியினை அதிகரிப்பதாகும். சர்வதேச மாநாடுகள் சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் விம்பத்தை உயர்த்தும். பொதுநலவாய மாநாடும் அதனை உயர்த்தியிருக்கின்றது. அதுவும் வெற்றிப்பெருமிதத்தை பறைசாற்றும் பாதுகாப்பு மாநாடு அந்த விம்பத்தை அதிகம் உயர்த்தும். அமெரிக்கா ஆட்சிமாற்றத்திற்கான நடவடிக்கைகளை நேரடியாகவே முடக்கிவிட்ட நிலையில் தனது விம்பத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் அரசிற்கு இருக்கின்றது.

இந்த இலக்குகள் பலவற்றில் அரசாங்கம் வெற்றிகண்டுள்ளது என்றே கூற வேண்டும். அரசாங்கத்தின் போர் வெற்றியையும் வீதித் திட்டங்களையும் புகழாத நாடுகளே இல்லையென்று கூறலாம்.

இங்கே நாம் இன்னோர் விடயத்தையும் கவனிக்கவேண்டும். போர் இராணுவத்தையும் ஒரு அரசியல் சக்தியாக்கியது. அதனுடன் கலந்தாலோசிக்காமல் எந்த சமாதான செயற்பாட்டிற்கும் போகமுடியாத நிலை போர்க் காலத்தில் இருந்தது. அரசியல் சக்திகள் சர்வதேச உள்நாட்டு நிர்ப்பந்தங்கள் காரணமாக சமாதானம் பற்றிய தீர்மானங்களை எடுத்தாலும் இராணுவம் ஒரு எல்லைக்கு அப்பால் ஒத்துழைப்பதில்லை.

ரணில் விக்கிரமசிங்க பிரபாகரன் ஒப்பந்தம் இராணுவம் ஒத்துழைக்காததினால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. அந்த ஒப்பந்தத்தில் காலகட்டங்கள் பிரிக்கப்பட்டு ஒப்பந்த கடப்பாடுகள் சுமத்தப்பட்டிருந்தன.

போர் வெற்றிக்கு பின்னர் இராணுவமே அரசாக மாறிவருகிறது. ஆளுநர் பதவிகளுக்கு முன்னாள் இராணுவத்தளபதிகள் நியமிக்கப்படுகின்றனர். வெளிவிவகாரப் பணிகளிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். பல முன்னாள் தளபதிகள் வெளிநாட்டுத் தூதுவர்களாகவும் பதவி வகிக்கின்றனர். நகரஅபிவிருத்தி அதிகாரசபை பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இராணுவத்தினர் நகர நிர்மாணப் பணிகளில் ஈடுபடுகின்றனர். அரசு சாரா அமைப்புகளை பாதுகாப்பு அமைச்சு கட்டுப்படுத்துகின்றது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தலைமைத்துவ பயிற்சியை வழங்குகின்றது. மக்களோடும் இராணுவம் நெருக்கமாகச் செயற்படுகின்றது.

எனவே இந்த மாநாட்டினை வளர்ந்துவரும் இராணுவ ஆட்சியின் ஒரு அங்கமாகவும் பார்க்கவேண்டும்.

**இலங்கையின் பாதுகாப்பு மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வது பற்றி தமிழ்நாட்டில் பலத்த எதிர்ப்புக்கிளம்பியிருந்தது. ஆனாலும் இந்தியா கலந்து கொண்டது. தனது பிரதிநிதிகயாக தமிழ்த்தேசிய எதிர்ப்பாளரும் ஜனாதிபதியின் நண்பருமான சுப்பிரமணியசுவாமியை அனுப்பியிருந்தது. இந்தியாவின் இந்த பங்கேற்பை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இந்தியா முன்னைய வருடங்களில் நடைபெற்ற மாநாடுகளில் கலந்துகொண்டது போலவே இந்தத்தடவையும் கலந்துகொண்டது. இந்தத்தடவை அரசியல் பிரதிநிதிகளும் கலந்துகொண்டமை தான் முக்கிய பேசுபொருளாகியுள்ளது. அதுவும் தமிழ்த் தேசிய எதிராளரும் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் நண்பருமான சுப்பிரமணியசுவாமி இந்தியாவின் பிரதிநிதியாக கலந்துகொண்டமைதான் அதிகளவில் பேசுபொருளாக்கியுள்ளது.

பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களில் இந்தியா அரசியலைக் கணக்கெடுப்பதில்லை. அரசியல் எதிர்ப்புகளையும் பொருட்படுத்துவதில்லை தமிழ்நாட்டில் இலங்கை இராணுவத்திற்கு பயிற்சிகள் அளிப்பது தொடர்பாக எதிர்ப்புக்கள் வந்தபோது ஒன்றில் இரகசியமாக பயிற்சிகளைக் கொடுத்தது அல்லது தமிழ்நாட்டிற்கு வெளியேயுள்ள மாநிலங்களில் அதனைக் கொடுத்தது. தமிழக எதிர் பார்ப்புகளுக்காக ஒருபோதும் பாதுகாப்புத் தொடர்புகளை கைவிடவில்லை.

காங்கிரஸ் அரசாங்கம் தி.மு.கவின் தயவில் தங்கியிருந்தபோதே இந்தியா இந்த பயிற்சிகளை வழங்கத்தவறவில்லை. தற்போதைய மோடியின் அரசாங்கம் தமிழ்நாட்டின் எந்தக் கட்சிகளிலும் தங்கியிருக்கவில்லை. இதனால் அழுத்தங்களைப் பற்றி பெரியளவிற்கு கவலை கொள்ளாது தன்னுடைய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

> *பாதுகாப்பு சம்பந்தமான விடயங்க*
> *கணக்கெடுப்பதில்லை. அரசியல்*
> *ட்படுத்துவதில்லை தமிழ்நாட்டில்*
> *பயிற்சிகள் அளிப்பது தொடர்பா*
> *ஒன்றில் இரகசியமாக பயிற்சிக*
> *தமிழ்நாட்டிற்கு வெளியேயுள்ள*
> *கொடுத்தது. தமிழக எதிர்ப்புகளு*
> *காப்புத் தொடர்புகளை கைவிடவி*

பொதுவாகவே வெளிவிவகாரங்களில் மாநில அரசுகள் தலையிடக்கூடாது என்ற பொதுக்கருத்து தமிழ் நாட்டிற்கு வெளியே வலிமையாக உண்டு. மேற்கு வங்காளம் மட்டும் இதற்கு விதிவிலக்கு. அதுவும் பாதுகாப்பு விடயங்களில் இக்கருத்து அதிகம் உண்டு. எனவே இந்த பொதுக்கருத்தும் மத்திய அரசின் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் பாதுகாப்புடன் தொடர்பில்லாத மாநில முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தமிழ்நாட்டின் அழுத்தங்களுக்கு வெளிமாநிலங்

# வெளிநாட்டுக்கொள்கை அவசியம்

களிலும் ஆதரவுகிடைக்கலாம்.


ஜெயலலிதாவையும் பிரதமரையும் ஆபாசமாக தொடர்புபடுத்தி இலங்கை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்திக்கு பலத்த எதிர்ப்பினை தமிழ்நாடு கட்சி வேறுபாடில்லாமல் காட்டியது. பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் செயற்பட விடாது தமிழ்நாட்டு பிரதிநிதிகள் தடுத்தனர். இறுதியில் மத்திய அரசாங்கம் விருப்பமில்லாத நிலையிலும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரை அழைத்து கண்டனம் தெரிவித்தது.

பொதுவாக பாதுகாப்பு மாநாடு என்பதற்கப்பால் இலங்கை இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள் இருப்பதாக இந்தியா கருதுவதால் சிறப்புக் கவனம் உண்டு. இலங்கைக்குள் இந்தியாவிற்கு எதிரான சக்திகள் காலூன்றினால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு இடைஞ்சல் ஏற்படும் என அது நினைக்கின்றது.

அண்மைக்காலமாக பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கையை இடைத்தங்கு முகாமாக பயன்படுத்துகின்றனர் என்ற செய்திகள் வருவதால் இலங்கை தொடர்பாக இரட்டிப்பு கவனம் இந்தியாவிற்கு உண்டு.

இவைதவிர இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாகவே தன்னைக் கருதுகின்றது. இதனால் பாகிஸ்தான் மட்டுமல்ல அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமோ சீனாவோ இலங்கையில் செல்வாக்கு செலுத்துவதை இந்தியா விரும்புவதில்லை. பாரதீய ஜனதாக்கட்சி ஒரு தீவிர இந்திய தேசியவாதக் கட்சியாக இருப்பதால் இந்த விருப்பமின்மை காங்கிரஸ் கட்சியை விட அதிகமுண்டு. அது பாதுகப்பாக இருந்தாலும் சரி பொருளாதார

விடயங்களில் இந்தியா அரசியலைக்
அரசியல் எதிர்ப்புகளையும் பொரு
நாட்டில் இலங்கை இராணுவத்திற்கு
தொடர்பாக எதிர்ப்புக்கள் வந்தபோது
பயிற்சிகளைக் கொடுத்து அல்லது
யேயுள்ள மாநிலங்களில் அதனைக்
திர்ப்புகளுக்காக ஒருபோதும் பாது
கைவிடவில்லை.



விடயங்களில் சர்வதேச விழுமியங்களுக்காக சற்று அடக்கிவாசித்தாலும் பொருளாதாரமாக இருந்தாலும சரி ஒரே நிலைப்பாடு தான் பாதுகாப்பு விடயங்களில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடம்கொடுக்காது.

இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதுவராலயத்தில் கடமையாற்றிய உளவுப்பிரிவு அதிகாரியை உடனடியாக வெளியேற்றுமாறு இந்தியா கட்டளையிட்டது. இலங்கையும் அதனை ஏற்றுக்கொண்டு உடனடியாக வெளியேற்றியது. சீனா திருகோணமலையில் விமானங்கள் பழுது பார்க்கும் நிலையம் அமைக்க முயற்சித்த போது வெளிநாட்டமைச்சர் பீரிசிடம் இந்தியா அது தொடர்பாக விளக்கம் கேட்டது.

பாதுகாப்பு விடயத்தில் அமெரிக்கா சீனாவினை விட பாகிஸ்தான் தீவிரவாதிகள் தொடர்பாகத்தான் இந்தியா மிகவும் கவனமாக இருக்கின்றது. இதற்காகத்தான் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தில் இராணுவ அதிகாரி ஒருவரையும் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

புதிய மோடி அரசாங்கம் கொழும்பினை தன்பக்கம் வளைக்கவே விரும்புகின்றது. அதற்காக தமிழ்த்தேசிய வாதத்தை அழிக்கவும் தயாராக உள்ளது. தமிழ்நாட்டு அழுத்தங்களையும் கணக்கெடுக்காது விடுகின்றது.

ஜெனிவாவில் இந்தியா நடுநிலை வகிப்பது என எடுத்த தீர்மானம் இலங்கை - இந்திய உறவுக்கு பலம் என இலங்கைக்கான இந்தியத்தூதுவர் சின்கா இலங்கை-இந்திய நட்புறவுச் சங்கத்தில் ஆற்றிய உரை இந்தியாவின் இதயங்களில் இலங்கைக்கு எப்போதும் தொடர்ந்து விசேட இடமுண்டு என சுதந்திரதின விழாவில் ஆற்றிய உரை ஜனாதிபதியின் நெருங்கிய நண்பரும் தமிழ்த்தேசிய எதிர்ப்பாளருமான சுப்பிரமணிய சுவாமியை அரசாங்கம் பிரதிநிதியாக அனுப்பிவைத்தமை போன்றன மோடி அரசாங்கத்தின் அணுகுமுறையினை தெளிவாக கோடிட்டு காட்டுகின்றது.

இலங்கை தொடர்ந்தும் நழுவிச்செல்வதும் தமிழ்நாட்டின் எழுச்சியும் தான் தற்போதைய இந்தியாவின் முயற்சிகளை தடுத்து நிறுத்தும் கருவிகளாக இருக்கும்.

அமெரிக்கா தமிழர் விவகாரத்தை பயன்படுத்தி ஆட்சிமாற்றம் ஒன்றினைக் கொண்டுவர முயற்சிக்கின்றது. இந்தியா அதனை பயன்படுத்தி இலங்கையை தனது செல்வாக்கின் கீழ்கொண்டுவர முயற்சிக்கின்றது. இரண்டு தரப்பின் அணுகுமுறையினாலும் தமிழ் மக்களே பாதிக்கப்படுகின்றனர். இதற்கு முகம் கொடுக்க தமிழ் மக்கள் என்ன செய்யலாம்?

இங்கே ஒன்றை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். நாடுகள் குறிப்பாக வல்லரசுகள் தங்கள் நலன்களிலிருந்தே செயற்படும் அதற்காக ஒரு மக்கள் கூட்டத்தை பயன்படுத்துவதற்கோ அழிப்பதற்கோ அவை ஒருபோதும் தயங்கமாட்டாது. அரசியல் அறநெறிகள் எல்லாம் அவற்றிற்கு இரண்டாம் பட்சமான விடயங்கள் அவை தமது நலன்களிலிருந்து செயற்படும் போது தமிழர் தரப்பும் தனது நலன்களிலிருந்தே செயற்பட வேண்டும். அமெரிக்காவும் இந்தியாவும் தமது நலன்களுக்காக தமிழர் விவகாரத்தையே பயன்படுத்துகின்றன.

இது மிகவும் வெளிப்படையானது. அதற்காக திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலை நகர்த்துகின்றன. நாமும் அந்த நிகழ்ச்சிநிரல்களுக்குள் எமது நலன்களைச் சேர்க்க முயற்சிக்க வேண்டும். இதற்கு எமக்கென ஒரு வலுவான

> **சர்வதேச மட்டத்தில் பணிகளை நகர்த்துவதற்கு தமிழ் மக்களுக்கென தனியான வெளிநாட்டுக்கொள்கை அவசியம். இங்கு சட்டரீதியான அரசுகளுக்கு மட்டும் தான் வெளிநாட்டுக்கொள்கை அவசியம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் அவசியம்.**

அரசியல் நிலைப்பாடு இருக்க வேண்டும். அந்த அரசியல் நிலைப்பாடு எமது மக்களின் தேவைகளிலிருந்து எழுந்ததாக எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்வதாக இருக்கவேண்டும். வெறுமனவே அமெரிக்காவினதும் இந்தியாவினதும் நிகழ்ச்சிநிரல்களுக்கு பின்னால் இழுபட்டுச் செல்வதாக எமது அரசியல் இருக்கக்கூடாது. உண்மையில் இழுபட்டுச்செல்லும் அரசியலைச் செய்வதற்கு ஒரு தலைமை தேவையில்லை. அது அடிமைக்கூட்டங்கள் செய்கின்ற வேலை.

துரதிஷ்டவசமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அந்த அரசியலையே செய்கின்றது. தமிழ்த்தரப்பு ஒத்துழைக்காவிட்டால் ஒருபோதுமே அமெரிக்காவினாலும் இந்தியாவினாலும் தமது நலன்களை அடைந்து கொள்ளமுடியாது.

சர்வதேச மட்டத்தில் பணிகளை நகர்த்துவதற்கு தமிழ் மக்களுக்கென தனியான வெளிநாட்டுக்கொள்கை அவசியம். இங்கு சட்டரீதியான அரசுகளுக்கு மட்டும் தான் வெளிநாட்டுக்கொள்கை அவசியம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் அவசியம்.

சொந்தக்காலில் நின்று சுயாதீனமாக செயற்படுகின்ற அரசியல் இயக்கமில்லாமல் இந்தப் பணிகளை ஒருபோதும் வினைத்திறனுடன் முன்னெடுக்க முடியாது.

**நீங்கள் இப்படிக்கூறினாலும் வல்லரசுகளின் நிகழ்ச்சிநிரலுக்குள் தமிழ் மக்களினது நிகழ்ச்சிநிரலைச் சேர்க்க பல்பக்க அழுத்தங்கள் தேவை. அந்த பல்பக்க அழுத்தங்களுக்கான வாய்ப்பு தமிழ் மக்களுக்கு இருக்கின்றதா?**

சவால்கள் இருக்கும் போது வாய்ப்புகளும் இருக்கும் என்பதே வரலாறு. தமிழ்நாடும் டயஸ்போறாவும் தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய பலம். இந்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்க தமிழ்நாடும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்திற்கு அழுத்தம். டயஸ்போறாவும் தமிழ் மக்களுக்கு மிகப்பெரியளவில் உதவும்.

தமிழ் நாட்டில் அண்மைக்காலமாக இரண்டு பெரிய மாற்றங்கள் இடம்பெற்றுள்ளது. ஒன்று தமிழர் விவகாரம் அங்கு பொதுக்கருத்தாக வளர்ச்சியடைந்துள்ளது. அதனை நிராகரித்து செயற்படுவதற்கு எந்த கட்சியும் அங்கு தயாராக இல்லை.

இரண்டாவது தமிழ்நாட்டின் படித்த மத்தியதரவர்க்கம் எங்கள் விவகாரத்தில் வலுவான கவனத்தைக் குவிக்கத் தொடங்கியுள்ளது. அதில் டாக்டர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் என பலர் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் வெறும் உணர்ச்சி நிலையில் அல்லாது அறிவு நிலையில் எமது விவகாரத்தை அணுகத் தொடங்கியுள்ளனர். தங்களால் இந்த வளர்ச்சியடைந்த போராட்டத்தை பாதுகாக்க முடியவில்லையே என்ற குற்றவுணர்வு அவர்களிடம் ஆழமாக உள்ளது.

இவர்களினால் வலிமையான அழுத்தங்களை மத்திய அரசிற்கு கொடுக்கமுடியும். ஏற்கனவே பல அழுத்தங்களைக் கொடுத்து அவர்கள் வெற்றியும் கண்டிருக்கின்றனர். இரண்டு தடவை ஜெனிவாவில் அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியாவை வாக்களிக்கச் செய்தனர். திராவிட முன்னேற்றக்கழகத்தினை காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறச் செய்தனர். பொதுநலவாய மாநாட்டிற்கு முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்கினை செல்லவிடாது தடுத்தனர். ஆனால் விக்கினேஸ்வரன் கணவன் - மனைவி உறவிற்குள் தமிழ்நாடு தலையிடத்தேவையில்லை என அறிவித்ததினால் அவர்களது செயற்படுவேகம் தணிந்தது என்பது உண்மையே. இதனால் தான் மூன்றாவது ஜெனிவாவில் இந்தியா நடுநிலை வகித்தபோது அதனைத் தடுக்க அவர்களினால் முடியவில்லை.

அடுத்தது டயஸ்போறாவின் பலம் யார் என்னதான் கூறினாலும் சர்வதேச விசாரணை ஒன்று நடைபெறுவதற்கான சூழலை உருவாக்கியதில் பெரும்பங்கு டயஸ்போறாவிற்கே உண்டு. பலர் தமது சொந்தக் குடும்பங்கள், சொந்த வேலைகள் எல்லாவற்றையும் கவனிக்காமல் முழுநேரமும் சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதற்காக செயற்படுகின்றனர். அவர்களிடையே பல பிளவுகள் உண்டு என்பது உண்மை தான். ஆனாலும் அவர்கள் செயற்படுகின்றனர்.

இந்த இருதரப்பும் வினைத்திறனுடன் செயற்படுவது தாயகத்திலுள்ள அரசியல் இயக்கத்தின் பலத்திலேயே தங்கியுள்ளது. தாயகத்தில் வலுவான அரசியல் நிலைப்பாட்டுடன் அரசியல் செயற்பாடு இடம்பெற்றால் தமிழ்நாடும், டயஸ்போறாவும் பெரிய பிளவுகள் இல்லாமல் வேகமாகவும் வினைத்திறனுடனும் செயற்படும். வழிகாட்டல்கள் உண்மையில் தாயகத்திலிருந்தே அவர்களுக்கு செல்லவேண்டும். நிலமும், புலமும், தமிழகமும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டத் திற்குள் வருமானால் தமிழ்த்தேசிய அரசியலின் எழுச்சி உலகம் தழுவிய வகையில் வீறு கொண்டதாகவே வளர்வதற்கு வாய்ப்புக்கள் உருவாகும்.

இவற்றை விட தமிழ் மக்களின் விவகாரம் சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாகியிருப்பதனால் உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகளும் எமக்கு பக்கபலமாக இருப்பர்.

**நன்றி - லண்டன் அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி**

# தேசியம் எனப்படுவது இனமான உணர்ச்சியா?

**- நிலாந்தன்**

தொகுப்பு - துன்னையூரான்

**காவலூர் விஜேந்திரனின் தமிழ் முற்றம் மாதச்சஞ்சிகை வெளியீட்டுவிழா யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் உரையாற்றிய உரையினை வாசகர்களுக்காகத் தருகின்றோம்.**

சிங்கள மக்கள் மத்தியில் அதிகம் பிழையாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஒரு வார்த்தை சமஷ்டி எனலாம். அதுபோலவே தமிழர்கள் மத்தியில் சரியாகப் புரிந்துகொள்ளப்படாத ஒரு வார்த்தை தேசியம் எனலாம். ஈழத் தமிழர்கள் மத்தியில் இரண்டு கட்சிகளின் பெயர்களில் தேசியம் என்ற வார்த்தை உண்டு. இப்பொழுது மாகாணசபைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தின் போதும் தேசியம் என்ற வார்த்தை அடிக்கடி பிரயோகிக்கப்படுகின்றது. இதில் கூட்டமைப்பில் உள்ள தீவிரமானவர்கள் போலத் தோன்றுபவர்களும் தேசியம் பற்றிக்கதைக்கிறார்கள். மிதமானவர்கள் போலத் தோன்றுபவர்களும் தேசியம் கதைக்கின்றார்கள். குறிப்பாக இணையத்தளப் பிரச்சாரங்களில் தேசியம் வெல்ல வாக்களிப்போம்" என்றெல்லாம் சுலோகங்கள் வருகின்றன.

சில மாதங்களிற்கு முன்பு எஸ்.ஜே. வி.செல்வநாயகத்தின் நினைவு நாள் கொண்டாடப்பட்டபோது யாழ். நகரில் அவருடைய நினைவுத்தூபியைச் சுற்றியிருக்கும் மதிலில் கட்டப்பட்டிருந்த ஒரு பதாகையில் தேசியத் தந்தை" என்று எழுதப்பட்டிருந்தது.

எனக்குத் தெரிந்த சில இளம் ஊடகவியலாளர்களிடம் ஒரு நாள் கேட்டேன், உங்களுடைய ஊடகக் கொள்கை எது என்று. தேசியத்தைப் பாதுகாத்தால் சரி என்று சொன்னார்கள். நான் தொடர்ந்து கேட்டேன், தேசியம்" என்றால் என்ன? என்று. அவர்களால் துலக்கமான பதிலைச் சொல்ல முடியவில்லை.

அவர்கள் மட்டுமல்ல இன்று தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தீவிர தேசியவாதிகள் என்று அடையாளப்படுத்தப்படும் பலரிடமும் இக்கேள்வியை நான் கேட்டிருக்கிறேன். தேசியம் என்றால் என்ன? என்று. அவர்கள் கூறிய பதில்கள் வருமாறு... ஒரு பகுதியினர் சொன்னார்கள் அது ஒரு இனமான உணர்ச்சி என்று.

இன்னொரு பகுதியினர் சொன்னார்கள். அது அடக்குமுறைக்கு எதிரான இன எதிர்ப்புணர்ச்சி என்று.

வேறு சிலர் சொன்னார்கள் அது தம்மை ஒரு தேசமாகக் கட்டமைத்துக் கொள்ள முற்படும் ஒரு மக்கள் கூட்டத்தின் திரட்டப்பட்ட உணர்ச்சி என்று.

மேற்கண்ட பதில்கள் அனைத்தையும் தொகுத்து அவற்றின் சாராம்சத்தின் அடிப்படையிற் கூறின் தேசியம் என்று அவர்கள் விளங்கி வைத்திருப்பது இனமானம் சார்ந்த ஒரு கூட்டு எதிர்ப்புணர்ச்சிதான். இது சரியா? அல்லது தேசியம் எனப்படுவது அதைவிட ஆழமானதா?

தேசியம் எனப்படுவது அதைவிட ஆழமானதுதான். அது அதிக பட்சம் அறிவுபூர்வமானது. அதைவிடக் குறைந்த அளவே உணர்ச்சிகரமானது. ஆனால், பிரயோக நிலையில் அது அதிகபட்சம் உணர்ச்சிகரமானதாகவே காணப்படுகிறது. இக்கட்டுரையானது தேசியம் தொடர்பான புலமைசார் கோட்பாடுகளிற்குள் அதிகம் இறங்கப்போவதில்லை. ஒரு வாரப்பத்திரிகை அதற்குரிய இடமுமல்ல. பதிலாக, தேசியத்தை அதன் பிரயோக வடிவத்தில் வியாக்கியானம் செய்யும் அல்லது வரைவிலக்கணம் செய்யும் ஒரு முயற்சியே இது. தூயதேசியம் பற்றியல்ல பிரயோக தேசியம் பற்றியே இங்கு உரையாடப்படுகின்றது. ஒரு தொடர் விவாதத்திற்கான தொடக்கப்புள்ளியாக இதை எடுத்துக் கொள்ளலாம். சரி. தேசியம் என்றால் என்ன?

தேசியம் எனப்படுவது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுப் பிரக்ஞை ஆகும்.

எந்தவொரு பொது அடையாளத்தின் நிமித்தம் ஒரு மக்கள் கூட்டம் பெருமைப்படுகின்றதோ அல்லது எந்தவொரு பொது அடையாளத்தின் பேரால் ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு அரசியற்சக்தியாகத் திரட்டக் கூடியதாக உள்ளதோ அல்லது எந்தவொரு பொது அடையாளத்தின் பெயரால் ஒரு மக்கள் திரள் ஒடுக்கப்படுகின்றதோ அல்லது அவமதிக்கப்படுகின்றதோ அந்த ஒரு அல்லது பல பொது அடையாளங்களின் பாற்பட்ட ஒரு கூட்டுப் பிரக்ஞையே

**எந்தவொரு பொது அடையாளத்தின் நிமித்தம் ஒரு மக்கள் கூட்டம் பெருமைப்படுகின்றதோ அல்லது எந்தவொரு பொது அடையாளத்தின் பேரால் ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு அரசியற் சக்தியாகத் திரட்டக் கூடியதாக உள்ளதோ அல்லது எந்தவொரு பொது அடையாளத்தின் பெயரால் ஒரு மக்கள் திரள் ஒடுக்கப்படுகின்றதோ அல்லது அவமதிக்கப்படுகின்றதோ அந்த ஒரு அல்லது பல பொது அடையாளங்களின் பாற்பட்ட ஒரு கூட்டுப் பிரக்ஞையே தேசியம் என்பதாக பிரயோக நிலையில் காணப்படுகின்றது.**

தேசியம் என்பதாக பிரயோக நிலையில் காணப்படுகின்றது.

19ஆம் நூற்றாண்டின் மேற்கத்தையே நாகரிகத்தை அங்கு தோன்றிய தேசிய அலைகளே பெரிதும் வடிவமைத்தன.

கைத்தொழில் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட தொடர் வளர்ச்சிகள் காரணமாக போக்குவரத்துத் துறையில் வசதிகள் பெருகின. இதனால் வாழ்க்கை இலகுவாக்கப்பட்டது. சமூகம் ஒன்று திரட்டப்பட்டது. அச்சு இயந்திரத்தின் வருகையோடு அறிவும் தகவல்களும் முன்னெப்பொழுதையும்விட அதிகரித்த அளவிலும் அதிகரித்த வேகத்திலும் பரிமாறப்பட்டன. மக்கள் மயப்பட்டன. இவ்விதமாக தகவலும், அறிவும் மக்கள் மயப்பட்டு வந்த ஒரு பின்னணியில் சமூகமானது விரைவாக ஒன்று திரட்டப்பட்டு, சமூக ஊடாட்டம் முன்னெப்பொழுதையும் விட வேகமாக நிகழ்ந்த போது அங்கெல்லாம் தேசிய அலைகள் எழுச்சி பெறலாயின. அதாவது மக்களின் கூட்டுப் பிரக்ஞையானது விழிப்படைந்து சிலிர்த்தெழலாயிற்று.

தேசிய எழுச்சிகளுக்குப் பின்னாலிருந்த கூட்டுப் பிரக்ஞைகள் யாவும் எல்லாக்களங்களிலும், எல்லாக்காலங்களிலும் எல்லா நிலைமைகளின் போதும் முழு அளவிற்கு முற்போக்கானவைகளாகத்தானிருந்தன என்பதற்கில்லை. ஏனெனில், ஒரு மக்கள் திரளின் கூட்டுப் பிரக்ஞையானது அதன் வேர் நிலையில் முற் போக்கானதாகத்தான் இருக்க வேண்டும் என்பதற்கில்லை. அது குறிப்பிட்ட சமூகத்தின் சமூகப் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிகளின் பாற்பட்ட ஒன்றாகும். சில சமூகங்களில் அக்கூட்டுப் பிரக்ஞையானது ஒரு இனப்பிரக்ஞையாகவோ அல்லது மொழிப் பிரக்ஞையாகவோ இருந்தது. சில சமூகங்களில் அது மதப் பிரக்ஞையாகவோ அல்லது பிராந்தியப் பிரக்ஞையாகவோ காணப்பட்டது.

அதன் வேர்கள் மிகப்புராதன காலமொன்றின் இருண்ட இடுக்குகளிலிருந்து புறப்பட்டு வரக்கூடும். அந்தந்தக் களத்திற்குரிய தனித்துவமான தேசிய சூழ லுக்குட்பட்டு சில சமயங்களில் அது இன வெறியாகவோ, மொழிவெறியாகவோ அல்லது மதவெறியாகவோ அல்லது வேறெந்த வெறியுமாகவோ உருவாக முடியும்.

இந்த இடத்தில்தான் குறிப்பிட்ட தேசிய பிரக்ஞைக்குத் தலைமைதாங்கும் அமைப்பு அல்லது கட்சியின் முக்கியத்துவம் பற்றிக் கூறவேண்டியிருக்கிறது. பொது சனங்கள் எப்பொழுதும் உணர்ச்சிகரமான விவகாரங்களின் பின்தான் செல்கின்றார்கள். சிக்கலான கோட்பாடுகளை விடவும் உணர்ச்சிகரமான சுலோகங்கள் அவர்களை இலகுவாகப் பற்றிக் கொள்கின்றன. இடதுசாரி அரசியலிலும் இதுவே நடந்தது. ஆனால், அந்த அரசியலுக்குத் தலைமை தாங்கும் அமைப்பும், அதன் பிரதானிகளும் கோட்பாட்டு விளக்கத்துடனிருக்க வேண்டும்.

எனவே, ஒரு சமூகத்தின் தேசியப் பிரக்ஞைக்குத் தலைமை தாங்கும் அமைப்பானது குறிப்பிட்ட கூட்டுப் பிரக்ஞை அதன் வேர் நிலையில் எவ்வளவுதான் பிற்போக்கானதாக காணப்பட்டாலும் அதை முற்போக்கானதாக பண்பு மாற்றம் செய்ய வேண்டும். அதாவது கிழிருந்து மேலெழும் உணர்ச்சிகரமான அடி நிலைத் தேசிய உணர்வை மேலிருந்து கீழிறக்கப்படும் ஜனநாயக ஒளியின் மூலம் இருள் நீக்கம் செய்ய வேண்டும்.




வேர் நிலை உணர்ச்சிகரமான மூலக் கூறுகளை சாத்தியமான அளவு ஜனநாயக உள்ளடக்கத்தால் பிரதியீடு செய்ய வேண்டும். அதாவது, மேற்கத்தைய அறிஞர்கள் கூறுவதுபோல், தேசியத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும்". இதை இன்னும் அழுத்தமாக செய்முறை விளக்கமாகக் கூறின் ஒரு சமூகத்தின் தேசிய அரசியலை முன்னெடுக்கும் அமைப்பு அல்லது கட்சியானது அந்த அரசியலின் அடித்தளம் ஜனநாயகமாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

எந்தவொரு தேசியப் பிரக்ஞையும் அதன் வேரில் இனமானம், இனத்தூய்மைவாதம், இன மேலாண்மை வாதம், இனவீரம், இன எதிர்ப்பு, மொழித் தாய்மை, மதத் தூய்மை, சாதி அசமத்துவம், பால் அசமத்துவம் போன்ற இன்னோரன்ன உணர்ச்சிகரமான அம்சங்களின் சிக்கலான கலவையாகவே காணப்படுவதுண்டு.

ஆனால், இந்த உணர்ச்சிகரமான அம்சங்களை அறிவினால் அதாவது சாத்தியமான அளவு ஜனநாயகத்தால் பிரதியீடு செய்ய வேண்டிய பொறுப்பு, அத்தேசியப் பிரக்ஞைக்குத் தலைமை தாங்கும் அமைப்புக்கே உரியது. நோய்க்கூறான அம்சங்களை ஒரு ஜனநாயக இடையூடாட்டப் பரப்பிற் கூடாகத்தான் கடந்து செல்ல முடியும்.

அத்தகைய ஜனநாயகத்தை உள்ளடக்கமாகப் பெற்ற ஒரு தேசிய அரசியல்தான் அதன் ஒரு கட்ட முதிர்ச்சிக்குப் பின் சர்வதேசியமாக விரியும். இல்லையெனில் அது தானே தன்னுள் உட்சுருங்கும் குறுந்தேசிய வாதமாகத் தறுக்கணித்துப் போய்விடும்.

(23ஆம் பக்கம் பார்க்க)

மனநல ஆலோசகர்
டாக்டர் ஷேய்ம் ஜி.இனோல்ட்
தமிழில் எஸ்.கே.விக்னேஸ்வரன்

# குழந்தைகளுடன் உரையாடுதல்

## குழந்தைகளின் கேள்விகளில் மறைந்திருக்கும் அர்த்தங்கள்

குழந்தைகளுடன் உரையாடுவது ஒரு தனிக்கலை. அதற்கு அதற்கே உரிய சட்ட திட்டங்களும் அர்த்தங்களும் உண்டு. குழந்தைகள் பெரும்பாலும் தமது உரையாடல்களின் போதும் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கையிலும் மிகவும் சாதூரியமாகவே நடந்துகொள்கின்றனர். அவர்களது செய்திகள் பெரும்பாலும் பூடகமானவை. சந்தேகத்தன்மை வாய்ந்தவை. கவனமாக மொழி பெயர்க்கப்பட வேண்டியவை.

ஆண்டி என்ற 10 வயது குழந்தை தனது தகப்பனிடம் இவ்வாறு கேட்டாள் 'ஹாலெம் நகரில் உள்ள கைவிடப்பட்ட சிறுவர்களின் தொகை என்ன? - ஒரு இரசாயனவியலாளரும் புத்திஜீவியுமான தகப்பனாருக்கு அந்தக் கேள்வி மிகுந்த சந்தோஷத்தை கொடுத்தது. சமூகப்பிரச்சனைகளில் தனது மகனுக்கு உள்ள அக்கறை அவருக்கு சந்தோசமூட்டியதில் வியப்பில்லை. அவர், மகனுக்கு அது தொடர்பாக நீண்ட விளக்கம் ஒன்றை அளித்துவிட்டு அவனை நோக்கினார். ஆனால் அவனோ திருப்தியுற்றவனாக தெரியவில்லை. அதே விடயம் தொடர்பாக அவன் கேள்விகளை கேட்டுக்கொண்டே இருந்தான். 'நியூயோர்க் நகரத்தில் எத்தனை குழந்தைகள்?', 'முழு அமெரிக்காவிலும் எத்தனை பேர்', 'முழு உலகத்திலும்?'

இறுதியில் தான் தனது மகனுடைய அக்கறை ஒன்றும் சமூகம் பற்றியதல்ல. தனிப்பட்ட ஒன்று என்று புரிந்து தகப்பனாருக்கு. கைவிடப்பட்ட சிறுவர்கள்



மீதான அனுதாபத்தின் காரணமாக அவன் அந்தக் கேள்வியை கேட்கவில்லை. அவனது கேள்வி 'நானும் கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகி விடுவேனோ' என்ற அச்சத்திலிருந்து எழுந்தது. அவன் எதிர்பார்த்தது: கைவிடப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை அல்ல. உண்மையில் தானும் கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகி விடமாட்டேன் என்பதை உறுதி செய்து கொள்வதே அவனது நோக்கமாக இருந்தது.

ப்ரூஸ், ஐந்து வயதுச்சிறுவன். அவன் முதன்முதலாக பாலர் பள்ளிக்குப் போயிருந்த போது கூட வந்திருந்த அம்மாவிடம் அங்கிருந்த சுவரில் வரையப்பட்டிருந்த ஓவியங்களை சுட்டிக்காட்டி இவ்வாறு கேட்டான். 'யார் இந்த அசிங்கமான படங்களை வரைந்தது?' தாயாருக்கு தர்மசங்கடமாகிப் போய்விட்டது. அவள் மகனை அப்படிப்பேசக்கூடாது. என்று கண்டிப்பது போல பார்த்தபடி மெதுவாகக் கிசுகிசுத்தாள் இவ்வளவு அழகான படங்களை அசிங்கம் என்று சொல்வது சரியல்ல.

ஆனால் ஆசிரியருக்கு அவனது கேள்வியின் அர்த்தம் புரிந்துவிட்டது. அவர் புன்னகைத்தபடியே சொன்னார். நீங்கள் இங்கே அழகான படங்களைத்தான் வரைய வேண்டுமென்றில்லை. உங்களுக்கு விருப்பமானபடி வரையலாம். ப்ரூசின் முகத்தில் பெரிய புன்னகை ஒன்று தோன்றியது. அவனுக்கு அவனது மனதில் புதைந்திருந்த கேள்விக்குரிய பதில் இப்போது கிடைத்துவிட்டது. 'ஒரு சிறுவன் அழகாக படங்களை வரையாவிட்டால் என்ன நடக்கும்.

அடுத்ததாக ப்ரூஸ் அங்கிருந்த ஒரு உடைந்த விளையாட்டுத் தீயணைக்கும் இயந்திரத்தை எடுத்து நேரடியாகவே கேட்டான். இதை உடைத்தது யார்? 'இதை யார் உடைத்திருந்தால்தான் என்ன? இங்கு இருப்பவர்கள் எவரையும் தான் உனக்குத் தெரியாதே. ஏன் தான் இப்படி கேட்கிறாய்?' உண்மையில் ப்ரூசின் நோக்கம் பெயர்களை அறிவதல்ல. அவனுடைய நோக்கமெல்லாம் விளையாட்டுப் பொருட்களை உடைப்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பது தான். கேள்வியினை புரிந்துகொண்ட ஆசிரியர் சரியான பதிலைத் தந்தார்.

விளையாட்டுப்பொருட்கள் விளையாடுவதற்கு தானே? அவை சில வேளைகளில் உடையும். இது நடக்கக்கூடிய ஒன்று தானே. ப்ரூஸ் திருப்தியாக தலையாட்டினான். அவனது கேள்வி கேட்கும் திறமை அவனுக்கு தேவையான தகவலை பெற்றுத்தந்தது. 'இந்தப் பெரியவர் நல்லவர் (ஆசிரியர்). இவர் விரைவில் கோபமடையமாட்டார்.

ஒரு படம் மோசமாக வரையப்பட்டாலோ ஒருவிளையாட்டுப்பொருள்உடைந்தாலோ அவர் கோபமடையப்போவதில்லை. நான் பயப்பட வேண்டியதில்லை. இங்கே தங்குவதில் எந்தப்பயமும் இல்லை!' ப்ரூஸ் தாயாருக்கு கைகாட்டிவிட்டு தனது பாலர் பாடசாலையின் முதல் நாளை ஆரம்பிக்கத் தொடங்கினான்.

கரோல் பன்னிரண்டு வயதுச்சிறுமி. அவள் மிகவும் வேதனையடைந்தவளாக கண்ணீர் மல்க நின்றிருந்தாள். அவளது விருப்பத்திற்குரிய மைத்துனி அவளை விட்டுவிட்டு கோடை கால விடுமுறைக்காக தனது வீட்டுக்கு போகப்போகிறாள். நான் திரும்பவும் தனிமையில் இருக்கப்போகிறேன்.

தாய் - உனக்கு இன்னொரு சினேகிதி கிடைப்பாள்.

கரோல் - நான் சரியாக தவிச்சுப்போவேன்.

தாய் - உனக்கு அது பழகிப்போய்விடும்.

கரோல் - ஓ... அம்மா (அழுகிறாள்)

தாய் - உனக்கு பன்னிரண்டு வயதாகிவிட்டது. இன்னுமொரு அழுகுணிப் பாப்பாவாக இருக்கிறாய்.

கரோல் தாயை முறைத்துப் பார்த்துவிட்டு தனது அறைக்குள் ஓடிப்போய் கதவை மூடிக்கொண்டாள்.

இந்தச் சம்பவம் ஒரு சந்தோசமான முடிவுக்குவந்திருக்க முடியும். ஒரு குழந்தையின் உணர்வு எமக்கு அது ஒன்றும் முக்கியத்துவம் அல்லாததாக இருப்பினும் கூட மிகவும் காத்திரமான அக்கறைக்குரிய ஒன்றாக கருதப்பட வேண்டும். கோடை கால விடுமுறைப்பிரிவு ஒரு தாயின் கண்ணில் அழுது கவலைப்படுமளவுக்கு முக்கியமற்ற சின்னவிடயமாக இருக்கலாம். ஆனால் அதற்காக தாய் காட்ட வேண்டிய அனுதாபம் சிறியதாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

கரோல் சரியான கவலையாக இருக்கிறாள். அவளை கவலைப்படுத்துவது என்ன என்பதை நான் விளங்கிக்கொள்கிறேன்.' என்று காட்டுவதன் மூலம் அவளுக்கு என்னால் உதவ முடியும் என்று தாய் நினைத்திருந்தால் இப்படிக் கூறியிருக்க முடியும். "சுசி இல்லாமல் தனிமையாக இருக்கும் என்ன?" "ஒன்றாக இருந்த ஒருவரைப் பிரிந்து இருப்பது என்பது கஷ்டமான ஒன்று தான்" "அவள் இல்லாவிட்டால் உனக்கு வீடே வெறிச் சென்று இருக்கும் என்ன?" இத்தகைய அணுகுமுறை பெற்றோருக்கும் குழந்தைகட்கும் இடையில் அன்னியோன் யத்தை வளர்க்கும்.

குழந்தை தனது கவலை புரிந்து கொள்ளப்படுவதாக உணரும் பட்சத்தில் அதன் துயரம் இல்லாது போய்விடும். ஏனென்றால் அவர்கள் விளங்கிக் கொள்ளப்படுகிறார்கள். தாய் மீதான அவர்களது அன்பும் இதனால் ஆழமாகிறது. ஏனென்றால் அவள் விளங்கிக் கொள்கிறாள். தாயின் அனுதாபம் உணர்வுபூர்வமான முறையில் அவர்களது ஆளுமையைத் தட்டிக் கொடுக்கிறது.

### பயனற்ற உரையாடல்கள்

குழந்தைகளுடனான உரையாடலின் போது பெற்றோர்கள் சலித்துப் போகின்றார்கள். ஏனென்றால் அந்த உரையாடல்கள் அவர்களுக்கு எந்தத் தகவல்களையும் தருவதில்லை. இந்தப் புகழ் பெற்ற உரையாடலைப் பாருங்கள்.

"எங்கே போனாய்?"

"வெளியே"

"என்ன செய்தாய்?"

"ஒன்றுமில்லை"

தாம் நியாயமானவர்களாக இருக்க விரும்பும் பெற்றோர்கள் விரைவிலேயே இத்தகைய உரையாடல்கள் எவ்வளவுக்குக் களைப்பூட்டுபவை என்பதை கண்டு கொள்வார்கள். ஒரு தாய் சொல்கிறாள்: "நான் எனது முகம் கறுத்துப்போகும். அளவுக்கு எனது பிள்ளையுடன் நியாயமாக நடந்து கொள்ள முயல்கிறேன். ஆனால், அது என்னைக் கவனிப்பதே இல்லை. நான் அழும்போது மட்டும் தான் நான் சொல்வதை அது கேட்கிறது..."

குழந்தைகள் பெற்றோர்களுடனான உரையாடல்களை பெரும்பாலும் எதிர்க்கிறார்கள். அவர்கள் போதனை செய்யப்படுவதை ஏதாவது சொல்லப்பட்டுக் கொண்டே இருப்பதை விமர்சிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள் பெற்றோர்கள் தேவைக்கதிகமாகப் பேசுவதாக உணர்கிறார்கள். எட்டு வயது டேவிட் தனது தாயிடம் கேட்கிறான். "நான் ஒரு சின்னக்கேள்வி கேட்டால் ஏன் இப்படி நீண்ட பதிலைச் சொல்கிறீர்கள். தனது நண்பர்களுக்கு அவன் இப்படிச் சொல்வான். "நான் ஒரு சின்னக்கேள்வி கேட்டால் ஏன் இப்படி நீண்ட பதிலைச் சொல்கிறீர்கள். தனது நண்பர்களுக்கு அவன் இப்படிச் சொல்வான். "நான் அவளுடன் கதைக்க தொடங்கினாலோ ஐயோ எனக்குப் பிறகு விளையாடவே நேரமிருக்காது!"

ஒரு குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையிலான உரையாடலைக் கூர்ந்து கவனித்தால் ஒருவர் மீது ஒருவர் ஆச்சரியத்துக்குரிய விதத்தில் எவ்வளவு தூரம் எவ்வளவு தரம் அக்கறையுள்ளவர்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக்கண்டு கொள்ளலாம். அவர்களுக்கிடையேயான உரையாடல் தமக்குத்தாமே பேசிக்கொள்வது போன்று இருக்கும். ஒருவரது பேச்சு விமர்சனங்களையும் அறிவுறுத்தல்களையும் கொண்டதாகவும் மற்றவரது மறுப்பும் ஒப்புக்கொடுத்தலுமாக அந்த நாடகவசனங்கள் அமைந்திருக்கும்.

இத்தகைய உரையாடல்களின் துயரம் என்னவென்றால் அவை அன்பு இன்மையால் வருபவை அல்ல. மாறாக ஒருவரை ஒருவர் கௌரவிக்காமையால் வருகின்றன. அறியாமையால் வருபவை அல்ல. மாறாக தேர்ச்சியின்மையால் வருபவை நமது நாளாந்த பாவனையிலுள்ள மொழி குழந்தைகளுடன் பயனுள்ள விதத்தில் தொடர்பாடப்போதுமானதல்ல. குழந்தைகளை நெருங்கிச் செல்லவும் பெற்றோர்களது மனக்கவலையைக் குறைக்கவும் நாம் புதிய ஒரு வழியை கையாளவேண்டும்.

**• மாவலியான்**

**இல - 09**

# தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய
# உண்மைகளும் பொய்மைகளும்

2. முன்னர் தோட்டத்துறையில் துரை வெளிநாட்டவனாகவும், கங்காணி, கணக்குப்பிள்ளை, கிளாக் அனைவரும் பெரும்பாலும் மலையகத்தமிழராக அல்லது தமிழ்பேசும் தேசிய இனமாக இருந்தனர். இதனால் தோட்டத் தொழிலாளருக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏற் பட்ட சகல பிணக் குகளும் தகராறுகளும் வகுப்பு வாதத்தை தோற்றுவிக்கவில்லை. ஆனால் நிலைமை இன்று மாறிவருகிறது. தற்போது தோட்டத் துரையாக அரசியல்வாதிகள் அரசியல்வாதிகளுடன் நேரடி தொடர்பு உடையவர் அல்லது அரசியல்வாதிகளின் நெருங்கிய உறவினர்கள் (பெரும்பாலும் சிங்களவர்கள்) நியமிக்கப்படுகின்றனர். சுப்பவைசர் போன்ற நேரடியான தொழிலாளரைக் கையாளும் பதவிகளும் சிங்களவர்களிலிருந்தே நிரப்பப்படுகிறது.

இதனால் தொழிலாளருக்கும் நிர்வாகத்திற்குமிடையே நிகழும் சாதாரண தொழில் தகராறுகூட இனவாத சாயம் பூசப்பட்டுத் தோட்டத்திற்கு வெளியேயுள்ள சிங்கள மக்களைத் தூண்டிவிட்டுத் தோட்டத் தொழிலாளரைத் தாக்குமளவுக்கு பூதாகரமாகிவிடுகிறது. இத்தகைய துரதிஷ்டவசமான சம்பவங்கள் இன்று மலையகத்தில் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன.

3. தோட்டப்புறத்தில் நீண்டகாலமாக வாழ்ந்து நிரந்தர தொழிலாளராக மாறிவிட்ட சிங்கள மக்கள் இனவாதத்தை தூண்டும் பணியில் ஈடுபடுவதில்லை. மாறாக தொழிலாளர் என்ற முறையில் ஐக்கியப்பட்டு சகல போராட்டங்களிலும் முன்னணி வகிக்கின்றனர். சிலர் தொழிற்சங்க கிளைகளிலும் பதவிகளும் வகிக்கின்றனர். 77 ஆகஸ்ட் வன்செயலின் போது இரத்தின புரிப்பகுதியில் ஒரு தோட்ட கமிட்டித் தலைவராகவிருந்த சிங்களத்தொழிலாளி ஒருவர் மலையக தமிழ்ப்பெண் ஒருவரை கற்பழிக்க முயன்ற தனது தம்பியை தனது கையால் வெட்டிய உணர்ச்சி ததும்பும் சம்பவம் ஒன்று நடைபெற்றது. ஆனால் இன்று அரசாங்கம் திட்டமிட்டே கிராம வாசிகளை கைக்காசு வேலைக்கு தோட்டங்களில் பரவலாக ஈடுபடுத்திவருகிறது. இவர்கள் கிராமத்தில் வாழ்கின்றனர். பெருந்தோட்டங்களில் பணிபுரிகின்றனர். தோட்டத்தொழிலாளர் (சிங்களவர் உட்பட) வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்களில் ஈடுபடும்போது இவர்கள் கருங்காலிகளாக வேலையில் ஈடுபடுத்தப்படுவதுடன் தேசிய வாதத்தால் ஆட்கொள்ளப்பட்டு சிங்கள நிர்வாகத்தைப் பாதுகாக்கும் பிற்போக்கு பட்டாளமாகவும் பயன்படுத்தப்படுகின்றனர்.



**11. சனத்தொகை:-**
இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பு, வீழ்ச்சி, பற்றிய விபரம், தேசிய இனத்தொகுதிவாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

| தொகுதி | 1971ல் ஆட்களின் தொகை | வீதம் | 1981ல் ஆட்களின் தொகை | வீதம் | அதிகரிப்பு வீதம் | வீழ்ச்சி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 9,146,679 | 71.9 | 10,985,66 | 74.0 | 20.11 | - |
| இல. தமிழர் | 1,415,567 | 11.10 | 6 | 12.6 | 32.21 | - |
| மலையகத் தமிழர் | 1,195,368 | 9.4 | 1,871,535 | 5.6 | - | 30.96 |
| இல. முஸ்லீம்கள் | 824,291 | 6.5 | 825,233 | 7.1 | 28.23 | - |
| | | | 1,056,972 | | | |

1971 ல் மலையகத் தமிழரின் தொகை சுமார் 12 லட்சம் இது 1981ல் 8 இலட்சமாக (30.96 சதவீதம்) குறைந்துள்ளது. ஏனைய தேசிய இனங்கள் 20 வீதத்திற்குக் குறையாமல் அதிகரித்துள்ளன. இந்த அதிகரிப்பு வீதத்தையும் கூட்டினால் 51 வீதம் மலையக தமிழரின் அதிகரிப்பில் வீழ்ச்சி காணப்படுகிறது. இதற்கான காரணமாக புள்ளி விபரத்திணைக் களம், பிரஜா உரிமைபெற்ற இந்திய தமிழர் கணிசமான தொகையினர் தம்மை குடிசன மதிப்பீட்டின் போது இலங்கையர் எனக் கூறியதாகக் குறிப்பிடுகின்றது. இலங்கைத்தமிழர் தொகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அசாதாரண, நிகழமுடியாத அதிகரிப்பை ஆராயும்போது இக்கூற்றில் உண்மையிருப்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இந்த வீதம் (இலங்கைத்தமிழரின் அதிகரிப்பு வீதத்திலிருந்து சராசரியை கழித்தால்) 12 வீதத்தைத் தாண்ட முடியாது அவ்வாறு பார்த்தாலும் மலையகத்தமிழரின் சனத்தொகை யில் 39 வீதம் வீழ்ச்சி காணப்படுகிறது.

❖ இவ்வீழ்ச்சிக்கு ஒரு பிரதான காரணமாக ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இவர்களில் பெரும் தொகையினர் நாடு கடத்தப்படுதல் இருந்தாலும் மற்றொரு முக்கியமான காரணமும் இருக்கிறது. அதுதான் இந்த தேசிய இனத்தவரை அழித்தொழிக்கும் அரசாங்கத்தின் கொள்கை. நிர்வாகத்தின் மூலமும் தோட்ட டாக்டர்கள் மூலமும் (குடும்பத் திட்டத்திற்குள்ளாக்கும் ஒவ்வொரு தோட்டத் தொழிலாளருக்கும் தோட்ட டாக்டர்களுக்கும் அரசாங்கம் கமிக்ஷன் கொடுக்கிறது) தோட்டத் தொழிலாளர் மத்தியில் குடும்பக்கட்டுப்பாட்டு திட்டத்தை தீவிரமாக அமுல் நடத்தி வருகிறது. இதற்கு நல்ல உதாரணம்:- தங்கக்கெலை (கலாவாக்கெலை பகுதியில்) இங்கு இரு திருமணமாகாத வாலிபர்கள் தோட்ட டாக்டர்களின் தூண்டுதலால் கருத்தடை அறுவைச்சிகிச்சைக்குள்ளான அதிர்ச்சியூட்டும் சம்பவம் நடைபெற்றுள்ளது.

❖ பொருளியல் நோக்கு (மார்ச் 1985. பக். 19) இதனை நிரூபிக்கும் மற்றொரு புள்ளிவிபரத்தை வெளியிட்டது 1974ல் எல்லா இனத்தவர்களிடையேயும்

❖ சனத்தொகை வளர்ச்சி 1973ல் 1000க்கு 20.3 என்பதிலிருந்து1974ல் 18.5 ஆகக்குறைந்தது. இந்திய தமிழர்களின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1973 ல் 14 இலிருந்து 1974ல் 7.1 (சரிபாதி) ஆகக் குறைந்தது என்று குறிப்பிட்டது.

**12.தேசிய இன அடக்குமுறை:-**
மேற்கூறிய சகல துறைகளிலும் மலையக மக்கள் மீது தேசிய இன அடக்குமுறை பிரயோகிக்கப் படுவதை உணரலாம். அவற்றைவிட நேரடியாக வெளிப்படையான தேசிய அடக்குமுறைக்கும் இவர்கள் முகங்கொடுத்து வருகிறார்கள். அவற்றை இனிப்பார்ப்போம்.



**77 ஆகஸ்ட் வன்செயலின் போது இரத்தினபுரிப் பகுதியில் ஒரு தோட்ட கமிட்டித் தலைவராக விருந்த சிங்களத் தொழிலாளி ஒருவர் மலையக தமிழ்ப்பெண் ஒருத்தியை கற்பழிக்க முயன்ற தனது தம்பியை தனது கையால் வெட்டிய உணர்ச்சி ததும்பும் சம்பவம் ஒன்று நடைபெற்றது.**

**வன்செயல்கள்:-**
1977,81 வன்செயல்கள், பிரவுண்லோ சம்பவம், டெல்டா சங்குவாரித் தோட்டச் சம்பவம் போன்ற காட்டுமிராண்டித்தனங்களை அதிகமிங்கே விபரிக்கத்தேவையில்லை. சில விபரங்களை மாத்திரம் தருவோம்.


❖ 1977ஆகஸ்ட் வன்செயல்களை போரா? சமாதானமா? என்று இந்த அரசாங்கமே உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்தியது. 1790க்கு மதிகமான மலையக மக்களை அகதிகளாக்கிய இச்சம்பவத்தை விசாரிக்க சன்சோனிகொமிஷன் நியமிக்கப்பட்டது. தமது உடமைகள் அனைத்தையும் இழந்து அநாதரவான இம்மக்களுக்கு எந்த ஒரு நிவாரணத்தையும் அரசாங்கம் வழங்கவில்லை மாறாக இந்த அகதிகளுக்கு மனிதாபிமானத்துடன் நிவாரண உதவி வழங்கிய தொண்டர் ஸ்தாபனங்களை அழித்தொழித்து வருகிறது.

❖ 1981வன்செயல்கூட அரசாங்கத்தின் பொறுப்பில்லாத, ஒரு சில அமைச்சர்களினால் திட்டமிட்டு தூண்டப்பட்டது என்பது யாவரும் அறிந்த இரகசியம். இதன் பின்னணியில் இருந்ததாக பெரிதும் பொதுமக்களால் சந்தேகிக்கப்படும் இரத்தினபுரி எம்.பி. புஞ்சி நிலமே அவர்கள் இது தொடர்பாக ஒரு அனுதாபச்செய்தியை பின்னர் வெளியிட்டார் அண்மையில் இப்பகுதியில் நடைபெற்ற வன்செயலின் போது ஒருவரைக் கொலை செய்து அவரின் இரத்தத்தைக் குடித்ததாகவும்,

தொடரும்...

# அஜந்தாவின் மரணம் மூடிமறைக்கப்படுமா?

**செல்வா**



இராணுவத்தில் தமிழ்ப்பெண்கள் இணைந்து தமது பயிற்சியை நிறைவு செய்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் தமது வாழ்வில் ஏற்பட்ட கஷ்டத்தின் நிமிர்த்தம் தொழிலுக்காக இராணுவத்தில் இணைவதாக தெரிவிக்கின்றனர். வெளியே சொல்லமுடியாத கஷ்டங்களில் அகப்பட்டு தமது வாழ்நாளை நகர்த்துகின்றனர். இந்த சூழலில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராமத்திலிருந்து இராணுவத்தில் இணைந்து கொண்ட பெண் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவமானது பெரும் பரபரப்பை உருவாக்கியிருக்கின்றது.

கடந்த வைகாசி மாதம் 22ம் திகதி பிரசாத் அஜந்தா என்ற குடும்பபெண் இராணுவத்தில் இணைந்தார். இவருக்கு 6 வயதில் ஒரு மகளும் உள்ளார். கடந்த மாதம் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது அஜந்தாவுக்கு சுகயீனம் உண்டானதாக தெரிவித்திருக்கும் இராணுவத்தினர், பின்னர் இவரை யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்திருந்ததாகவும் அங்கே சிகிச்சை பலனின்றி அஜந்தா உயிரிழந்ததாகவும் தெரிவித்திருக்கின்றனர். அஜந்தாவின் உடல் அவருடைய கணவர் மற்றும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு இராணுவ மரியாதைகளுடன் செல்வபுரம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த வருடத்தின் நிறைவிலும் இந்த வருடத்தின் ஆரம்பத்திலும் இராணுவத்தில் பல பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த நிலையில் இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சி அலைகளை உண்டாக்கியிருக்கிறது. யாழ் காங்கேசன்துறை 7வது மகளீர் படையணியில் உள்வாங்கப்பட்ட பயிலுனர் அஜந்தாவின் மரணத்தில் மர்மம் இல்லையென யாழ் மாவட்ட கட்டளைத் தலைமையகத்தின் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் மல்லவராட்சி தெரிவித்துள்ளார். அஜந்தா மரணம் தொடர்பாக வெளியான செய்திக்கு விளக்கம் அளிக்கும் வகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது வடமாகாணத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு கூடிய சம்பளத்தை வழங்கி சிறந்த ஒரு எதிர்காலத்தை உருவாக்கி கொடுப்பதற்கே இராணுவத்தில் இணைக்கின்றோம்.

வடக்கில் 523 இளைஞர் யுவதிகள் இராணுவ தொண்டர் படையணியில் இணைந்துள்ளனர். அவர்களைத் தவிர காங்கேசன்துறை 7 ஆவது மகளீர் படையணியில் 44 பேர் உள்வாங்கப்பட்டனர். 44 பேரில் ஒருவர் தான் 23 வயதான அஜந்தா. இந்த 44 பேருக்கும் பெரியளவில் இராணுவப் பயிற்சிகள் வழங்கப்படவில்லை இவர்களிற்கு சாதாரண உடற்பயிற்சிகள் மரியாதை செலுத்துதல் போன்ற பயிற்சிகளே வழங்கப்பட்டன. இவர்களிற்கான பயிற்சிகள் 4.6.2014 அன்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 26.7.2014 ம் திகதி தனக்கு வயிற்றுவலி ஏற்பட்டுள்ளதாக உயர் அதிகாரிகளுக்கு அஜந்தா தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து பலாலியில் உள்ள இராணுவ ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது அஜந்தாவிற்கு புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில்

> **அஜந்தாவின் மரணம் சம்பந்தமாக பல கேள்விகள் மக்கள் மத்தியில் எழுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு பதில் இல்லாமலே இந்த சம்பவம் மறைந்து போனாலும் இந்த சூழலில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.**

14.08.2014 இல் சிகிச்சை பலனின்றி சாவடைந்தார். ஊடகங்களில் வெளியானது போன்று இவரது சாவில் மர்மம் இல்லை. இராணுவ பயிற்சியின் போது கடுமையாக தாக்கப்படவில்லை. அஜந்தாவிற்கு புற்றுநோய் இருப்பது மருத்துவ பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளவில்லை எனவும் புற்றுநோய் இருப்பதனால் உடனடியாகவே இராணுவ மரியாதையுடன் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டதாக தெரிவித்தார். வடமாகாணத்தில் இராணுவத்தில் இணைக்கப்படும் பெண்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுவதில்லை என்பதும் இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ள பெண்கள் இராணுவத்திற்கல்ல. தொண்டர் படைக்கே இணைக்கப்படுகின்றார்கள் என்பதும் இராணுவம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் போது ஊடகவியலாளர்கள் கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளனர்.

அதாவது இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்படும் பெண்களுக்கு உடல் தகுதி பார்க்கப்படுகின்றதா? இந்தக் கேள்விக்கு பதிலளித்த இராணுவத்தினர் உடல் தகுதியாக கண், மூக்கு, வாய் மற்றும் கை மணிக்கட்டு ஆகியனவே பார்க்கப்படுவதாக கூறியிருக்கின்றனர். மீண்டும் ஊடகவியலாளர்கள் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தனர். அதாவது உயிரிழந்த பெண்ணுக்கு உரிய ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கப்படுமா என அதற்கு பதில் அளித்த இராணுவத்தினர் வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்தனர். ஏனெனில் வடக்கில் இராணுவத்தில் சேர்க்கப்படும் பெண்கள் இராணுவ தொண்டர் படைக்கே சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள். எனவே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படாது என பதில் அளித்தனர். மேலும் அஜந்தா மரணமடைந்தமைக்கு புற்றுநோயே காரணமென யாழ் போதனா வைத்தியசாலைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

அஜந்தா கருப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே சிகிச்சை பெற்று வந்தார். இப்புற்றுநோய் உடலுக்குள் பரவி குடலில் தடைகளை ஏற்படுத்தியதாலேயே மரணம் சம்பவித்தார். அஜந்தாவின் மரணத்துக்கு வேறெந்த காரணமும் கிடையாது. இவருடைய உடலை பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை என்று மேலும் தெரிவித்துள்ளார். ஆனாலும் அஜந்தாவின் மரணம் தற்போது இராணுவத்தில் உள்ள இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு ஒரு பாடத்தினை விட்டுத்தான் சென்றுள்ளது. இணையங்களில் மரணம் பற்றி பல விமர்சன கட்டுரைகளும் செய்திகளும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. மருத்துவப் பரிசோதனை செய்யாமல் எந்தவொரு நாட்டிலும் படைக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறாது என்பது நியதி வெளிப்படையுண்மை இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு காப்புறுதி இல்லை என்றும் கூறினர்.

அதற்கு அப்பால் இவ்வாறு படையில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு ஓய்வூதியமும் இல்லை என்று அடுக்கடுக்காக கூறினர்.

> **அஜந்தாவின் மரணம் தற்போது இராணுவத்தில் உள்ள இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு ஒரு பாடத்தினை விட்டுத்தான் சென்றுள்ளது.**

இந்த உண்மை எல்லாம் இப்பெண்ணின் மரணம் தந்த உண்மைகள்.

இப்போது எங்களுக்குள் உள்ள கேள்வியெல்லாம் சிறிலங்கா படையில் சிங்கள சகோதர சகோதரியினருக்கும் இப்படியான நடைமுறை இருக்குமா?

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அஜந்தா இராணுவ பயிற்சி எடுக்க அனுமதி கொடுத்தது யார்? புற்றுநோய் காரணமாக அஜந்தா சிகிச்சை பெற்றவள் என்று யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி.பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார். சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது தான் புற்றுநோய் அஜந்தாவை பிடித்திருப்பது தெரிந்ததாக இராணுவம் தெரிவித்தது. மருத்துவ சான்றிதழ் இல்லாமல் படையில் ஒருவரை இணைக்க முடியுமா?

ஏற்கனவே புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர் என்ற படியால் உடல் கூற்று பரிசோதனை தேவையில்லை என்று யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பவானி தெரிவித்துள்ளார். ஏன் உடற்கூற்று பரிசோதனை செய்யவில்லை. வயது போனவர் இயற்கை எய்தினால் கூட உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும் வைத்தியசாலை வட்டாரம் இந்த இளம் யுவதியான அஜந்தாவின் உடலை ஏன் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை. உடலை உடனடியாக அடக்கம் செய்ததன் பின்னணி என்ன இப்படியாக அஜந்தாவின் மரணம் சம்பந்தமாக பல கேள்விகள் மக்கள் மத்தியில் எழுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு பதில் இல்லாமலே இந்த சம்பவம் மறைந்து போனாலும் இந்த சூழலில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

# தமிழ் மாணவர்கள் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் கற்பது பாதுகாப்பானதல்ல

T.J.தமிழ்

அளுத்கம, பேருவளை போன்ற முஸ்லீம்களுக்கு இடையிலான இனவாதப் பிரச்சினைகள் சூடாறும் முன்பே திட்டமிட்ட படி தமிழர் தரப்பிலும் இனவாதத்தை மீண்டும் தூண்டுவதற்கு அரசைச்சார்ந்த துணைக்குழுக்கள் தயாராகின்றனர். அண்மையில் சப்ரகமுவ பல்கலைக்கழக தமிழ் மாணவன் தாக்கப்பட்டு பின்னர் கைது செய்யப் பட்டமையும் இவ்வாறானதொரு நிலமையை ஏற்படுத்துகின்றது.

2009ம் ஆண்டு போர் முடிவுற்றாலும் மக்கள் இன்றும் பலத்த நெருக்கடிக்குள் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். நில அபகரிப்பு, தொழில், வருமானம், விசாரணைகள், அச்சுறுத்தல்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் என இவற்றுள் அடங்குகின்றன. இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மாணவர்களையும் இலக்கு வைத்து தாக்குவது, பயங்கரவாத விசாரணைகளுக்கு உட்படுத்துவது தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு இனவாதத்தை தூண்ட அரசு முனைகின்றது.

### சப்ரகமுவ தாக்குதல்

சப்ரகமுவ பல்கலைக்கழக விடுதிக்குள் நள்ளிரவில் உள்நுழைந்த இனந் தெரியாத சிலர் கொச்சைத்தமிழில் பல வாசகங்களை எழுதி ஒட்டிவிட்டு, தமிழ் மாணவன் மீது தாக்குதலை மேற்கொண்டனர். பிளேட், கூரிய ஆயுதங்கள் போன்றவற்றாலும் கயிற்றால் கழுத்தை நெரித்தும் சித்திரவதை செய்து தாக்கிய பின்னர் தப்பிச்சென்றிருக்கின்றனர். இங்கு எழுதி ஒட்டப்பட்ட வாசகங்கள் மாணவர்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த தாக்குதல் சம்பவம் மூலம் சிங்களப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களை விரட்டியடிப்பதற்காகவே சிலர் முனைகின்றனர் என்பது இதன் மூலம் தெரியவருகின்றது.

**இரண்டாவது அரசாங்கம் தனது சிங்கள மயமாக்கல் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்பிரதேசங்களிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு சிங்களமாணவர்களையும் அனுப்பிவருகின்றது. குறிப்பாக மருத்துவபீடம், விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம், என்பவற்றிற்கு சிங்கள மாணவர்களும் அனுப்பப்படுகின்றனர். சில பீடங்களில் தமிழ் மாணவர்களை விட சிங்கள மாணவர்களே அதிகமாக உள்ளனர். தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து தமிழ் மாணவர்கள் வெளியேறினால் சிங்கள மாணவர்களும் தமிழ்ப்பிரதேச பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேற முற்படுவர். இது சிங்கள மயமாக்கல் திட்டத்தை பாதிக்கும் என அரசாங்கம் நினைக்கின்றது.**

### மறுநாள் பொலிஸின் பதில்

தாக்குதல் நடைபெற்ற மறுநாள் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களின் ஊடாக பல்கலைக்கழக நிர்வாகத்திடம் தெரிவித்தனர். ஆனால் பல்கலைக்கழக நிர்வாகம் எதையும் பொருட்படுத்தவில்லை. அதன் பின்னர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருக்கின்றனர். இதன்போது பொலிஸார் கூறுகையில் இந்தச் சம்பவம் தமிழ் மாணவர்கள் மூலமே இடம்பெற்றிருக்கின்றது. தாக்குதலை நடத்தியவர்களும் தாக்குதலுக்கு உள்ளானவர்களும் தமிழ் பல்கலைக்கழகங்களுக்கு விரும்பி செல்வதற்காகவே இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக தெரிவித்திருக்கின்றனர்.

### மாணவன் கைது

பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தபின்னர் மறுநாள் 3ம் வருடம் கல்விகற்கும் நெடுங்கேணி சின்னடம்பனைச் சேர்ந்த நிரோசன் என்ற தமிழ் மாணவன் கைது செய்யப்பட்டு புலனாய்வாளர்களால் நான்காம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டார். இரண்டு நாட்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டார். அன்றிலிருந்து குறித்த மாணவனையும் அவரது தொலைபேசி அழைப்புக்களையும் பின் தொடர்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

### குணமடைந்த மாணவனுக்கு திடீரென மேலதிக சிகிச்சை

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் பலாங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் குறித்த மாணவன் குணமடைந்து விட்டதாகவும் வீடு திரும்பலாம் என்றும் வைத்திய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இதற்காக மாணவன் வீடு செல்வதற்கு தயாரான போது சிறிது நேரத்தில் முடிவை மாற்றி மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். இதன் பின்னணி என்ன? பாதிப்புக்கு உள்ளான மாணவன் பக்கமே பிரச்சினைகளை திருப்புவதற்கான ஒரு உத்தியாகவே இதனை கருதமுடிகின்றது.

### டக்ளசின் எழுச்சிகரமான அறிக்கை

தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் எந்த பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து அறிக்கைகளை வெளியிட முன்வராத டக்ளஸ் மாணவன் தாக்குதல் நடைபெற்ற மறுநாளே ஒரு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். இது ஒரு கேலிக்கையாகவே இருந்திருக்கின்றது. காணி அபகரிப்பு, பாலியல் துஷ்பிரயோகங்கள், காணமல் போதல், அச்சுறுத்தல்கள், தமிழர் நிலங்களில் சிங்கள குடியேற்றங்கள் போன்ற எந்த சம்பவத்திற்கும் அறிக்கை வெளியிட முன்வராத டக்ளஸ் இந்த சம்பவத்திற்கு மட்டும் அறிக்கை வெளியிட எப்படி துணிவு வந்தது. இந்த அறிக்கையின் ஊடாக சுதர்சனின் பெற்றோர் டக்ளஸை நோக்கி செல்லவும் மீண்டும் ஒரு அறிக்கையை வெளியிடவும் வழிவகுத்துக்கொடுத்திருக்கின்றது.



### தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையின் உறக்கம்

சிங்களப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களுக்கு இடம்பெறும் எந்த அநீதிகளையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமை கருத்தில் கொள்வதில்லை. உழைப்பு, வருமானம், வெளிநாட்டுப்பயணங்கள், சுகபோக வாழ்க்கை என்ற சிந்தனையின் ஊடாகவே பயணிக்கின்றனர். தேர்தல் காலங்களில் மாத்திரமே மக்கள் மத்தியில் செல்லும் இவர்கள் தேர்தலுக்குப் பின்னர் மறைந்து போய்விடுவார்கள். தமிழ் மாணவன் தாக்கப்பட்டமை தொடர்பில் வடக்கு முதலமைச் சரோ அல்லது சம்பந்தனோ எந்த அறிக்கைகளையோ நடவடிக்கைகளையோ மேற்கொள்ளவில்லை.

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அறிக்கை

சப்ரகமுவ தாக்குதல் சம்பவம் தொடர்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் கண்டன அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணை தேவை, இந்த தாக்குதல் சம்பவத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன். பாதிக்கப்பட்ட மாணவனுக்கு பக்கபலமாக நாம் எப்போதும் நிற்போம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### யாழ்.பல்கலைக்கழத்தை காணவில்லை

தமிழர்களின் உயிர் மூச்சாகக் காணப்படும் யாழ்.பல்கலைக்கழகம் சக தமிழ் மாணவன் தாக்கப்பட்டது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காதது வேதனையளிக்கின்றது. வெறுமனே ஆசிரியர் சங்கத்தொடு இணைந்து மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை மாத்திரமே வெளியிட்டிருந்தது.

### சுதர்சன் கைது

இரத்தினபுரிவைத்தியசாலையில்மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சந்திரகுமார் சுதர்சன் சிகிச்சை முடிவடைந்து வெளியே வந்தபோது பலாங்கொட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத விசாரணை பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்காக கொண்டுசெல்லப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்ட மாணவன் பல நாட்கள் நான்காம் மாடியில் வைத்து விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவன் மீதான தாக்குதல் தொடர்பாக சிலரின் கருத்துக்கள்

### யாழ்.பல்கலைக்கழக மாணவி –

இன ரீதியிலும் நாங்கள் பின் தள்ளப்பட்டிருக்கின்றோம். அதே வேளை கல்வி ரீதியிலும் நசுக்க பலர் முனைகின்றனர். எமது பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் இருப்பதை மறந்து போனா ர்கள். இங்கு கல்வி கற்கின்ற சிங்கள மாணவர்களுக்கு முழு சுதந்திரமும் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களுக்கு எந்த சுதந்திரமும் இல்லாமல் அச்சத்துடனே கல்வியை தொடர்கின்றார்கள். இவ்வாறு தொடர்ந்து தமிழ் மாணவர்கள் தாக்கப்படுவார்களேயானால் சிங்கள மாணவர்கள், தமிழ் மாணவர்கள் என தனித் தனியான பல்கலைக்கழகங்கள் அமைக்க வேண்டிய தேவை ஏற்படும்.

### பேராதெனிய பல்கலைக்கழக மாணவர்கள் –

இனங்களுக்கிடையே பிரச்சினைகளை தோற்றுவிப்பதற்காகவே அரசாங்கம் மாணவர்கள் மீது தாக்குதல்களைத் தொடர்கின்றது. முதலில் முஸ்லீம்களுக்கு இடையே பிரச்சினைகளை ஏற்படுத்தியது தற்போது தமிழ் மக்களிடையே பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு மாணவர்களை பயன்படுத்துகின்றது. இந்த சம்பவம் மூலம் எங்கள் மத்தியிலும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

# நூல் அறிமுகம்


## "எந்தையும் தாயும்" கவிதைகள்

**ஆசிரியர்- ஜெ.செல்வா**
**விலை- 250**
**வெளியீடு- நோபிள் பிறின்ரேர்ஸ்,யாழ்ப்பாணம்.**

**"மரணத்தின் ருசி மிகத் தெரிந்தவர் களுள் ஒருவர் செல்வா" - நிலாந்தன்**

ஈழத்தில் நவீன படைப்பாளிகள் பலர் இன்றைய எழுத்துலகத்திற்குள் கால் பதித்திருக்கின்றார்கள். இவர்களது ஒவ்வொரு படைப்புக்களும் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் நினைவூட்டுவதாகவே அமைந்திருக்கின்றன.

இவ்வாறு தோன்றும் நவீன எழுத்தாளர்களுக்குப் பின்னால் துன்பங்களை சுமந்த துயரக்கோடுகள் தெரிகின்றன. இதனால்தான் அவர்களது படைப்புக்கள் ஒவ்வொன்றும் யதார்த்தத்தைப் பேசுகின்றன. இந்த சூழ்நிலையில் தோன்றிய படைப்பாளிகளில் ஒருவர்தான் எழுத்தாளர் ஜெ.செல்வா. இவர் கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்டவர். இறுதி யுத்தக் காற்றையும் சுமந்து இன்று படைப்புலகிற்குள் கால் பதித்திருக்கின்றார். இதனால் இவரது கவிதைகள் ஒவ்வொன்றும் யுத்தத்தின் வாசனையையே பேசுகின்றன..




2009ம் ஆண்டுக்குப் பின்னர் தன் வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களையும் அதற்கு முன்னர் ஏற்ப்பட்ட அனுபவங்களையும் கவிதைகள் ஊடாகப்பேசுவதே "எந்தையும் தாயும் "என்ற கவிதை நூலாகும். இந்த நூலில் பேசும் கவிதைகள் அனைத்தும் ஏக்கம், எதிர்பார்ப்பு என்பவற்றை கருப்பொருளாகக் கொண்டன. 169 பக்கங்களைக்கொண்ட இவ் நூல் பல துயரக் கவிதைகளைத் தாங்கியிருக்கின்றது. அத்தோடு நூலாசிரியரை பற்றி நிலாந்தன் அவர்களின் வாழ்த்துரையும் முன் பகுதியை மெருகூட்டுகின்றன.

"மரணத்தின் ருசி மிகத் தெரிந்தவர்களுள் ஒருவர் செல்வா போரின் இறுதிக்கட்டத்தில் சாவினால் சப்பித்துப்பப் பட்டவருள் அவரும் ஒருவர்.மரணத்தின் ருசி மிகத் தெரிந்தவர்க்கு வாழ்வின் ருசியும் மிகத் தெரியவரும்"- நிலாந்தன்

"எந்தையும் தாயும்" நூலின் முதல் கவிதை கடந்த காலத்தை நினைவூட்டுவதாகவே அமைந்திருக்கின்றது

"எங்க வீட்டுச் சொத்து
அண்ணா லீவுல வந்தாக்கா
வீடே கலகலக்கும்
எங்க வீட்டு நாய்கள் கூட..." - (அமர்ந்த சிலை) இந்த கவிதையின் ஊடாக கடந்த கால நினைவுகளை செல்வா கண்முன்னே கொண்டு வந்து நிறுத்திய தன்மை பாரட்டுக்குரியதே.

- TJ -

---

**சுப்பிரமணிய....**

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையும் மாறத்தொடங்கியது. தற்போது பல வல்ல ரசுகளும் பல பிராந்திய வல்லரசுகளும் இணைந்து உலகத்தை ஆதிக்கம் செலுத்தும் பல் அரங்க உலக ஒழுங்கு உருவாகியுள்ளது. சீனா, ரஷ்யா, இந்தியா, பிறேசில், தென்னாபிரிக்கா இணைந்த பிரிக்ஸ் அமைப்பின் தோற்றம் இதனைத் துரிதப்படுத்தியது. சிரியா, உக்ரைன் நெருக்கடிகள் இதனையே வெளிக்காட்டின. அங்கு அமெரிக்காவினால் தான் நினைத்த வெற்றியை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

சிரியாவில் அமெரிக்கா வளர்த்த கிளர்ச்சிக்குழுவே அமெரிக்க நலன்களுக்கு எதிரியாகி சிரியா, ஈராக் இணைந்த அகன்ற இஸ்லாமிய நாடு ஒன்றினை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவினால் பயிற்சி அளிக்கப்பட்ட ஈராக் படைகள் ஆயுதங்களை கைவிட்டு சிதறி ஓடுகின்றன. இந்நிலையில் கவனிப்பாரற்று விடப்பட்ட குர்திஸ்தான் பிரச்சினையை அமெரிக்கா கையிலெடுக்க முனைகின்றது. குர்திஸ்தான் என்கின்ற தனிநாட்டை உருவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த புதிய உலக ஒழுங்கிற்குள் தனக்குரிய இடத்தை பிடிப்பதற்கு இந்தியா முயல்கின்றது. இதற்கு சீனாவுடன் நல்லுறவு தேவை என்பதால் அதனை கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றது. இதில் இந்தியா இரண்டு இலக்குடன் செயற்படுவது போலத்தெரிகின்றது. ஒன்று ஐ.நா பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்புகளில் ஒன்றாக இந்தியாவையும் இணைத்துக்கொள்வது. இந்தக்கனவு இந்தியாவிற்கு நீண்டகாலமாகவே இருக்கின்றது. சீனாதான் அதற்கு தொடர்ச்சியாக தடையாக நின்றது. இறுதியாக நடைபெற்ற பிரிக்ஸ் அபிவிருத்தி வங்கி அமைப்பது தொடர்பான சீனாவின் விருப்பத்திற்கு இந்தியா பச்சைக்கொடி காட்டியதால் ஐ.நா பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினராக இந்தியா சேர்வதற்கு சீனாவும் பச்சைக்கொடி காட்டும் சூழல் உருவாகியுள்ளது.

இரண்டாவது இலக்கு மேற்குலகின் கட்டுப்பாடுகளில்லாத துரித அபிவிருத்தியை இந்தியாவில் மேற்கொள்ளுதல் ஆகும். உலக வங்கியின் உதவியுடன் அபிவிருத்தியை மேற்கொண்டால் அதன் கட்டுப்பாடுகள் அதிகரிக்கும் இதனை இந்தியா விரும்பவில்லை. புதிய பிரிக்ஸ் அபிவிருத்திவங்கி இந்தியாவிற்கு கைகொடுக்கப் போகின்றது. அவ்வங்கி பெருந்தொகையான இந்திய முதலீட்டிற்கு உதவப் போகின்றது. வங்கியின் முதலாவது தலைவராக இந்தியர் ஒருவரே பதவி வகிக்க இருப்பதால் இந்த அபிவிருத்திச் செயற்பாடு இலகுவாகலாம்.

பிராந்திய மட்டத்தில் இரண்டு இலக்குகளை இந்தியா கொண்டிருப்பது போலத் தெரிகின்றது. ஒன்று அயல் நாடுகளுடன் நல்லுறவுகளைப்பேணுவது. துரித அபிவிருத்திக்கு நாட்டில் அமைதி நிலை அவசியம் என்பதால் நாடுகளுக்கிடையேயான முரண்பாடு களை சற்று அடக்கி வாசித்து உடன்பாடான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்புகின்றது. சீனாவுடன் அதற்குள்ள முரண்பாடு சீனா - இந்திய எல்லைப்பிரச்சனையும், அயல் நாடுகளில் சீனா காலூன்றுகின்றது என்ற பிரச்சனையும் தான். எல்லைப் பிரச்சனையை சற்று அடக்கி வாசித்தாலும் அயல்நாடுகளில் சீனாவின் ஆதிக்கத்தை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பது தான். இந்தியாவுக்குள்ள முக்கிய பிரச்சனை. பிரிக்ஸ் அமைப்பின் துணைகொண்டு இந்தியாவிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சில சமநிலைப்படுத்தல்களைக் கொண்டு வர இந்தியா முயலலாம்.

இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகளுக்கு பிரிக்ஸ் மாநாட்டில் சீன அதிபரும் பச்சைக்கொடி காட்டியுள்ளார். சீனா - இந்திய வர்த்தகப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பதாக கூறியுள்ளார். எதிர்காலத்தில் இந்திய இறக்குமதியின் சீனாவில் அதிகரித்துச் செல் வதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இந்திய - சீன உறவுகள் வளர்ந்தால் அயல் நாடுகளில் சீனாவின் பிரசன்னம் இந்தியாவிற்கு பெரிய பிரச்சனையாக இருக்கப்போவதில்லை.

இதனால் சீனாவை வைத்து மகிந்தர் ஆடும் ஆட்டமும் நின்றுபோய்விடும். மகிந்தரின் ஆட்டத்தை நிறுத்த வைத்து தனது பொறிக்குள் இலங்கையை மாட்டுவதற்கும் இந்தியா முயற்சிக்கும்.

தற்போது இந்தியா மகிந்தருக்கு சொல்லும் செய்தி எனது செல்வாக்கின்கீழ் வந்தால் சர்வதேச விசாரணையில் உன்னோடு நிற்பேன் என்பதே.

தற்போது எழும் கேள்வி இந்தப்புதிய சூழல் தமிழ் அரசியலில் என்ன பாதிப்புகளைக் கொண்டுவரும்? என்பதாகும். பல பாதிப்புகளைக் கொண்டுவரலாம். அதில் ஒன்று சர்வதேசமயப்பட்டுள்ள தமிழர் விவகாரத்தை இந்தியா பிராந்திய மட்டத்திற்குள் முடக்கமுயற்சிக்கலாம். இதற்கான அழுத்தங்கள் தமிழ்த்தரப்பிற்கு வரக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. தமிழ்த்தரப்பு புதுடில்லியின் செல்வாக்கிற்குள் வரவில்லையென்றால் இலங்கை அரசுடன் தானும் இணைந்து தமிழ் மக்களை ஒடுக்கப்பார்க்கும். சர்வதேச மட்டங்களில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் வரும்போது இலங்கையை பாதுகாக்க துணைநிற்கும். தமிழ் மக்களா? இலங்கை அரசா? என்று தெரிவுவரும் போது இலங்கை அரசினையே இந்தியா தெரிவு செய்யும். இது விடயத்தில் அதற்குள்ள பிரச்சினை தமிழ்நாடுதான்.

இரண்டாவது சீனாவிற்கு எதிராகத்தான் இந்தியா - அமெரிக்க கூட்டு உருவானது. இன்று சீனா இந்திய உறவு வளர்வதனால் இந்தியா-அமெரிக்க கூட்டு பெரியளவிற்கு தேவையற்றதாகிவிடும். சர்வதேச மட்டத்திலும் பிரிக்ஸ் அமைப்பைத்தான் இந்தியா முதன்மைப்படுத்தப் போகின்றது. அங்கும் கூட அமெரிக்க உறவு அதிகளவில் தேவைப்படாது. மறுபக்கத்தில் அமெரிக்கா இலங்கையில் செல்வாக்கு செலுத்துவதை இந்தியா ஒருபோதும் விரும்பாது. அதனை எப்படியாவது தடுக்கப்பார்க்கும் தற்போதய சர்வதேச விசாரணையையும் தன்னால் முடிந்த வரை பலவீனப்படுத்தவே முயற்சிக்கும்.

இந்த நகர்வுகளில் இந்தியாவிற்கு பிரச்சனையாக இருக்கப்போவது இரண்டு விடயங்கள். ஒன்று இனப்பிரச்சினையும் அது தொடர்பில் தமிழ்நாட்டில் எழப்போகின்ற எழுச்சிகளும். இரண்டாவது தமிழர் விவகாரம் சர்வதேச மயப்பட்டிருப்பது. முதலாவது விடயத்தில் 13வது திருத்தத்தினை நடைமுறைப்படுத்தும்படி இந்தியா இலங்கை அரசிற்கு அழுத்தங்களைக் கொடுக்கலாம். அதேவேளை தமிழ் நாட்டில் ஜெயலலிதாவிற்குள்ள வழக்குகளைக் காட்டி அவரை சற்று அடக்கி வைத்திருக்கலாம். ஆனால் இந்த இடத்தில் தான் இந்தியாவின் நகர்வுகள் சறுக்குவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

தமிழ் மக்களுக்கு குறைந்தளவில் அதிகாரங்களைக் கொடுப்பதற்குகூட மகிந்தர் அரசு தயாராக இருக்கப்போவதில்லை. மறு பக்கத்தில் ஜெயலலிதா தமிழர் விவகாரத்தை தூக்க முன்வராவிட்டால் கருணாநிதி தூக்கமுயற்சிப்பார். ஜெயலலிதா அதற்கு இடம் கொடுக்கமாட்டார். தன் கைக்கு வந்ததை இழப்பதற்கு அவர் தயாராகவில்லை. தற்போது காங்கிரஸ் வாசன் கூட காங்கிரசினை காப்பாற்றுவதற்கு தமிழர் பிரச்சினையை தூக்கத் தொடங்கியிருக்கின்றார். ஐ.நா விசாரணைக்குழு இந்தியா வர விசா வழங்க வேண்டும் எனக் கேட்டிருக்கின் றார்.

முன்னரும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தனது நலன்கள் நிறை வேற்றப்பட்டவுடன் இந்தியா தமிழ் மக்களை கைவிட்டது. தமிழர்களை ஒடுக்க முனைந்தது. அதுவே இந்தியாவின் கையை விட்டு தமிழர் விவகாரம் சர்வதேச மட்டத்திற்கு செல்வதற்கு காரணமாகியது. அந்த முயற்சியை இந்தியா மீண்டும் செய்தால் இந்தத் தடவை தமிழர் தாயகம் மட்டுமல்ல, தமிழகமும் இந்தியாவின் கையை விட்டுச்சென்றுவிடும்.

இரண்டாவது விடயமான சர்வதேச மயப்படுத்தலை பொறுத்தவரை இந்தியா நினைத்தாலும் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வு வரும்வரை சர்வதேச மயப்படுத்தலை நிறுத்திவிட முடியாது. தமிழ் டயஸ்போறா அதனைத் தொடர்ந்து செய்துகொண்டேயிருக்கும்.

சர்வதேச மயப்படுத்தலை நிறுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டால் தமிழர் விவகாரம் இந்தியாவின் கையை விட்டு மீண்டும் சென்றுவிடும்.



# சிங்களவரோடு சேர்ந்து வாழ்ந்தால் மட்டுமே உயிரவாழ முடியும் னெ பிரசன்ன விதானகே கூறுகின்றாரா?

ஒரு கலைப்படைப்பை ஒற்றைத் தன்மையுடன் வெறும் கலை ரசனையோடு மட்டுமே பார்க்காமல் அதனுள் இருக்கும் பல்வேறு நுட்பமான பார்வைகளை பன்முகத்தன்மையுடன் அவதானிக்க வேண்டும் என்று புகழ் பெற்ற கலை இலக்கிய கோட்பாடான பின்நவீனத்துவம் சொல்கிறது.

தற்போது சிங்கள மொழிப்படமான பிரசன்ன விதானகேயின் படத்தை முன்வைத்து காரசாரமான விமர்சனப் பார்வைகள் நடந்து கொண்டிருக்கின்றன. படைப்புக்கு உள்ளே நுட்பமாகக் கட்டமைத்துள்ள அரசியல் விடயங்களை முன்வைக்கின்றனர்.


இலங்கையின் மலையகப்பகுதியில் அமைந்துள்ள தமிழர்கள் வசிக்கும் இடத்தில் கதை. தமிழீழப் போரினால் தனது குடும்பத்தை இழந்த செல்வி எனும் தமிழ்ப்பெண் உறவினர் வீட்டில் வாழ்கிறாள். தனது வாழ்வியலுக்காக தன்னிடமுள்ள சிறுசிறு தங்க நகைகளை அடகு வைத்து வாழ்கிறாள். அடகுக் கடை நடத்தும் சரத்ஶ்ரீ என்னும் சிங்களவன் அவளின் நிலையை உணர்ந்தாலும் தனது வணிக நோக்கிலேயே இருக்கிறான். ஒரு கட்டத்தில் அவளுக்கு ஒரு கிழவரை மணமுடித்து வைக்க உறவினர் வீட்டில் ஏற்பாடு செய்கிறார்கள். அது பிடிக்காமல் அங்கிருந்து வெளியேறும் செல்வியை தான் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்கிறான் சரத்ஶ்ரீ. அவளும் சம்மதிக்க திருமணம் நடக்கிறது. சந்தோஷமாகப் போகும் அவளது வாழ்வில் தனது கணவன் முன்னால் ராணுவ வீரன் என்கிற விடயம் தெரிகிறது. தனது இனத்தையும் தனது குடும்பத்தையும் நிர்க்கதியாக்கிய சிங்கள ராணுவம் சார்ந்த அவனோடு இணைந்து வாழமுடியாமல் தவிக்கிறாள். இறுதியில் அவனை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் விலகியும் போக முடியாமல் இருக்கும் கையறு நிலையில் தற்கொலை செய்து கொண்டு இறந்து போகிறாள்.

இச் சிங்களப்படத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான அதீத மன அழுத்தம் சார்ந்த குற்ற உணர்வுகளை இனத்தின் மீதும் மொழியின் மீதும் பொருத்திப் பார்த்திருக்கிறார். விதானகே இது ஒரு குற்ற உணர்வுகளின் அழகியல் சார்ந்த படம் என்கிறார். குற்ற உணர்வுகளின் அழகியல் வெறுமனே ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நிகழ்வது என்பது வேறு. இனம் சார்ந்த மொழி சார்ந்த மதம் சார்ந்த கதாபாத்திரங்களுக்கு நிகழ்வது என்பது வேறு என்பதை உணரத்தவறிவிட்டார் இயக்குனர்.

தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றமும் அதன் பண்பாடுகளும் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருக்கும் இச் சூழலில் அது குறித்த விமர்சனமேதுமின்றி அப்படி ஏதும் நடக்காதது போன்ற ஒரு தோற்றத்தை படம் முழுக்க கட்டமைக்கிறார். படத்தின் பின்புலத்தில் திரும்பிய புறமெங்கும் கந்த சஷ்டிக் கவசமும் தமிழ் கும்தலக்கடி பாடல்களும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. உட்டாலக்கிடி படங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. போரினால் பெரியளவில் தமிழர்களிடையே மனரீதியாக பாதிப்பு எதுவும் இல்லை. பொருளாதார ரீதியிலான பாதிப்பு வேண்டுமானால் உள்ளது என்கிற தோற்ற மாயையை தொடர்ந்து உருவாக்குகிறார்.

தமிழ்ப்பெண்ணின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்கும் சிங்கள இராணுவ வீரன் என்னும் குறியீடு முழுக்க முழுக்க மேலோட்டமான வெகுஜனப்பார்வை கொண்டது. இதைக் குற்றவுணர்வுகளின் அழகியல் என்கிறார். ஒரு இனத்தை மிகக் கொடூரமாகக் கொலை செய்த பிறகு குற்றவுணர்வுகளுடன் கூடிய சில சில நல்லிணக்கங்களையும் சமரசங்களையும் செய்யும் காட்சிகளை உருவாக்குவதற்குப் பெயர் தான் குற்றவுணர்வுகளின் அழகியலா?

. நாங்கள் ஆயிரம் அண்டுகளுக்கு



முன்பே பிறந்து வாழ்ந்து வந்த எங்களது நிலத்தை அபகரித்துவிட்டு எங்களுடன் வந்து ஒன்று கலவுங்கள் என்று அழைக்கிறீர்களே. நாங்கள் எப்படி வர முடியும்? எங்களது நிலம், பண்பாடு, வாழ்வு எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு நிர்வாணமாக இருக்கும் எங்களை அழைக்கிறீர்கள் உங்களுக்கு தேவை சக மனிதன் அல்ல. ஒரு அடிமை தான் என்று வெள்ளையர்களை நோக்கிக் கேள்வி கேட்ட செவ்விந்தியத் தலைவரான டேன்ஜார்ஜின் கடித வரிகள் இங்கு ஈழத்தமிழருக்கும் பொருந்தும் தானே.

இவர்களுக்குத் தேவை நல்லிணக்கம் அல்ல. பல லட்சம் மக்களைக்கொன்று குவித்ததற்கான நியாயம் இனப்படுகொலைகளுக்கான தார்மீகப் பொறுப்பு. செங்குருதி பாய்ந்த முள்ளிவாய்க்காலுக்கான தீர்ப்பு.

சரி நவீன அறிவுஜீவிகள் சொல்வது போல இந்தப் படத்திலுள்ள அரசியலை விடுத்து கலையை மட்டுமே பார்க்கலாம்.

முதலில் கதாபாத்திரங்களின் கட்டமைப்பே மிகப்பெரும் முரண்பாடாக இருக்கிறது. போரிலிருந்து விடுபட்டு எளிய வாழ்க்கை வாழ விரும்பும் நாயகன் தேர்ந்தெடுப்பது மிக மோசமான அடகு வியாபாரத்தை அதில் ஏதாவது எளிய மக்களுக்கு உதவி செய்கிறாரா என்றால் நிச்சயமாக இல்லை. இரக்க மனநிலையில் உள்ள தனது மனைவியைக் கூட எப்போதும் அடகு வைக்கப்படும் பொருளின் உண்மையான மதிப்பில் கால் பங்கை மட்டும் சொல், ஒருநாள் தாமதமானாலும் ஒரு மாதத்திற்குரிய வட்டியை வாங்கு என்று மாற்றுகிறான். இதுவும் ஒருவகை ராணுவ மனநிலை தான்.

இரக்கமற்ற உணர்வுகள் ஏதும் இல்லாத ஒருவன் சட்டென இரக்கப்பட்டு தமிழ்ப்பெண்ணுக்கு வாழ்வு தருவதற்கான வலுவான காட்சியமைப்புகள் இல்லை. மேலும் அவன் தொடர்ந்து WWE என்கிற மிகமிக கொடூரமான மல்யுத்தப்போட்டியை படம் முழுக்க ரசித்துக் கொண்டேயிருக்கிறான். ராணுவ உளவியலின் நீட்சி அது சட்டென காட்சிகள் மாறி புத்தருக்கு முன் தீபம் ஏற்றி மனமுருக வணங்குகிறான்.

அவளுக்கு வீட்டில் வயதான முதியவருக்குத் திருமணம் செய்துவைக்க முயற்சி நடக்கிறது. அதிலிருந்து தப்பித்து வெளியே வந்து ஒரு சிங்களவனைத் திருமணம் செய்து கொள்கிறாள். எனில் அங்கு காட்டப்படுவது ஒரு சிங்களவரோடு கூடி வாழ முடியும் ஆனால் தமிழரோடு வாழ முடியாது என்பதற்கான கருத்தியலா? முதியவரோடு திருமணம் என்கிற கருத்தியலை விடுத்து சிங்களவர் மேல் அன்பு ஏற்பட்டு திருமணம் செய்து கொள்வதாக காட்சிகள் அமைத்தால் கலையின் புனிதத்துவம் கெட்டுவிடுமோ?

தமிழிச்சியை திருமணம் செய்த பிறகு முரண்பாடு ஏற்பட்ட உடன் தனது துப்பாக்கியை எடுத்து மறைத்து வைத்து விடுகிறான். காலில் விழுந்து மன்னிப்பு கேட்கும் ஒருவனால் என்னைக் கொல்வது தான் உன் பிரச்சனைக்கு தீர்வு என்றால் சுட்டுத்தள்ளு என்று துப்பாக்கியை நீட்டியிருக்க வேண்டிய கவித்துவமான கதைப் போக்கு கள்ளத்தனம் கொண்டு எடுத்து மறைத்து வைக்கச் சொல்கிறது. எவ்வளவு நெருக்கமானவராக இருந்தாலும் தமிழர்களிடம் உஷாராகத்தான் இருக்க வேண்டும் என்கிற கருத்தைச் சொல்கிறது. இக்காட்சி இவை எல்லாமே அக்காட்சிகள் உணர்த்தும் கருத்தியல் தான்.

தமிழிச்சி சரளமாக சிங்களத்தில் உரையாடுகிறாள். ஆனால் சிங்களவன் தமிழ் பேசுவதில்லை. இது தான் பேரினவாதம் என் மொழிகள் நீ பேசப்பட வேண்டும் என்னும் reconciliation. அவன் அவள் மீது எல்லையற்ற காதல் கொண்டு தமிழ்மொழி கற்றுக்கொள்வது போல ஒரு காட்சி வைக்க முடியாதா? அப்படி வைத்தால் இக்கதையின் கலைப்புனிதத்திற்கு பங்கம் நேர்ந்துவிடுமா?

அவள் சேர்ச்சுக்கு போய்விட்டு திரும்பும் போது 'உன் கடவுள் உனக்கு என்ன தந்தார்?' என்று கேட்கிறான் அவன். 'நான் தான் பாதுகாப்பு கொடுத்தேன்' என்று சொல்லிவிட்டு புத்தரை வணங்கச் செல்கிறான். உனது கடவுள் பயனற்றவர். எனது கடவுளை ஏற்றுக்கொள் என்றாகியது அக்காட்சி.


இந்தச் சூழலில் இருந்து தப்பிக்க இந்தியாவின் தமிழ்நாட்டுக்குப் போவது தான் ஒரே தீர்வாக முன்வைக்கிறார். விதானகே அப்படியானால் ஈழத்தமிழர்களின் நலனுக்காக முன்நிற்கும் நாடு என்பது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்குகிறார். சமீபத்தில் அதிக மதிப்பெண் பெற்ற தமிழ் ஈழப்பெண்ணிற்கு அகதி என்ற காரணத்துக்காக மருத்துவப்படிப்பு மறுக்கப்பட்ட அலட்சியம் தோய்ந்த பூமிக்கு வரத்தான் அவள் ஆசைப்படுகிறாள். வெளிநாடு வாழ' இந்தியர்களுக்கு செஇட ஒதுக்கீட்டில் மருத்துவ இடங்களை அள்ளிக்கொடுக்கும் அரசு, தனது மொழி பேசும் அகதியை அலட்சியப்படுத்தும் புண்ணியபூமி தான் அவளுக்கு ஆறுதல் கொடுக்குமென எண்ணுகிறாள். ஏன் கனடா, லண்டன் போன்ற நாடுகளுக்கு போவது பற்றி அவள் கனவு காணவில்லை.

தமிழ்நாட்டுக்கு வர முடிவெடுத்தவுடன் தனது அடகுக்கடையை விற்றுவிட நினைக்கிறான் அவன். அதை வாங்குபவர் மிடுக்கும் செல்வந்தத்தன்மையும் கொண்ட இஸ்லாமியர்.

அந்தக் கடையை வேறு ஒரு சிங்களவர் வாங்கிக் கொள்கிறார் என்று ஒரு காட்சி அமைத்தால் கதையின் ஓட்டமோ கதையின் தன்மையோ எங்கும் மாறுபடப் போவதில்லை. அந்த காட்சியை காட்டாவிட்டால் கூட ஒன்றும் இல்லை. வலிந்து திணிக்கப்பட்ட இஸ்லாமியப்பாத்திரம் அது. இதன் அரசியல் என்ன?

augest sun (ஆகஸ்ட் சண்) என்கிற தனது படத்தில் விடுதலைப்புலிகளால் இஸ்லாமியர்கள் வெளியேற்றப்படுவதை விமர்சனமாக முன்வைத்திருக்கும் விதானகே தற்போது சிங்களப் பேரின வாதிகளால் தாக்குதலுக்குள்ளாகும் இஸ்லாமியர்களுக்காக எங்குமே குரல் எழுப்பவில்லை. என்பதும் நினைவு கொள்ளத் தக்கது.

ஆனால் சிங்களவரோடு சேர்ந்து வாழ்ந்தால் மட்டுமே உயிர் வாழ முடியும். இல்லையெனில் சாவதைத் தவிர வேறு வழியில்லையென்ற விமர்சனம் இதற்குள் கட்டமைகிறது.




# தாகம்

கணப்பொழுதுகள்
நேரம் காலம் பார்க்காமல்
எந்த வேளையும்,
கழுத்து வரை வந்து
மூச்சு முட்டி
அந்தரத்தில்
உயிர் பிரியாமல்
உயிர் பிரிவது போல்
நகர்கிறது.

நெருடல்களுக்கு அப்பால்
என்ன செய்ய முடியும்
போராடுவதைத் தவிர
காணாமல் போதல்
பயங்கரவாத தடைச்சட்டத்திற்குள்
அடங்குமா?
கைதுகள்
பயங்கரவாத
தடைச்சட்டத்தின் மூலம்
நிறைவேறுமா?
இலங்கையில்
தமிழர்களுக்கு கூடுதல்
தண்டனைகள்
இருந்தால் தண்டனை
எழுந்து நின்றால் தண்டனை
உறங்கினால் தண்டனை
நடந்தால் தண்டனை
ஓடினால் தண்டனை
தண்டனைகள் நீள்கிறது.

எண்ணிய சிறைக்கம்பிக்குள்ளே
நாள்கள் அதிகம்.
செய்த குற்றம் குறைவு.

இரத்தத்தால் ஈழம் வரைய
முடியாமல் போன போது
கண்ணீரால் முடியுமா?

பயங்கரவாதம்
தமிழர்கள் புலிகள்
போன்ற வார்த்தைகள்
முள்ளிவாய்க்காலோடு
போர் நின்றும்
இன்றும் பேசப்படுகின்றன.

தமிழ் சிறுமி கடற்படையால் கற்பழிப்பு
தமிழ் மாணவன் தாக்கப்பட்டு
தன்னைத்தானே தண்டித்ததாக
வாக்கு மூலம்.

வீரர் இறந்த மண்ணில்
கோழைகள் பிறக்கிறார்கள்
மண்பற்று பேசுகின்றோம்
மொழிப்பற்று பேசுகின்றோம்.
ஒவ்வொரு அடியும்
நிதானமாகப் பார்த்தும்
செயலற்று இருக்கின்றோம்
முடியவில்லையா
பிறகு எதற்கு வாய்ப்பேச்சு

புளுத்துப்போய் நாறின
வாய்களை மூடுங்கள்
புலி சொன்ன உபதேசம்
செயற்பாட்டில் இருந்தது.
அந்த உபதேசத்தை
தனிப்பட்டவர்களின்
செயற்பாட்டிற்காக
மாற்றாதீர்கள்
புலித்தோல் மூடின நரியாக
வாழாதீர்கள்

போட வெளிக்கிட்டால்
வோட்டு மட்டுமல்ல
இந்த மண்ணில் நடந்த
சம்பவங்களை மறக்காதீர்கள்

சொகுசு வாகனங்கள்
எங்களுக்குத் தேவையில்லை
எங்களுக்கான நிலங்களை
தாருங்கள்
எமது நிலங்களில்
சிறு குடிசை கட்டி
நாலு மரங்கள் நட்டு
நாம் வாழ்வோம்

படிப்பறிவு இல்லாத
ஏழை இளைஞர்கள்
ஆயுதம் தூக்கிப் போராடினர்கள்
என்று சொன்ன வாய்கள் இன்று...
அரசு எம்மை ஏமாற்றிவிட்டது என்று
சொல்லுகின்றன.
தேர்தலில்
சொன்ன வார்த்தைகளை
எதிர்வரும் தேர்தலில் சொல்லக்கூடாது.

**- பிறைவாணன்**



# மணி காட்டிக் கொடுத்தது!

அந்தக் கொலைகாரர்கள்
இந்த உடல்களை
எங்கே புதைத்தார்கள்
என்று
எவருக்கும் தெரியாது
ஆனால்
சிந்தப்பட்ட குருதியை
மீளப்பெற
மக்களின்
மீளெழுகைக் காலத்தில்
அவர்கள் உயிர்த்தெழுவார்கள்

நகரத்து மையத்தில்
அந்தக் குற்றம் நிகழ்ந்தது

அந்த மக்களின்
தூய குருதியை
முட்பற்றைகள் மறைக்கவில்லை
பம்பாவின் மண்ணாலும்
அது உறிஞ்சப்படவில்லை

எவரும் இந்தக் குற்றத்தை
மறைக்கவில்லை.

நகரத்து மையத்தில்
அந்தக் குற்றம் நடந்தது!

**- பப்லோ நெருடா (சிலி)**
**- தமிழில் வின்சென்ற் புளோறன்ஸ்**

# சூரசங்காரம்

மீண்டும்
சூரன்
பல முகத்தோடு
உயிர்த்தெழுவான்
விடாதே அவனை.
பிடி...,
அடி...,
நொறுக்கு...,
கொல்...
கொன்றேவிடு.
மீண்டும்
சூரன்
பல முகத்தோடு
உயிர்த்தெழுவான்
விடாதே அவனை:
பிடித்து..,
அடித்து..,
உதைத்து...,
நொறுக்கிக்..,
கொல்..,
கொன்றேவிடு!

**- குப்பிழான் ஐ.சண்முகன்**

சிறுகதை

# ஒரு பிடி மண்

தமிழில்- சிதம்பரம் இரவிச்சந்திரன்
மலையாள மூலம்- சியாமளா ஷூஜா

இவரு எப்பவும் இப்படித் தான். எதையாவது எங்கயாவது வைச்சிட்டு மறந்து போயிடுவாரு.. அப்புறம்... குண்டூசிய கடலில தேடுற மாதிரி தேடுவாரு.. எல்லா சாமான்களையும் இழுத்து கீழே போட்டு ஒரே அமர்க்களம்...

மிருதுளாவுக்கு இதையெல்லாம் பார்க்கும் போதே கோபம் பின்பொத்துக்கொண்டு வரும். அவள் வீட்டின் பின்பக்கம் இருந்த தோட்டத்துக்கு சென்றாள். ஆர்ப்பாட்டம் எல்லாம் ஒருவழியாக முடியட்டும் என்று நினைத்தாள் அவள். அதற்குள் யதுவுடைய குரல் அவளை அழைத்தது.

மிருது.. இங்க வாயேன். இங்க வந்து பாரேன்.

மிருது.. அவளைக் கூப்பிட்டுக்கொண்டிருந்தான். அந்த ஆர்ப்பாட்ட நாடகத்தில் தன்னையும் பங்குகொள்ளச் செய்யத்தான் அவன் கூப்பிடுகிறான் என்பது அவளுக்குத் தெரியும். உள்ளுக்குள் அலையடித்த கோபத்தை கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு உள்ளே போனாள் அவள்.

அட... இதெல்லாம் என்னங்க..? சமையல் ரூம்ல அலுமாரியில் இருக்கிற எல்லா சாமான்களையும் இப்படி கீழே தள்ளி போட்டிருக்கீங்க? நீங்க தேடுறது எதுவா இருந்தாலும் இங்க அது உங்களுக்கு கிடைக்கப்போறது இல்ல..

இத பாரு மிருது... ஆர்ப்பாட்டம் செய்யாத.. இப்ப இத எடுத்த பிறகு தானே தெரியுது. எல்லாம் நம்ம வீட்டு குட்டிப்பிசாசோட வேலை தான். பழைய வாட்டர் பாட்டிலுக்குள்ள மண்ணை வாரிப்போட்டு அலுமாரியில் ஒழிச்சு வைச்சிருக்கிறா.. இந்த மண்ணை தூக்கி எறிஞ்சிட்டு வாட்டர் பாட்டில குப்பைத்தொட்டியில் போடு..

இயந்திரம் போல மிருதுளா அதை வாங்கிக் கொண்டாள். இது தூக்கியெறிறதுக்கு உள்ளது இல்லீங்க.. நான் தான் இத இங்க வச்சது.

வாட்டர் பாட்டிலை அவள் தன் நெஞ்சத்தோடு வைத்து அதில் இருந்து கொஞ்சம் மண்ணை எடுத்து தன் கையில் வைத்தான். அவள் மனம் குக்கூரல் இட்டது.

இது எனக்கு வேணும். நான் இல்லாமற்போற காலம் வரைக்கும் நான் இத வைச்சிட்டு தான் இருப்பேன்.

யதுவுக்கு எதுவும் புரியவில்லை. அவன் அலுமாரியில் இருந்த மீதி சாமான்களையும் வெளியில் எடுத்துப்போட்டு கீழ தள்ளுற அவசரத்தில் இருந்தான்.



மிருதுளாவுடைய கண்கள் நனைந்திருந்தது. பல வருடங்களுக்கு முன்னால் தான் இந்த மண்ணை தனக்கென்று சொந்தமாக்கிக் கொண்டது அவளுக்கு ஞாபகம் வந்தது. தன்னுடைய விலை மதிக்க முடியாத இந்த உலகத்தில் தனக்கென்று தான் உயிரோடு இருக்கும்வரை பத்திரமாக பாதுகாக்க வேண்டிய தன்னுடைய பொக்கிஷம்...

அவளுடைய சிந்தனைகள் பின்னோக்கி ஓடின. அம்மா நினைவுகளாக ஆகி ஒரு வருடம் கடந்த பிறகு ஒரு நாள்.. 'அந்தச் சாவி அவள் கையில் கிடைத்தது...

'அப்படி வழக்கமா நடக்கிறது இல்ல.. யதுவும், மற்றவர்களும் டூர் போயிருந்த சமயம் அது.. அவள் அக்கா வீட்டுக்குப் போனபோது அப்பா கொடுக்கச் சொல்லி விட்டுப்போன சாவிதான் அது.

அவளுக்கு திடீரென்று தோன்றியது.

ஒரு தடவை அங்க போயிட்டு வந்தாதான் என்ன? கல்யாணமாகி பிறந்தவீட்டுக்கு என்று எப்பயாவது போயிருக்கோமா? புகுந்த வீட்டில சூழ்நிலை அப்படி.. எவ்வளவு தான் ஆசைப்பட்டாலும் ஒரு விசேஷத்துக்கு கூட போயிட்டுவர என்னால முடியல.. அப்புறம்.. அம்மா செத்தப்பதான் சடங்குகள் முடியற வரை நான் அங்க இருந்தது..'

வேகமாக மிருதுளா புறப்பட்டாள். பஸ்ல போனபோது ஒவ்வொன்றாக அவளுடைய ஞாபகத்துக்கு வந்தது.

பதினாறு வருஷம் ஓடிப்போயாச்சு.. என்னை அங்கயிருந்து பிடுங்கி புகுந்தவீட்டோட நட்டு வச்சிட்டு.

பஸ்... டாப்பில் இறங்கியபோது முத்து குறத்தி அவளை பார்த்தவுடன் கட்டிப்பிடித்துக் கொண்டு அழத்தொடகினாள்.

எவ்வளவு நாள் ஆச்சு உன்னை பாத்து...? அம்மா போய்ச்சேர்ந்த பத்தி எனக்கு தெரியலம்மா... ஒரு நாள் வந்தப்பதான் எனக்கு தெரிஞ்சுது.. மூச்சே நின்னுபோயிடும்போல ஆயிடுச்சு எனக்கு.. எவ்வளவு அன்பா இருந்தாங்க அவுங்க என் மேல..?

வீட்டில அம்மி கொத்த வரும் பொம்பளைதான் முத்து குறத்தி. அப்புறமும் எதை எதையோ பேசிக்கொண்டிருந்தாள் முத்து. அவளுடைய வார்த்தைகள் வழியாக அம்மா முழு நிலவாக குளிர்மழை பொழிந்தாள் மிருதுளாவுக்கு.

அம்மா எப்பவும் அப்படித்தான். எல்லார்கிட்டயும் அன்பா இருக்கிறது.. பெரியவங்க சின்னவங்க கிடயாது. முத்து காலையில வந்தா சாயங்காலம்தான் கிளம்பிப்போறது... அம்மியையும், ஆட்டுக்கல்லையும் கொத்தும் போது ஊர் செய்திகள் எல்லாத்தையும் கதகதயா சொல்லுவா அவ.. அப்புறம் சாப்பாடு.. அது முடிஞ்சப்புறம் சமையலறையில் ஒரு மூலையில ஒரு துண்டப் போட்டுக்கிட்டு இருப்பா முத்து.. அம்மா போட்டுக்கொடுக்கிற டீதான் அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும்..

மிருதுளா விடைபெற்றபோது முத்துவுக்கு காசு கொடுத்தாள். வாங்க மறுத்துவிட்டாள் முத்து. கட்டாயப்படுத்தி கைக்குள் வைத்து திணித்தாள் மிருதுளா.

படிக்கட்டுகளை தாண்டிதான் வீட்டுக்குள் போகவேண்டும். தரைமட்டத்தில் இருந்து கொஞ்சம் உயரத்தில் தான் வீடு இருந்தது. வேலியை பார்க்கமுடியாத அளவுக்கு காட்டுச்செடிகள் காடு போல மண்டிக்கிடந்தன.

காலை எடுத்து வைத்தபோது யாரோ அவளை கீழ தள்ளி மிதித்த மாதிரி மிருதுளாவின் உடல் நடுங்கியது. அவளுடன் வந்திருந்த மூன்றாம் வகுப்பில் அப்போது படித்துக் கொண்டிருந்த அவளுடைய மகளுக்கு அந்த வீட்டுச்சூழல் நன்றாகவே பிடித்திருந்தது. அவள் புதுஇடத்தை பார்க்கும் சந்தோஷத்தில் அங்குமிங்கும் ஓடினாள். மிருதுளா படிகளை தாண்டி உள்ளே போனாள்.

வீட்டை சுற்றிலும் நிறைய மரங்கள் இருந்தன. தோட்டம் நிறைய பூத்துக்குலுங்கிய பூக்களும், கீழே விழுந்திருந்த காய்ந்த இலைகளும் மண்ணையே பார்க்கமுடியாத அளவு தரையில் மெத்தை விரித்திருந்தன.

மனிதவாடையே இல்லாத ஏதோ ஒரு பேய் குடியிருக்கும் வீட்டுக்குள் நுழைந்ததைப்போல அந்த வீடு காட்சி தந்தது. தேவி வாழ்ந்த இடமாக இருந்தது. அது கொஞ்சநாள் முன்பு வரை..

வேடிக்கையாக அப்பா அடிக்கடி சொல்லுவார்.. அடுத்த தேர்தல்ல அம்மாவையும், இரண்டு பொண்ணுங்களையும் துடைப்பம் சின்னத்தில் போட்டியிட வைக்கணும்...

காக்கா குருவிகிட்ட கூட பேசுறவங்கங்கற துனால ஒரு ஒட்டுகூட வெளியே போகாது...

அம்மா அந்த அளவுக்கு எல்லோரிடமும் சகஜமாக பழகியிருந்தாள். வீட்டையும் சுற்றுப் புறத்தையும் துடைத்துவிட்டு பளிங்கு போல பார்த்துப் பார்த்து ஒரு செல்லப்பிள்ளையைப் போல பாவித்து போற்றிவந்தாள் அம்மா. மிருதுளா வாசலைத்திறந்து உள்ளே நுழைந்தாள்.

பழைய காலத்தின் ஒரு சிரிப்பின் துளி கூட இங்கே இந்த திண்ணையில் இப்போது ஒளிந்திருக்கவில்லை என்று தோன்றியது அவளுக்கு.. விசும்பல்கள் வெளியே வராமல் உள்ளுக் குள்ளேயே கெட்டியாக அழுகையை அடக்கி பிடித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாள் அவள். நேராக அம்மாவுடைய அறைக்கு போனாள். அம்மாவுடைய கட்டில். இதில் தான் அம்மா கடைசியில் இருந்து உயிரை விட்டதும்...

தூங்கிக்கொண்டு இருக்கிறாள் என்று நினைத்துக்கொண்டார்கள். ஒருநாள் கூட யாருக்கும் எந்தக் கஷ்டத்தையும் கொடுத்தது இல்லை அம்மா.. வீட்டுக்கு வந்திருந்த யாரோ ஒரு விருந்தாளியுடன் பேசிக்கொண்டிருந்த போது தான் நெஞ்சுவலி ஏற்பட்டது. அது அம்மாவுக்கே தெரியாது. யாரிடமும் எதுவும் சொல்லாமல் இதே கட்டிலில் கொஞ்சநேரம் இருந்தாள். மிருதுளா நினைத்துக்கொண்டாள்.

(தொடரும்...)

## வாசகர் கருத்து

**தாழ்த்தப்பட்ட மக்களின் கதைகளை பேச முன் வாருங்கள்**

மக்கள் மத்தியில் இனங்காணப்படாத பத்திரிகை அல்லது தலைமறைவாகியிருக்கும் பத்திரிகைகளில் ஒன்றே இது நம்தேசம் பத்திரிகை ஆகும். ஒரு சந்தர்ப்பத்தில் மாதப்பத்திரிகை என்ற படியால் அவ்வாறு இருக்கலாம் என்று கருதுகிறேன். பத்திரிகையின் அம்சங்களை வரவேற்கிறேன். அத்தோடு இங்கு பிரசுரிக்கின்ற செய்திகள் அனைத்தும் சூடாறிய செய்திகள் அல்லது பிந்திய செய்திகளாகவே காணப்படுகிறது. செய்திகளில் மாற்றத்தை ஏற்படுத்தவும்

கட்டுரைகள் அனைத்தும் ஒரே பார்வையில் நோக்கப்படுன்கிறது. இதனை தவிர்த்து தாழ்த்தப்பட்ட மக்களின் கதைகளை பேச முன் வாருங்கள். எல்லா பத்திரிகைகளும் இந்த அம்சத்தை பேச முன்வருவதில்லை. உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவித்து அடையாளப்படுத்தினால் பல படைப்புக்களை இனங் காணமுடியும். எல்லோரும் ரசிக்கும் படியான ரசனைப் பத்திரிகையாக வெளிவர முயற்சி செய்தால் மற்றைய பத்திரிகைகளை முந்திச் செல்லலாம்.

**நெடுங்கேணியூர்**
**தினேஷ்**

**அரசியற் கட்டுரைகளுக்கே முக்கியத்துவம்.**

தமிழ்ப் பத்திரிகைகளில் உண்மை நிலையை எடுத்துக்கூறுகின்ற பத்திரிகையாக இது நம்தேசம் அமைந்திருக்கிறது. ஆனால் மக்கள் இந்த உண்மை நிலையை அறிந்து கொள்ள முயற்சிக்கின்றார்கள் இல்லை. இதை மக்களிடம் தெரிவிக்க முயற்சி செய்யவும். அரசியல் சார்ந்த கட்டுரைகள் சாதாரண மக்களால் விளங்கிக் கொள்ள கடினமாக உள்ளது. மொழிப்பிரயோகங்கள் சாதாரணமாக வாசிக்கும் ஒரு வாசகனால் விளங்கிக் கொள்ள முடியாத வகையில் இருக்கிறது. இதனை மாற்றி அமைக்கவும்.

எல்லா கட்டுரைகளுமே ஏதோவொரு விதத்தில் அரசியற் கட்டுரைகளாகவே இருக்கிறது. எனவே சமூகத்தில் உள்ள பிரச்சனைகளையும் கட்டுரைகளாக மற்றவர்களுக்கு தெளிவுபடுத்த முன்வாருங்கள்

**செல்வரூபன்**
**யாழ் பல்கலைக்கழகம்**

**வாசகராகிய உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.**

**முகவரி :**

**ஆசிரியர்**
**"இது நம்தேசம்"**
**இல-43**
**3ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்**

# இரும்புப் பெண்
# இரோம் ஷர்மிளா



மணிப்பூர் மாநிலத்தில் பெண் கவிஞரும் மனிதஉரிமைப் போராளியுமான இரோம் ஷர்மிளாவின் உண்ணாவிரதப்போராட்டம் கேள்வி கேட்பாரற்றுக் கிடக்கிறது. மணிப்பூரில் இரும்புப் பெண் என அழைக்கப்படும் இவர் 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி பிறந்தார்.

2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02ஆம் திகதி இம்மால் நகரத்துக்கு ஏழு கிலோமீற்றர் தூரமுள்ள மல்லோம் என்ற ஊரில் பேரூந்துக்காக காத்திருந்த 10 அப்பாவிப்பொதுமக்களை இந்திய இராணுவம் சுட்டு படுகொலைசெய்தது. இந்த நிகழ்வு பின்னாளில் 'மல்லோம் படுகொலை' என மனித உரிமை தன்னார்வலர்களால் குறிப்பிடப்படுகின்றது. ஷர்மிளா இந்தப் படுகொலைக்கு எதிராக தனது 28 ஆவது வயதில் இருந்தே உணவு மற்றும் நீர் உண்ணாப்போராட்டத்தை மேற்கொண்டார் .

இவர் அருணாச்சலபிரதேசம், அஸாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகலாந்து, திரிபுரா ஆகிய மாநிலங்களில் 60 வருடங்களுக்கு மேலாக நடைமுறையிலுள்ள ஆயுதப்படைசிறப்பு அதிகார சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அவரின் உண்ணாவிரதம் என்ற அறிவிப்பு இந்திய அரசியலில் ஒரு சாதாரண அறிவிப்பாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் ஷர்மிளாவின் இப்போராட்ட அறிவிப்பு என்பது இவ்வளவு உண்மையானதாக இருக்கும் என்று ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கவில்லை.

வழக்கமான அறிவிப்போடு நின்றுவிடும் போராட்டம் இல்லை என்று உணர்ந்தவர்கள் இந்திய தண்டனைச் சட்டம் 309 இன் பிரிவின் படி இரோம் ஷர்மிளாவுக்கு ஓராண்டு தண்டனை அளித்து இம்பாவில் உள்ள ஜவஹர்லால் நேருவை மருத்துவமனையில் சிறை வைத்தனர். மூக்கின் வழியாக அவருக்கு வலுக்கட்டாயமாக உணவு செலுத்தப்பட்டது. ஓராண்டு முடிந்ததும் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையானதும் நேரடியாக உண்ணாவிரதப் பந்தலுக்குச் சென்றும் போராட்டத்தை தொடங்கி விடுவதும் மீண்டும் அவர் கைது செய்வதுமாக நாட்கள் நகர்ந்தன. ஷர்மிளா தொடர்ந்தும் இன்று வரை போராடிக்கொண்டிருக்கிறார். உலகத்தில் இப்படி ஒரு நீண்ட போராட்டத்தை மன தைரியத்துடன் நடத்தி இருப்பவர்கள் யாருமே இருக்கமுடியாது. கடந்த 14 ஆண்டுகளாக மருத்துவமனையின் அறையொன்றே சிறையென ஆன ஷர்மிளா தன் நிகழ் காலத்தை இழந்துவிடுகிறார்.

மணிப்பூர் மக்கள் கொடுமையான சட்டத்துக்கு எதிராக பல ஜனநாயக முறையான போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். பல பாலியல் வன்புணர்வுகளை இராணுவத்தினர் மணிப்பூர் இளம் பெண்கள் மீது நடத்தினர். பல பெண்கள் கொல்லப்பட்டனர். இதனை அடுத்து மணிப்பூரில் இராணுவ முகாமிற்கு முன்னாள் பெண்கள் பலர் கூடி நிர்வாணமாக நின்று போராட்டத்தை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கொடூரமான சட்டத்திலிருந்து மக்கள் மீள வேண்டும் என்பதற்காகவே ஷர்மிளா போராடுகிறாள். இதனாலேயே ஷர்மிளாவுக்கு பல நாடுகள் பல விருதுகளை வழங்கி கௌரவித்தனர். 2007 இல் தென்கொரிய அரசு வழங்கிய மனித உரிமைகளுக்கான விருதும் கடந்த செப்டெம்பர் மாதம் அவருக்கு வழங்கப்பட்டது. கடந்த 19.08.2014 அன்று ஷர்மிளா மீதான வழக்கை ரத்து செய்த நீதிமன்றம் அவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டது. பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்தால் ஆயுதப் படையினருக்கான சிறப்புச் சட்டத்தை ரத்துசெய்ய கோரிக்கை விடுவேன் என்று ஷர்மிளா தெரிவித்துள்ளார். எனினும் அவர் மீண்டும் கடந்த 22ஆம் திகதி உண்ணாவிரதம் இருக்க முற்பட்டபோது கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**- அபிஷா**

### தமிழ்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலைத் திட்டத்தை அறிவித்து முன்னெடுக்கவுள்ளது. அத்துடன் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் சாட்சியமளிப்பதற்கும் எம்மாலான உதவிகளை வழங்கவுள்ளோம். அதுவே இறந்த உறவுகளுக்கு நாம் செய்யும் கடமையுமாகும்.

**தடுப்பதற்கான அதிகாரமில்லை**

சர்வதேச குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக சாட்சியமளிப்பதையோ செயற்படுவதையோ இலங்கையில் உள்ள சட்டங்களே ஒருபோதும் தடுக்கவில்லை. மக்கள் முன்வந்து பொய்களை சொல்வதற்கு தயாராகவில்லை. மேலும் பொய்யான சாட்சியமளிக்கவேண்டிய அவசியமுமில்லை. கடந்த காலத்தில் காணப்பட்ட அரசாங்கங்கள் போன்று தற்போதைய அரசும் மக்களை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தி அவர்களின் கடமையை செய்யாது தடுப்பதற்குரிய நடவடிக்கையைத் தான் மேற்கொள்கின்றார்கள். உண்மையைக் கூறுவதை தடுப்பதற்கான எந்த அதிகாரமும் அரசாங்கத்திற்கு இல்லை. அதற்காக மக்கள் அச்சமடைந்து தமது கடமைகளிலிருந்து விலகவேண்டிய அவசியமுமில்லை.

**ஏற்றுக்கொள்ளமுடியாது**

அண்மையில் காணாமல்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச நிபுணர்குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது. இது சர்வதேச விசாரணையின் அழுத்தங்களை குறைப்பதற்காகவே ஆகும். அத்துடன் கடந்த காலத்தில் தென்னிலங்கை அரசுகள் இராணுவத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்துவதை ஒருபோதும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. அதற்காக பல்வேறு ஆணைக்குழுக்களை நியமித்து திசைதிருப்பும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்கள். தற்போதும் அவ்வாறே ஆணைக்குழுக்களை நியமித்து விசாரணைகளை முன்னெடுக்கின்றார்கள்.

குற்றமிழைத்து குற்றவாளிக்கூண்டில் நிற்கவேண்டிய தரப்பு நியமிக்கும் ஆணைக்குழுக்களையோ அல்லது அவர்களின் விசாரணைகளையோ எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். தற்போதைய அரசாங்கம் மட்டுமல்ல ஆட்சிப்பீடத்திற்கு வரும் எந்தவொரு பெரும்பான்மை அரசாங்கம் நியமிக்கும் உள்நாட்டு ஆணைக்குழுக்களின் விசாரணைகளை ஏற்றுக் கொள்ளமுடியாது. அவற்றில் ஒரு போதும் நியாயம் கிடைக்கமாட்டாது.

**இணைந்து செயற்படத்தயார்**

தமிழ் மண்ணில் இனவழிப்பு நடந்துள்ளது என்பது எமது மாற்றமில்லாத தெளிவான நிலைப்பாடு. இதனை அடிப்படையாக வைத்தே இதற்கு நீதி வேண்டி எமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம். ஒரு இனம் அழிக்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு பாதிக்கப்பட்ட தரப்பின் சாட்சியங்களின் பங்களிப்பு மிக அவசியமானது. தற்போது கூட சர்வதேச விசாரணையின் மூலம் பாதிப்புக்குள்ளான எமது தரப்புக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் என்பது எமது பாரிய எதிர்பார்ப்பாகும். அதனடிப்படையில் இங்கு இனவழிப்பு நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியங்கள் அளிக்குமாறு கோருகின்றோம். அந்தவகையில் இங்கு இனவழிப்பு நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொண்டு பொதுவேலைத்திட்டத்தில் செயற்பட ஏனைய தரப்புக்கள் முன்வரும் பட்சத்தில் நாமும் ஒத்துழைப்புக்களை வழங்கத்தயாராக உள்ளோம் மாறாக இக்கருத்தை மறுதலிக்கும் தரப்புக்களுடன் ஒருபோதும் இணைந்து செயற்பட முடியாது என்றார்.

### தேசியம்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)


இதெல்லாம் குறிப்பிட்ட தேசிய உணர்ச்சிக்குத் தலைமை தாங்கும் அமைப்பு அல்லது கட்சியின் ஜனநாயக உள்ளடக்கத்திற்தான் பெருமளவுக்குத் தங்கியிருக்கின்றது. அந்தக் கட்சியிடம் இல்லாதது அது முன்னெடுக்கும் அரசியலிலும் இருக்காது.

இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே தமிழ்த் தேசியத்தையும் பார்க்க வேண்டும். இந்த விளக்கத்தின் அடிப்படையில் இறந்த காலத்தையும் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும். அதிலிருந்து பாடங்களைக் கற்கத் துணிய வேண்டும்.

தேசியத்திற்கும் ஜனநாயகத்திற்குமிடையிலான பிரிக்கப்பட முடியாத வேர்நிலை உறவு குறித்து தமிழில் மிக அரிதாகவே நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் 1999இல் மு. திருநாவுக்கரசு எழுதிய நூலைத் தமிழ்த் தேசியர்கள் அவசியம் வாசிக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய புலமையாளன் வரதராஜனின் இறுதிக் கிரிகையின்போது...




நெடுங்கேணியில் அறவொளி நிலைய திறப்பு விழா



நைனாமடு மக்கள் சந்திப்பின்போது




சுகாதார ஊழியரின் பணி புறக்கணிப்பு போராட்டத்தின் போது

இவ்விதழ் இல.43, 3ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 01.09.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.